

# நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன்

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக்குழு

நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன்

# நயினை
# ஸ்ரீ நாகபூசணி அம்மன்

## [கட்டுரைகள்]


வாகீச கலாநிதி, சித்தாந்த பண்டிதர்

**கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்,** M.A., Ph.D.

*முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,*

*சப்ரகமுவ பல்கலைக்கழகம்*

பதிப்பாசிரியர்

**எஸ். வை. ஸ்ரீதர்**

*முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை*

*சப்ரகமுவ பல்கலைக்கழகம்*



**கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக்குழு**

2013

நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன்

எழுதியது: கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்

பதிப்பாசிரியர் : எஸ். வை. ஸ்ரீதர்

பதிப்புரிமை © 2013, கனகசபாபதி நாகேஸ்வரன்

வெளியீடு: கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக்குழு

அச்சு: குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 06

Nayinai Sri Naakapusani Amman

by Kanagasabapathy Nageswaran

Edited by S.Y. Sirithar

First edition © 2013, Kanagasabapathy Nageswaran

*Published by* Kanagasabapathy Nageswaran Felicitation Committee

*Printed by* Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo - 06, Tel. - 011 2364550

# அணிந்துரை

**பேராசிரியர் கலாநிதி வி. சிவசாமி**
*ஓய்வு பெற்ற பேராசிரியர், சமஸ்கிருதத் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறைச் சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளரும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வழிவழி அறங்காவலர்களில் ஒருவருமான கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் 'மணிபல்லவம், நாக வம்சம், நாக வழிபாடு, நயினா தீவு என்பன குறித்த ஆய்வுகளுக்கான வரலாற்றுச் சான்றுகளும், மூலாதாரங்களும்' எனும் தலைப்பில் ஒரு தனி ஆய்வுக் கட்டுரையினை (Mono graph) த் தமது மணிவிழாக் கட்டுரைக் களஞ்சியத்திலே வெளியிட்டுள்ளார். இன்னும் பல கட்டுரைகளையும் இணைத்துள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டினை அடுத்துள்ள பிரதான சப்த தீவுகளில் ஒன்றாக நயினாதீவு திகழ்கிறது. ஏனைய தீவுகள் போலவே இதுவும் சமய ஞானம் தமிழ் முதலியவற்றிற்குச் சிறப்பான ஓரிடமாகும். இது இந்து சமயத்திற்கும், பௌத்தத்திற்கும் புகழ்பெற்ற புண்ணிய பூமியாகும். இந்து சமயத்தைப் பொறுத்த மட்டில் தென்னாசியாவிலுள்ள புகழ்பெற்ற சக்தி பீடங்களில் ஒன்றாக இங்கு விளங்கும் ஸ்ரீ நாகேஸ்வரி அம்மன் ஆலயம் தொன்மையும் திருவருள் பாலிக்கும் தனிச்சிறப்பும் வாய்ந்ததாகும்.

இக்கட்டுரையிலே கூறப்படும் விடயங்கள் அனைத்தும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புள்ளவை. பழந்தமிழர் வரலாறு, சமயம், பண்பாடு முதலியன பற்றிப் பல திறப்பட்ட அறிஞர்கள், ஆர்வலர்கள் எழுதியுள்ள கிடைக்கக்கூடிய பிரசுரங்களைத் தமது நுண்ணாய்வுத் திறன் கொண்டு ஆராய்ந்து கட்டுரையாசிரியர் நன்கு எழுதியுள்ளமை பாராட்டற்குரியதாகும். ஆங்காங்கே புதிய தகவல்களையும், விளக்கங்களையும் ஆசிரியர் கூறத் தவறிலர். எடுத்துக் காட்டாக, முதலாம், இரண்டாம் பக்கங்களிலே பழந் தமிழரின் செழுமையான வெளிநாட்டு வர்த்தகம் பற்றிக் குறிப்பிடுகையில் கடல் வாணிபத்திலுள்ள பேராபத்துப் பற்றிச் சிலப்பதிகாரம் கூறும் உவமை, புறநானூற்றிலே நடுக்கடலில் செல்லும் கப்பலைக் கோட்டைக்கு ஒப்பிடுதல்

போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலும் பழந்தமிழ் இலக்கியம், குறிப்பாக மணிமேகலை கூறும் 'மணிபல்லவம் நயினாதீவே' எனத் தமிழவேள் இ. க. கந்தசாமி கூறியிருப்பதை முடிவிலே முத்தாய்ப்பாய் ஆசிரியர் கூறியுள்ளமை நன்கு உற்று நோக்கற்பாலதே.

இவ்வாய்வுக் கட்டுரையிலே புலப்படுத்தப்பட்டுள்ள விடயம் குறித்துச் சில கருத்து வேறுபாடுகளிருந்தாலும், ஆசிரியர் தகவல்களைத் திரட்டிச் செம்மையான தமிழ் நடையிலே எழுதியிருப்பது வாசகர்களைக் கவரும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய ஆய்வுக் கட்டுரையினை எழுதுவதற்கு ஆசிரியர் பல்வேறு தகைமைகள் கொண்டுள்ளார். குறிப்பாக, அவரின் சிறப்பான, ஆழமான தமிழ்ப் புலமை, வரலாறு, சமய அறிவு, ஆய்வு நோக்கு முதலியன குறிப்பிடற்பாலன. பிறந்த இடத்துடன் மிகத் தொடர்புள்ள கட்டுரையாயினும், ஆசிரியர் காய்தல் உவத்தலின்றிக் கூறும் விதம் கவனித்தற்பாலது.

நம்முடைய அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய மாணவரும் நண்பருமாகிய ஆசிரியரின் ஆய்வுக் கட்டுரைக்கு அணிந்துரை எழுதுவதில் மிக மகிழ்ச்சியடைகிறேன். இவர் இவ்விடயங்கள் பற்றியும், வேறு பல விடயங்கள் பற்றியும் பல ஆய்வுகள் செய்து அறிவியல் உலகிலே மேன்மேலும் சிறப்படைய எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ நாகேஸ்வரி இவருக்குத் திருவருள் பாலிப்பாராக!

***15.02.2013***

# முன்னுரை

மணிவிழாவைக் காணும் வரையிலாவது எம்மை இந்நிலவுலகிலே வாழ் வித்த எம் குல தெய்வமாம் அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகி நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பாதாரவிந்தங்களைப் பணிந்து தொழுகிறேன். ஈழநாடு, வீரகேசரி, தினக்குரல், தினகரன் பத்திரிகைகளிலே வெளிவந்த கட்டுரைகளும், சஞ்சிகைகளில் வெளியிடப்பட்ட கட்டுரைகளும் இந்நூலி லுள்ளன. பத்துக் கட்டுரைகளின் தொகுதி இது. இந்நூலை வெளியிட்ட மணிவிழாக் குழுவினர், அழகுற அச்சிட்ட குமரன் புத்தக இல்லத்தினர் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

அன்பன்
***கலாநிதி க. நாகேஸ்வரன்***

மொழித்துறை
சப்ரகமுவ பல்கலைக்கழகம்
பெலிகுல்லோயா
12.03.2013

# பதிப்புரை

எம் பெருமதிப்பிற்கும் பேரன்பிற்கும் போற்றுதற்கும் பாராட்டுதற்குமுரிய முதுநிலை விரிவுரையாளர் அருட்கலைமாமணி, சித்தாந்த பண்டிதர், வாகீச கலாநிதி, சொற்பேராழி, டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன், M.A. Ph.D. அவர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு நூலாக 'நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன்' என்னுமிந்நூல் வெளியிடப்படுகிறது. மணிவிழாவையொட்டி வெளியிடப் படும் இந்நூல் காலத்துக்குக் காலம் ஆசிரியரால் எழுதப்பட்ட கட்டுரைகளின் அருங்களஞ்சிய மெனலாம்.

கலாநிதி க. நாகேஸ்வரன் அவர்கள் நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயத்திலும், நயினாதீவு மகாவித்தியாலயத்திலும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கல்வியைக் கற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். முத்தமிழிலும் பாண்டித்தியமும் திறமையும் கொண்ட வாகீச கலாநிதி தமிழிலே புலமையும் வித்துவமுங் கொண்ட சான்றோர் பலரிடத்திலும் கல்வித் தொடர்புள்ளவர். வித்துவான் சி. குமாரசாமி, பண்டிதை புனிதவதி, நயினைக் கவிஞர் நா.க சண்முகநாதபிள்ளை, பண்டித வித்துவான் ப.க. குகதாசன், அதிபர் சபா. ஆனந்தர், ஆத்மஜோதி கா. முத்தையா, அறிவொளி த. சண்முகசுந்தரம், மகாஜனச் சிற்பி தெ. து. ஜெயரத்தினம், பேராசிரியர்கள் கலாநிதிகள் க.கைலாசபதி, கா. சிவத்தம்பி, அ.சண்முகதாஸ், எம்.ஏ. நுஃமான், நா.சுப்பிரமணியன், கா. இந்திரபாலா, சித்திரலேகா மௌனகுரு, ஏ.ஜே. கனகரட்னா, நா. பாலகிருஷ்ணன், கா. கைலாசநாதக் குருக்கள், ப. கோபால கிருஷ்ணன், க. அருணாசலம், பேராசான் சி. பத்மநாதன் ஆகியவர்களிடம் விரிவுரைகள் கேட்டவர். இலங்கை வானொலியிலும் 'ஈழநாடு' பத்திரிகையிலும் பணியாற்றியவர். நேர்முக வர்ணனையாளர், கதாப்பிரசங்கக் கலைஞர், வானொலியில் பகுதிநேர அறிவிப்பாளர் என்று இன்றும் கலைப்பணிபுரிபவர். பண்ணுடன் திருமுறைகளைப் பாடவல்ல இவர் ஒரு வில்லிசைக் கலைஞரு மாவார். நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங் காவலர் குடும்பத்திலும் நயினை வரகவி நாகமணிப்புலவர் பரம்பரையிலும் உதித்தவர். நல்ல சமயச் சொற்பொழிவாளரான கலாநிதி நாகேஸ்வரனின் விரிவுரைகள் மாணாக்கரை ஈர்த்துப் பிணிக்க வல்லவை.

பல்கலைக்கழகத்திலே மொழிப்பீடத்திலே கற்கும் அனைத்து மாணவரின் அன்பிற்கும் பாத்திரமானவர். புலமையும் வித்துவமும் எழுத்தாற்றலுஞ் சிந்தனை வளமும் நிரம்பப் பெற்ற முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரனின் எழுத்து வளத்தை இத்தொகுதி பறைசாற்றுகிறது. இந்நூலை வெளியிடுவதில் மணிவிழாக்குழு மிகுந்த பேருவகையும் மகிழ்ச்சியும் அடைகிறது. இன்னும் பல அரிய சிந்தனை ஆழங் கொண்ட கட்டுரைகளை எழுத வேண்டுமெனவும், வெகு விரைவில் தமிழ்ப் பேராசிரியர் என்ற பதவியுயர்வினைப் பெற்றுத் தமிழ்த் தொண்டாற்ற வேண்டுமெனவும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

மொழித்துறை
சப்ரகமுவ பல்கலைக்கழகம்
பெலிகுல்லோயா

அன்புடன்
***எஸ். வை. ஸ்ரீதர்***
பதிப்பாசிரியர்
மணிவிழாக்குழு
14.03.2013

# பொருளடக்கம்


அணிந்துரை v

முன்னுரை vii

பதிப்புரை viii

1. நயினாதீவு குறித்த ஆய்வுகளுக்கான வரலாற்றுச் சான்றுகளும், மூலாதாரங்களும் 1
2. மணிபல்லவம் என்பது நயினாதீவே 70
3. நயினை ஸ்ரீ நாகபூஷணி 78
4. அற்புதத் தெய்வம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் 82
5. சீறிடும் நாகபூஷணித் தாய் 87
6. குடமுழுக்குக் காணும் சக்தி பீடம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் 93
7. நயினை ஸ்ரீ நாகபூஷணியின் பத்ம பாதங்களில் ஆனந்த அருவியுடன் மலரிட்ட அந்தண திலகம் 97
8. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் தேர்த் திருவிழாச் சிறப்பிதழ் 101
9. சர்வமத சந்நிதி, நயினைப் பதியின் சிறப்பு 104
10. Let us pray to Nagapooshani Ambal 108

**பின்னிணைப்பு**

நாகபூஷணி எம் உயிர் துணையே 110

# 1

# நயினாதீவு குறித்த ஆய்வுகளுக்கான வரலாற்றுச் சான்றுகளும், மூலாதாரங்களும்

**தமிழ் இலக்கியங்களால் அறியப்படும் கருத்துகள்**

தாழ்விலாச் செல்வர் வாழும் ஊர் மணிபல்லவம் எனப்படும் நயினாதீவு. 'செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பலம்' போன்றது நயினையென்பதால் அங்கு வதிவோரும் 'தாழ்விலாச் செல்வர்களே' என்றும் உயர்வுடைய 'அருட் செல்வம்' நிறைவாகக் கொண்டவர்கள் என்பது கருத்து. 'விரும்பத் தகுந்த பீடமாக, இடமாக விளங்குவது மணிபல்லவமெனும் நயினை. தக்கார் வாழுமிடம்; நாடு. கரிகால் வளவன் காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் சிறந்த நகரமாகத் திகழ்ந்திருந்தது. அங்கே அரசிளைஞரும் வணிக இளைஞரும் தெருவில் யானைகள் மேலும் குதிரைகள் மேலும் ஏறி ஒருங்கு செல்வர் என்னும் குறிப்பு ஒன்று சிலப்பதிகாரத்திற் கூறப்படுகிறது. காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த வணிகர்கள் தமக்கு உண்டாகும் ஊதியத்தை வெளிப்படை யாகக் காட்டிப் பண்டங்களை விலைகூறி விற்பார்கள் என்னும் உண்மை பட்டினப்பாலை என்னும் நூலிலிருந்து தெரிகிறது.

வணிகம் - வண்மை செய்தல் என்பது அதன் சொற்பொருள். 'வண்மை' வளப்பமெனப்படும். பிறர்க்குந் தமக்கும் வளப்பம் உண்டாவதற்கு ஏதுவான ஒரு நன்முயற்சியே வணிகமாவது. நிலவழி வணிகம், கடல்வழி வணிகம் என இருவகையுண்டு. இவற்றுள் மிகவுஞ் சிறந்தது கடல் வணிகமாகும். ஈழம், காழகம், கடாரம், சீனம், சோனகம், யவனம் முதலிய நாடுகளோடு நம்மவர்கள் முன்பு வாணிபஞ் செய்து வந்தார்களென்பது பழைய தமிழ் நூல்களிலிருந்து தெரிகிறது.

தமிழ் மக்கள் ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே கடல் வாணிபத்திற் சிறந்திருந்தனர். தொல்காப்பியர் எனும் பெருநூலிலேயே அதற்கு முன்னிருந்த மக்கள் கடல்வழியாகப் பிறநாடுகட்குச் சென்று வந்த வழக்கம் 'முந்நீர் வழக்கம்' என்று குறிக்கப்படுகிறது. தமிழ் நூல்களில் பொறுக்க முடியாத பெரிய துன்ப நிகழ்ச்சிகளுக்கு உவமம் வருகின்ற

இடங்களில் ஆரிருள் மழை நாளில் நடுக்கடலிற் கலங் கவிழ்ந்து வருந்தும் வணிக மக்களின் நிலைமையே பெரும்பாலும் எடுத்துக்காட்டப்படுகின்றன. கலங்கவிழ்ந்து தவிப்போர், மணிமேகலையிற் 'கலங்கவில் மாக்கள்' என்றே கூறப்படுகின்றனர். 'உடைகலமாக்கள்' என்றும் அதிற் கூறப்படுவர். சிலப்பதி காரத்தில்,

*இடையிருள் யாமத்து எறிதிரைப் பெருங்கடல்*
*உடை கலப்பட்ட எங்கோன்*

என்று இத்துன்பநிலை அவ்வுணர்வு தோன்ற விளக்கப்பட்டிருக்கிறது. கப்பலுக்குத் தமிழ்மொழியிற் பல பெயர்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு வகையான கப்பலைக் குறிக்கும். பலவகையான கப்பல்கள் அக்காலத்திற் தமிழகத்திற் செயல்பட்டன. 'கலம் செய் கம்மியர்' என்றே தொழிலாளர்ருள் ஒருவகையினர் தமிழகத்திலிருந்தனர். புணை, பரிசில், கட்டுமரம், தோணி, திமில், ஓடம், படகு, அம்பி, வங்கம், கப்பல், நாவாய் முதலிய பல பிரிவான கலங்கள் அப்போது செய்யப்பட்டன என்பது தெரிகிறது. ஒவ்வொரு பெரிய கல்லும் ஒரு மதில் சூழ்ந்த மாளிகைபோலத் தோன்றுமாம். புறநானூற்றிலே இதைப் பற்றிய குறிப்பு வருகிறது. பாடல் எடுத்துக்காட்டு வருமாறு:

*பிணங்கு கதிர்க் கழனி நாப்பண் ஏமுற்று*
*உணங்கு கலன் ஆழியின் தோன்றும்*
*ஓர் எயில் மன்னன்* *(புறநானூறு)*

நாலாபக்கமும் நீர் நிரம்பிய கழனிகள் சூழ்ந்திருக்க நடுவில் தனியாக விளங்கும் மதிலோடு கூடிய ஓர் அரசனது மருதநிலக் கோட்டைக்கு விரிந்த கடலின் நடுவில் தனியாகத் தோன்றும் கப்பல் ஒன்று உவமாகக் கூறப்பட்டிருக்கிறது. கப்பலின் உயர்ந்த சுற்றுச் சுவர்கள் கோட்டையின் மதிற்சுவர்கள் போலவும், கப்பலின் உள் அறைகள் அக்கோட்டையின் உள் மாளிகைகள் போலவும் இருந்திருக்குமென்று இவ்வொப்புமையால் தெரிகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னும் அயல்நாட்டுக் கப்பல்கள் இந் நாட்டுத் துறைமுகங்களுக்குப் பொன்னோடு வந்து பொருளோடு போகும் என்றும், அதற்கேற்றபடி தமிழகத்தின் மேற்குக் கடலோரத்திலும், கிழக்குக் கடலோரத்திலும் தொண்டி, கொற்கை, காவிரிப்பூம்பட்டினம் முதலிய பல நல்ல துறைமுகங்களும் அப்போது வளமாக விளங்கியிருந்தனவென்றும் பழைய நூல்களிலிருந்து புலப்படுகிறது. இவ்வகைகளால் நாடு அக்காலத்திற் செல்வம் மிக்குச் செழித்திருந்தது.

வணிகத்தில் உள்நாட்டு வணிகத்தை விட அயல்நாட்டு வணிகத்திலேயே ஊதியம் மிகுதி. அயல்நாட்டு வணிகத்திலுள்ள நிலத்தின் வழியாகச் செய்யும் வணிகத்தைவிட நீரின் வழியாகச் செய்யும் வணிகம் மிக்க செழுமையைத் தரும். தமிழ்நாட்டில் இவ்வெல்லா வாணிகங்களும் முன்பு செழுமையாகவே இருந்தன. 'கடல் வாணிபம்' மிகவும் சிறந்திருந்தது.

உள்நாட்டு வாணிபத்தில் கூட்டங்கூட்டமாகச் செல்லும் வாணிகச் சாத்துகள் தம் வாணிபப் பண்டங்கள் பொதிந்த மூட்டைகளைச் சுமப்பதற்கு எருது, கழுதை முதலிய விலங்குகளையும் பயன்படுத்திக் கொள்வார்கள். இச்செய்தி, 'அணர் செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்' என்று பெரும் பாணாற்றுப்படையில் - இதைப்பற்றி ஒரு தொடர் - வருகிறது. வணிகம் நன்றாக நடைபெறுவதற்கு நல்ல முதலும், நாணயமும் நற்குணமும் இன்றி யமையாதன. இவ்வுண்மைகளைப் பழந்தமிழ் மக்கள் செல்வமாக அறிந் திருந்தனர்.

பண்டைக்கால வணிகர்கள், தம் வணிகத் தொழிலோடு மட்டும் இருந்து விடாமல் நாட்டின் பொது நலன்களிலும் கருத்தும் முயற்சியும் உடையவர் களாகத் திகழ்ந்தமை நினைவுகூர்தற்குரியது. பலர்க்கும் பலதுறைகளிலும் பொருள்கள் வழங்கி அவர்கள் நல்ல கொடையாளர்களாக விளங்கினார்கள். இது பற்றிய குறிப்புப் பட்டினப்பாலையில் வருகிறது. அரசனுக்கு உதவியாகத் தூது செல்லுதல் முதலிய காரியங்களையும் அவர்கள் மேற்கொண்டிருந்தார் களென்று தெரிகிறது. வாணிகஞ் செய்யும் போது நயமும் உண்மையும் சுருக்கமும் விளக்கமும் உண்டாகும்படி உலகியலறிவோடு பேசிப் பேசிப் பழகினவர்களாதலால் இவர்களிற் பலர் பிறரை வயமாக்கத்தக்க பேச்சுத்திறம் உடையவர்களாக இருந்திருக்கக்கூடும். இவர்களிற் பலர் புலவர்களாகவும் விளங்கினர். சீத்தலைச் சாத்தனார், இளவேட்டனார், பொன் வணிகனார், இளந்தேவன் என்னும் சிறந்த சங்கப் புலவர்கள் வணிக முயற்சியுள்ளவர்களே யாவர். இவர்கள் முறையே கூல வாணிகரும், அறுவை வாணிகரும், பொன் வணிகரும், பண்ட வாணிகருமாவர். இவர்கள் தாமுந் திருத்தமான உயர்ந்த தமிழ்க் கல்வி பயின்று பிறர்க்கும் அதனைப் பரவச் செய்து வந்த பெருந்தகை யோருமாவர்.

**தமிழ் பௌத்தக் காப்பியமான மணிமேகலையில் இடம்பெறும் மணி பல்லவம் தொடர்பான செய்திகளும் சம்புத்தீவு, நாகதீவு, புத்த பீடிகை எனும் கொள்கைகளும்**

சிலப்பதிகாரத்தைச் சேர இளவல் இளங்கோவடிகள் பாட, மதுரைக் கூல வாணிகன் சாத்தனார் கேட்டார் என்று சிலப்பதிகாரமும், மணிமேகலையைக் கூலவாணிகன் சாத்தனார் பாட, துறவு பூண்ட சேர இளவரசனான இளங்கோ வடிகள் கேட்டார் என்று சிலம்பும் மேகலையும் தம் பதிகங்கள் வாயிலாகத் தெரிவிக்கின்றன. இன்று தீவுப் பகுதிகள் 'தீவகம்' என்று அழைக்கப்படுகிறது. 'சம்புத்தீவு' என்று நயினாதீவுக்கு பெயருண்டு. சம்புத்தீவு தீவக சாந்தி என்னுந் தொடர்கள் மணிமேகலையிலே இடம்பெற்றுள்ளன. அரசுமணி என்பார் மேல்வருமாறு தமது நூலிலே எழுதியுள்ளார்:

''சம்புத்தீவின் காவல் தெய்வம் இந்நகரிலிருந்து இந்திரனுக்கு விழா எடுத்தது. அதனால் தீவகசாந்தி என்றும் பெயர்.''[1]

> பண்டைக் காலத்தில் நாவல் மரங்கள் நிறைந்த தீவு போல் இருந்த தால் நாவலந்தீவு என்று பெயர் பெற்றது. சம்பு என்றால் நாவல் மரம். அதனால் நாவலந்தீவைக் சம்புத்தீவு என்றும் கூறுவர்.[2] 'சம்பாதி வனம்' என்னும் பெயரும் மணிமேகலையிலே வருவது. 'சம்பு' நாவல். சம்பாதிவனம் 'நாவல் மரங்கள் நிறைந்த வனம்' ஆகலாம். சாம்பாதிவனம் - சடாயுவின் தம்பி சம்பாதி. சூரியனின் அருகே பறந்து சென்றபோது வெப்பத்தால் சிறகுகள் தீப்பற்றியெரிய இங்கே வீழ்ந்தான். சடாயுவும் சம்பாதியும் இறைவனைப் பூசித்துப் பேறு பெற்ற இடம் தான் இவ்வனம். அச்சந்தரக்கூடியதாகும்.

'மணிபல்லவம்' பற்றிய செய்திகள் மணிமேகலையில் மேல்வருமாறுள்ளன.

*மணிபல்லவத்தில்*
*பொழுது புலர்ந்தது*
*புள்ளினம் ஆர்த்தது*

இருள் மூடியிருந்த மணிபல்லவத் தீவைக் கதிரவன் தன் பொன்னிறக் கதிர்களால் ஒளிமயமாக்கத் தொடங்கினான். (மணிபல்லவத் தீவு என எழுதுவது கூர்ந்து நோக்கத்தக்கது) (தீவு - நான்கு பக்கங்களும் கடலாற் சூழப்பட்டுள்ள நிலப்பகுதி) கதிர் ஒளி தன்மேல் பட்டதும் மணிமேகலை துயில் நீத்து எழுந்தாள். தான் மலர்க்குவியல்கள் மீது கிடப்பது அவருக்கு வியப்பாயிருந்தது. மணிமேகலை, 'நான் எங்கிருக்கிறேன். உப வனத்திலல்லவா இருந்தேன். அதில் உள்ள வேறு இடமா? இல்லை கனவு காண்கிறேனோ'

என்று குழம்பினாள். தன் கையைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டு கனவல்ல நனவு தான் என்று உணர்ந்தாள்.'[3] மேற்போந்த செய்திகளால் 'மணிபல்லவம்' என்பது 'தீவு' என்று புரிகிறது. இங்கே தான் இத்தீவு நயினாதீவா? அல்லது யாழ்ப்பாணக் குடாநாடா? என்னும் ஆய்வு பிரதானமாகிறது. ஆயினும் இன்றும் 'தீவு' என்னும் சொல்லுடன் இணைந்து நிற்பது நாற்புறமும் கடலாற் சூழப்பட்டுள்ளதும் என நோக்கும்போது மணிபல்லவம், மணபல்லவத் தீவு என்ற பதங்கள் நயினாதீவையே குறித்துள்ளன என்பது போதரும்.

> *மணிமேகலை தன்னைச் சுற்றிக் கடல் சூழ்ந்திருப்பதையும்*
> *கடலலைகள் விசையாக வீசுவதையும் கண்டாள்.*
> *அலைகள் பவளத்தையும் சந்தனக் கட்டைகளையும்*
> *கரையில் ஒதுக்கும் காட்சிகளைக் கண்டாள்.*[4]

மணிமேகலையில் வரும் இச்சம்பவமும் அக்காலத்திலே நயினாதீவைச் சூழ்ந்துள்ள கடலின் வேகத்தையும் பேரலை எறியும் மாட்சியையும் சுட்டு வதுடன் 'கடல் சூழ்ந்திருப்பதைக் கண்டாள் என்னும்போது 'தீவுத்திடல்', 'தீவுத்திட்டு' என்பதால் தனது சொந்த அனுபவத்தினையே சுட்டினாள் என்பதும் தரும். ஆயின் 'கடல் சூழிலங்கைக் கயவாகு' என்னுந் தொடரால் முழு இலங்கையும் குறிக்கப்படுவதும் உணரப்பட வேண்டியது. மணிபல்ல வத்திற் கடல் சூழ்ந்திருப்பதும், கடலலைகள் விசையாக வீசுவதும் கருதினால் இப்பின்னணி நயினாதீவின் - மணிபல்லவத்தின் இயற்கைச் சூழலே என்ப தனை உய்த்தறிய அதிக நேரம் வேண்டியதில்லை.

> (மணிமேகலை) எழுந்து அங்குமிங்கும் நடந்து சென்றபோது மலர் பூத்துக் குலுங்கும் சோலைகளையும், இதழ் விரித்துச் சிரிக்கும் செந்தாமரை மலர்கள் நிறைந்த தடாகத்தையும் கண்டாள். அவள் கண்ணுக்கு அறிந்த மனிதரோ அறியாத மனிதரோ தென்பட வில்லை.[5]

எனக் கூறப்படுவதால் மணிபல்லவம், மணிபல்லவத் தீவு என்பது நீண்ட நிலத் தொடர்ச்சியுடையதொன்றல்ல என்ற கருத்தை உறுதிப்படுத்துவதா யுள்ளது. அத்துடன் 'தடாகம்' 'பொய்கை' தென்பட்டதும் மணிமேகலையில் உண்டு. 'குளம்' ஒன்று 'பொய்கை' என அழைக்கப்பட்ட வரலாறு பலராலும் நயினாதீவு பற்றிய ஆய்வில் குறிக்கப்படுகிறது. எனவே 'மலர்கள் நிறைந்த தடாகம்' இருந்த இடமே 'மணிபல்லவம்' என்பது போதரும். அத்துடன் 'மனித நடமாட்டம்' இல்லாத தீவாகவே முன்பு இருந்துள்ளதும், அதாவது தொடர்பற்ற பிரதேசமாக - தனிமைப்படுத்தப்பட்ட இடமாக - ஆள் அரவமற்ற பிரதேசமாகவும் 'மணிபல்லவம்' இருந்தது என்பதும் உண்மையே.

**புத்த பீடிகை / தருமபீடிகை**

அப்போது அவள் முன் திடீரென்று ஒரு தருமபீடிகை தோன்றியது. வட்டமாய் அமைந்த தருமபீடிகை மூன்று முழ உயரமும் ஒன்பது முழ அகலமும் கொண்ட பெரிய பீடிகை. அதன் உச்சியில் புத்தர் அடிச்சுவடுகள் அமைந் திருந்தன. அதைப் புத்தபகவான் இருக்கை என்று எண்ணி மரங்கள் அதன்மீது மலர்களைச் சொரியுமாம். பறவைகள் அதைப் பூசிப்பது போல் சிறகுகளைத் தம் உடலிலிருந்து சிலிர்த்துச் சொரியுமாம். இவ்வாறு வர்ணிக்கிறது மணிமேகலை.

புத்தபீடிகை மணிபல்லவத்தில் ஏற்படுத்தப்பட்டது.[6] அதைக் காண்பவர் களுக்கு அவர்களுடைய பழம் பிறப்பை உணர்த்தவல்லது. நாகநாட்டை ஆண்ட இரண்டு மன்னர் அப்பீடிகையை அடைய ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொண்டனராம். அது கண்ட புத்தபகவான் 'இந்த இருக்கை உங்கள் இருவருக்குமே உரியது அன்று. எமக்கு உரியது' என்று கூறி அப்பீடிகை மீது அமர்ந்து அவ்விருவருக்கும் அறிவுரை கூற அவர்கள் நல்லறிவு பெற்றனர். இச்சான்று இன்று நயினாதீவிலே அனைத்து யாத்திரிகர் களது கண்களும் தரிசிக்கத்தக்க வகையில் உண்டு. அதாவது 'இந்திரன் அமைத்தது' என்ற கருத்தும் மணிமேகலை புத்தபீடிகை வலம் வந்து வணங்கி னாள் என்ற செய்தியும் இன்றைய நயினாதீவே மணிபல்லவம் - மணி பல்லவத் தீவு - என்பதனை உறுதிப்படுத்துவனவாகும்.

அதாவது பெருமைவாய்ந்த தருமபீடிகையைக் கண்டதும் மணிமேகலை இரு கைகளைக் குவித்துத் தலை மீது வைத்துக் கண்கள் மகிழ்ச்சிக் கண்ணீரைப் பொழிய அப்பீடிகையை மும்முறை வலம் வந்தாள். பின் மின்னற்கொடி முகிலோடு நிலத்தில் வீழ்ந்ததைப் போல அழகிய விரிந்த கூந்தலையுடைய மணிமேகலை தரையில் விழுந்து வணங்கினாள்.

முன்செய்வினை, பூர்வ புண்ணியத்தால் ஏற்படும் பயன்கள் என்பன மணிமேகலையில் இடம் நோக்கி எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மதப் பிரசாரம், மேற்கொள்ளும் சீத்தலைச் சாத்தனாரின் போதனைகள் நிறையவே இப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. பீடிகையைத் தொழுததும் அவள் (மணி மேகலை) பழம் பிறப்பை உணர்ந்தாள்.

> இந்நாவலந் தீவில் இற்றைக்கு ஏழாம் நாள் உயிரினங்கள் எல்லாம் நடுங்கும்படி ஒரு பெரிய நில நடுக்கம் பூகம்பம் உண்டாகும். அப்போது இந்த நகரம் நாகநாட்டில் நானூறு யோசனை பரப்பளவும் பாதாளத்தில் புகுந்து அழியும். ஆதலால் இந்நகரிலிருந்து சென்று விடு' என்று கூறினீர், முனிவரே! நீர் கூறியபடியே ஏழாம் நாளில்

> 'இடவயம்' என்னும் நகரும் நானூறு யோசனை பரப்புள்ள நிலப் பகுதியும் நில நடுக்கத்தால் பாதாளத்தில் வீழ்ந்து அழிந்தது. அச் செய்தியை அறிந்த உயிர்தப்பிப் பிழைத்த மன்னனும் மக்களும் ஒருங்கு திரண்டு வந்து உம் மலரடிகளைத் தொழுது வணங்கினர். நீர் அவர்களுக்கு வீட்டு (மோட்ச) நெறியை விளக்கிக் கொண்டிருந்தீர்.

அப்போது அசோகபுரத்து மன்னன் இரவிவர்மன் பட்டத்தரசியான அமுதபதி என்பவள் வயிற்றில் பிறந்த நான், இலக்குமி என்ற பெயரையுடையவளாய் இருந்தேன். அத்திபதி என்னும் மன்னனுக்கு மனைவியாகவும் சித்திரபுரத்தை ஆண்ட மன்னனுக்கு மகளாகவும் விளங்கியவள் நீலபதி. அந்த நீலபதி என்னும் நேரிழையாள் மணிவயிற்றில் இளஞாயிறு தோன்றியது போல் பிறந்த இராகுலனுக்கு மனைவியானேன். அப்பிறவியில் இராகுலன் என்ற பெயருடைய என் கணவனும் இலக்குமி என்ற பெயருடைய நானும் உம்மிடம் அறிவுரை கேட்க வந்து வணங்கி நின்றோம். அப்போது, தாங்கள் என்னை நோக்கி,

> இற்றைக்குப் பதினாறாம் நாளில் உன் கணவனான இராகுலன் திட்டிவிடம்' என்னும் நஞ்சு விழிப்பாம்பு தீண்டி மாள்வான். அவன் பிரிவைத் தாங்கொணாது நீயும் தீயில் மூழ்கி இறப்பாய். வினைபயன் தரும் காலம் உனக்கு இப்பிறவியில் இல்லை. ஆதலால் கவேர முனிவன் மகளாகிய காவேரியின் பெயர் பெற்று விளங்கும் காவிரிப் பூம்பட்டினம் என்னும் பெருநகரில் சென்று பிறப்பாய். அங்கு உனக்கு ஒரு தீங்கு வரும். அந்நாளில் மணிமேகலா தெய்வம் உன்னை எடுத்துச் சென்று ஒரு தீவில் சேர்க்கும். அங்கு நாக நாட்டரசர்கள் பகை மறந்து தொழுத புத்த பீடிகையைத் தொழுவாய். அப்போது உன் பழம்பிறப்பை உணர்வாய். அப்போது இங்கு கூறியவை எல்லாம் நினைவு கூர்வாய்''.

என்று திருவாய் மலர்ந்து அருளினீர்கள்.

என் கணவன் இறப்பான் என்ற செய்தி கேட்டு வருந்திய நான் உம்மைத் தொழுது, என் அடுத்த பிறப்பைக் கூறிய தாங்கள் என் கணவனின் அடுத்த பிறப்பைப் பற்றியும் கூறியருள வேண்டும் என்று வேண்டினேன். அதற்கு நீர்,

> உன்னை மணிபல்லவத் தீவில் கொண்டு வந்து வைக்க அத்தெய் வமே உன்முன் தோன்றி இந்தப் பிறவியில் இங்கு தோன்றியிருக் கிறான் என்பதை உனக்குக் கூறும் என்கிறீர்கள். அந்தத் தெய்வம் இங்கு இப்போது வாராதோ? இன்னும் அத்தெய்வம் வரக் காண கிலேனே' என்று ஏங்கி அழுதாள் மணி மேகலை. அப்போது,

> மணிமேகலா தெய்வம், ''எங்கும் துன்பம் நீங்குக'' என்று மணிமேகலை செவியில் விழும்படி கூறிப் புத்தபீடிகையை வணங்கியது. மணி மேகலை உடனே அதை வணங்கி, ''தாயே! உன் தண்ணருளால் என் பழம் பிறப்பை உணர்ந்தேன். என் கணவன் எங்கு பிறந்துள்ளான் என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்'' என்றாள். மணிமேகலா தெய்வம் அவன் முற்பிறப்பு நிகழ்ச்சியைக் கூறத் தொடங்கியது. முடிவில், ''உவவனத்தில் உன்னைப் பலவாறு இகழ்ந்து கூறிய உதயகுமாரன் தான் முற்பிறவியில் உன் கணவனாய் இருந்த இராகுலன். அவன் மீது கொண்ட பற்றை விலக்கி நன்னெறியில் செலுத்தவே உன்னைத் தீவிற்கு எடுத்து வந்தேன்.

என்று கூறி முடித்தது மணிமேகலா தெய்வம். பாதபங்கய மலைக்குச் சென்று (புத்தபெருமானின் பாதம் பதித்த காரணம் பற்றியே அம்மலை 'பாதபங்கய மலை' என்று பெயர் பெற்றது) வணங்கினாள் மணிமேகலை. அதன் பயனாக உன் தமக்கையராய் இருந்த தாரையும்வீரையும் இப் பிறப்பில் மாதவியாகவும் சுதமதியாகவும் பிறந்து உன்னோடு சேர்ந்து வாழ்கின்றனர்.

''மணிமேகலையே நீ விரும்பியபடி வேற்றுருக் கொள்ளும் மந்திரத் தையும், வான்வழிச் செல்லும் மந்திரத்தையும் உனக்குக் கூறுகிறேன்'' என்று கூறிவிட்டு மணிமேகலையின் செவியில் இரு மந்திரங்களையும் ஓதி, மணி மேகலை! நீ புத்தபகவான் அருளிய அறவழியில் செல்வது உறுதி'' என்று கூறிவிட்டு மணிமேகலா தெய்வம் மேலெழுந்து வானிற் சென்றது என்று கூறும் 'மணிமேகலைக் காப்பியம்'. மீண்டும் கீழிறங்கி வந்து, 'யான் உனக்குக் கூற மறந்தது ஒன்றுண்டு' சிறந்த தவ ஒழுக்கம் உடையவளே! மக்கள் உடம்பே உணவாகிய தொகுதி!

> *மக்கள் யாக்கை உணவின் பிண்படம்*
> *இப்பெருமந்திரம் இரும்பசி அறுக்கும்* *(மணிமேகலை)*

நான் கூறும் மந்திரம் பசியைப் போக்கக் கூடியது என்று கூறி, பசிப்பிணி நீக்கும் மந்திரத்தை அவள் காதில் ஓதிவிட்டு வானில் உயர்ந்து மறைந்தது. மூன்று நிலையான மந்திரங்கள்:

1. வேற்றுருக் கொள்ளல்
2. வான்வழிச் செல்லல்
3. பசிப்பிணி நீக்கல்

### மணிமேகலை - தீவதிலகை சந்திப்பு - அதிசய ஐயக்கலம் - அமுத சுரபி

மூன்று மந்திரங்களைப் பெற்றதும் மணிமேகலை பழைய அம்சங்கள் எல்லாம் நீங்கப் பெற்றாள். மணிபல்லவத் தீவில் அச்சமின்றி உலவினாள். ஆனாலும் அவளின் முகத்திலே சோகத்தின் சாயல் மறையவில்லை. புதுப் பொலிவோடு உலவி வருகையில் தீவதிலகை என்பவள் தெய்வ வடிவோடு தோன்றினாள். அவள் அங்குள்ள புத்தபீடிகையைக் காப்பதற்கென்றே இந்திரனால் மணி பல்லவத் தீவிற்கு அனுப்பப்பட்டவள். அதனால் அவள் அத்தீவிலேயே தங்கியிருந்தாள். அத்தீவுக்குத் திலகம் போன்று விளங்கியதால் 'தீவதிலகை' எனும் பெயர் பெற்றாள்.

மணிபல்லவத்தில் மணிமேகலையைக் கண்ட 'தீவதிலகை' இங்கு எவ்வாறு வந்து சோந்தாய்? எனக் கேட்க, ''நானாக வரவில்லை. மணிமேகலா தெய்வம் என்னை இங்கு கொண்டு வந்து சேர்த்தது. பெருமைமிக்க இந்தப் புத்தபீடிகையால் என் பழம் பிறப்புணர்ந்தேன். இங்கு வந்ததான் நான் அடைந்த பெரும் பயன் அது'' என்றாள் மணிமேகலை. 'நீ யார் எனக் கூறலாமா? என்றாள் மணிமேகலை. அதற்குத் தீவதிலகை,

> நான் இத்தீவுக்கு அண்மையதான இரத்தினதீபத்தில் உள்ள சமந்தகூட மலையுச்சியிலுள்ள புத்தர் திருவடிகளை வணங்கி இங்கு வந்தேன். இந்திரன் ஏவலால் இத்தருமபீடிகையைக் காத்து வருகிறேன். என்னைத் 'தீவதிலகை' என்பர். நங்கையே நீ நற்றவம் புரிந்தவள். இப்பீடிகையைக் காண்போர் பழம்பிறப்புணர்வர். ஆனாலும் அத்தன்மையுடையோர் உலகிலேயே சிலர்தான் உளர்.

இக்கருத்துகள் மணிபல்லவம் இன்றைய நயினாதீவே என்னும் கருத்தை மெய்ப்பிப்பனவாயுள்ளன. இந்திரனோடு தொடர்புடைய செய்திகள், 'இத் தீவுக்கு அண்மையதான இரத்தினதீபத்தில்' என்று தீவதிலகை குறிப்பிடும் சிவனொளிபாதமலை - சமந்த கூட மலையுச்சி வழிபாடு - ஆகியன இன்றைய நயினாதீவே மணிபல்லவம் மணிபல்லவத் தீவு என்ற கருத்தை அரண்செய்கின்றன.

'நன்று. இத்தீவில் வேறு ஏதேனுமத சிறப்புண்டா?' என வினவினாள் மணிமேகலை.

### அமுதசுரபியின் பெருமை

'உண்டு. இப்பீடத்திற்கு எதிரேயுள்ள பொய்கை (குளம்) தான் கோமுகிப் பொய்கை. (இன்று இவ்விடம் 'புத்தர்பள்ளம்' என்று வழங்கப்பட்டு வருகிறது.

புத்தபிரான் அவதரித்த நாளான வைகாசி நிறைமதி நாள் (வைகாச சுத்த பௌர்ணமி) அன்று அப் பொய்கையிலிருந்து 'அமுதசுரபி' என்றும் ஐயக் கலம் வெளிப்படும். அக்கலம் ஆபுத்திரன் கையில் இருந்த அற்புதக்கலம். அதில் இடப்பட்ட சோறு எடுக்க எடுக்கக் குறையாது வளரும். இதன் பெருமையை அறவண அடிகளிடம் கேட்டறியலாம். இன்று தான் அமுத சுரபி தோன்றும் நன்னாள். நாம் அங்கே போவோம்' என்று கூறி மணி மேகலையைக் கோமுகிப் பொய்கைக்கு அழைத்துச் சென்றாள் தீவதிலகை.

இருவரும் கோமுகிப் பொய்கைக் கரையில் நின்றனர். அப்போது பொய்கையிலிருந்து அமுதசுரபி தோன்றி மணிமேகலையின் கையில் வந்திறங்கியது. 'அமுதசுரபி' என்ற ஐயக்கலனை அடைந்ததும் மணிமேகலை மட்டற்ற மகிழ்ச்சியடைந்து புத்தபெருமானைப் பலவாறு புகழ்ந்து வணங்கி னாள். அப்போது தீவதிலகை மணிமேகலையை நோக்கி,

*குடிப்பிறப்பழிக்கும் விழுப்பங் கொள்ளும்*
*பிடித்த கல்விப் பெரும் புணை வீடூஉம்*
*நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்*
*பூண்முலை மாதரொடும் புறங்கடை நிறுத்தும்*
*பசிப்பிணி என்னும் பாவி*

என்று கூறினாள். பசிப்பிணி என்னும் பாவியானவன் குடிப்பெருமையை அழிப்பான். மேன்மையைக் கொள்ளான். நாணம் என்ற அணிகலனைக் களைந்து எறிவான்; உடலழகையும் அழித்துவிடுவான். மனைவி மக்க ளோடு அயலான் வீட்டுக்கு நாணாது சென்று பிச்சை எடுக்கச் செய்வான். இவ்வளவு கொடுமைகளைச் செய்யும் கொடும்பாவியை அழிப்பவரை (பசியை நீக்குபவரை)ப் புகழ எனக்கு ஆயிரம் நா இல்லை. இருக்கும் ஒரு நாவுக்கும் வன்மை இல்லை என்றாள் தீவதிலகை. இச்செய்தியின் பெறுபேறே இன்றும் தினமும் நயினாதீவில் நிகழும் அன்னதானப் பெருமை. மணி மேகலைக் காப்பியத்தின் விசாரங்களும், தத்துவங்களும், பௌத்த தர்மக் கொள்கைகளும் தருமங்களும் இன்றும் நயினாதீவிலே - மணிபல்லவத்திலே நிலைபேறுடையனவாயுள்ளமையே அதன் பூர்விக இலக்கிய வரலாற்றின் கருத்துகளுக்கு அரண் சேர்ப்பதாயமைகிறதல்லவா? இத்தொடர்பில் இன்று உலகப் புகழ் பெற்றுள்ள நயினாதீவு 'அமுரசுரபி' அன்னதான சபையின் வரலாறும் இணைத்து நோக்கத்தக்கது. மேலும் மெச்சத்தக்க பணியெது வெனில் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் அறங்காவலர் சபையினர் தினமும் அடியார்க்கு 'அன்னதானம்' செய்விப்பதாகும். அம்பாள் கல்யாண மண்டபத்திலே தினமும் நிகழும் அன்னம் பாலிக்கும் பணி

அம்பாளின் வருடாந்த உயர் திருவிழாவின்போது (அருள் பாலிக்கும் வேளை) 'அமுதசுரபி' அன்னதான சபையினரின் 'அமுதசுரபி' அன்னதான மண்டபத்திலே நடைபெறும். இத்தகு நடைமுறைகள் இன்று நிகழும் இடம் நயினாதீவு எனப்படும் மணிபல்லவத்திலேயே என்பதனை அறிந்துணர வேறென்ன சான்று வேண்டுமோ?

உலக அறங்களிற் சிறந்தது பிறர் பசியைப் போக்குவது தான். பசி போக்குவோரே சிறந்தவர்.

*ஆற்றுநர்க்(கு) அளிப்போர் அறவிலை பகர்வோர்*
*ஆற்றா மக்கள் அரும்பசி களைவோர்*
*மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை*
*மண் திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே*

பசியைப் பொறுத்துக்கொள்ள முடியாத வறிய மக்களின் கொடிய பசிப் பிணியை நிக்குவது மெய்ந்நெறியுடையோர் செய்கை. உண்மையான வாழ்க்கை அவர்களிடம் தான் உள்ளது. இந்த உலகத்தில் வாழுகின்ற உயிர்க் கெல்லாம் உணவு கொடுத்துப் பசி நீக்கியோர் தாம் உயிர்கொடுத்தவர்கள். 'உணவு கொடுப்பது தான் உயிர் கொடுப்பதற்குச் சமம்' மணிமேகலை. நல்லூழால் ஞாலத்து உயிர்களின் பசிபோக்கும் அமுதசுரபியைப் பெற் றுள்ளாய்! 'நீ உயிர்களிடம் இரக்கங்காட்டி அவற்றின் பசியைப் போக்கி உயர்வு பெறுக' என்றாள் தீவதிலகை.

மணிமேகலை,

''அன்னையே! முற்பிறப்பில் எனது கணவன் இராகுலன் 'தீட்டிவிடம்' என்னும் அரவால் தீண்டப்பட்டு மாண்டபோது அத்துன்பம் தாங்காமல் தீ மூழ்கி மாளும்போது சாதுசக்கர முனிவனுக்கு உணவளித்தமை எண்ணிய வாறு உயிர்துறந்தேன். அவருக்கு உணவளித்ததன் பயன்தான் இப்பிறவியில் ஞாலத்து உயிர்களின் பசியைப் போக்குவேன். ஆற்றா ஏழைகள், அவலப் பெண்டிர், ஆதரவற்று அமையும் முதியோர் இளையோர் அனைவர்க்கும் தான் பெற்ற குழந்தையின் வாடிய முகங் கண்டு அமுதூட்டும் தாய் போல் அந்த அமுதசுரபியால் உணவழித்துக் காப்பேன். பசித்துயரைத் துடைப்பதே இனி என் தொண்டு'' என்று கூறினாள்.

தீவதிலகை, மணிமேகலையின் உறுதிமொழி கேட்டு மகிழ்ந்து, 'நன்று! நீ உன் நகருக்குச் செல்லலாம்' என்று கூற அவள் தீவதிலகையை மும்முறை வலம்வந்து வணங்கிவிட்டு அமுதசுரபியைப் புத்தபீடிகையின் மேலிட்டு

மீண்டும் அதை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு வான்வழியே புகாருக்குப் புறப்பட்டாள்.

காப்பியச் செய்தியின்படி, மணிமேகலை தான் மணிபல்லவம் சென்றது முதல் 'அமுதசுரபி' பெற்று வந்தது ஈறாகச் சொல்லி விட்டுத் தன் கையில் இருந்த அமுதசுரபியைக் காட்டி,

''இது சாதாரண ஐயக்கலம் அன்று. இது பிச்சை ஏற்கும் கலம் அல்ல. பிச்சை அளிக்கும் கலம். இந்தப் பத்திரத்திலிருந்து உணவு எடுக்க எடுக்கக் குறையாது வளரும். அது ஆபுத்திரனின் கையில் இருந்த அற்புத ஐயக்கலம். 'அமுதசுரபி' என்பது இதன் பெயர். இதை நீங்கள் வணங்குவீராக. என்று கூற சுதமதியும், மாதவியும் அமுத சுரபியை வணங்கினர். இச்செய்தி யிலிருந்து நாம் அறிவது யாதெனில், மணிமேகலைக் காப்பியச் செய்திகள் முற்றிலும் பொருந்தியமையும் இடம் இன்றைய நயினாதீவு - மணிபல்லவம் - மணிபல்லவத் தீவு என்பதேயாகும் என்ற உண்மை 'ஆபுத்திரனும் அமுத சுரபியும்' என்றும் நூலாதாரத்தோடு நிறுவப்பட்டுள்ளமையைச் சுட்டுதல் பொருந்துவதாகும். திரு. சி. கதிரித்தம்பி எழுதிய 'ஆபுத்திரனும் அமுத சுரபியும்' என்னும் நூலில் இன்னும் பல அரிய செய்திகளைக் கற்றின் புறலாம். அத்துடன் காலத்துக்குக் காலம் எழுதப்பட்டுள்ள நயினாதீவின் வரலாற்றோடும், நாகவழிபாட்டோடும், நாக அரசு பற்றி ஆட்சி அரசியல் வரலாற்றோடும் இச்செய்திகள் சான்றாதாரங்களோடு ஆய்வறிஞர்களாலும், பேராசிரியர்களாலும், ஞானவான்களாலும், புலவர்களாலும், பொதுமக்க ளாலும் நிறுவப்பட்டுள்ளன. இக்கட்டுரையிலே பெரும்பாலான சான்றுகள் இடம்பெறுமென்பதையும் சுட்டுதல் பொருந்தும். சில இக்கட்டுரைக்கான உசாத்துணைகளாயும் உள்ளன. வரலாற்று உண்மையும் மெய்ம்மையும் நம்பகமும் நம்பிக்கையும் கொண்ட விடயமாக இவ்வாய்வு அமைவதால் முற்றிலும் பேருண்மைகளையே துலக்குதல் சாலப்பொருத்தமானதாகும். மேலும், சான்றாதாரங்களினடியாகவே நிறுவும் அணுகுமுறை இவ்வாய்விலே முழுமையாகக் கைக்கொள்ளப்பட்டுள்ளது என்பதும் அழுத்தியுரைக்கப்பட வேண்டியதும் அவசியமாகின்றன.

மணிபல்லவத்துடன் தொடர்புடைய ஆபுத்திரன் (இவனின் வரலாறும் தனித்துவமிக்கது) சாவகநாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தைப் போக்குவதற்குக் கப்பலேறிச் சாவகநாட்டுக்குச் சென்றான். வழியில் புயலால் கடல் கொந் தளிக்க மாலுமிகள் கப்பலை மணிபல்லவத்தீவில் நிறுத்தினர். ஆபுத்திரன் கப்பலிலிருந்து இறங்கி அத்தீவில் யாருக்கேனும் உதவமுடியுமா என்று அறிந்துவரச் சென்றான். புயல் ஓயவே கப்பல் புறப்பட்டது. மாலுமிகள்

ஆபுத்திரன் வந்துவிட்டான் என்று நினைத்துக் கப்பலை ஓட்டிச் சென்று விட்டனர். தீவைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தவன் தான் ஏறி வந்த கப்பலைக் காணாது வருந்தினான். மணிபல்லவத் தீவிலும் இவன் உணவைப் பெறக் கூடியவர்கள் எவருமிலர். அவன் 'பல உயிர்களின் பசியைப் போக்கி உயிர் வாழவைக்கும் இந்த அமுதசுரபியைக் கொண்டு என்னுயிரை மட்டும் காத்துக்கொண்டு உயிர்வாழ்வதா? தன்னலவாழ்க்கை இழிந்த வாழ்க்கை யன்றோ! இந்த ஐயக் கலனைச் சுமந்துகொண்டிருந்து என்ன பயன்' என்று எண்ணியவாறு அங்கிருந்த கோமுகிப் பொய்கைக்குச் சென்று அதன் முன் நின்றான்.

அமுதசுரபியைத் தலைமீது வைத்து, கண்களில் ஒற்றிக் கொண்டு, 'அமுதசுரபியே! நான் மன் செய்த தவப்பயனால் உன்னை அடைந்து பல உயிர்களைக் காக்கும் தன்மை பெற்றேன். முன் செய்த தவப்பயன் நீங்கி விட்டதால் இப்போது அளவற்ற துயருற்றேன். உன்னைச் சுமந்து வறிதே வாழ்வது அவலம். ஐயக் கலமாய் அமைந்த அமுதசுரபியே! நீ ஆண்டுக்கு ஒருமுறை இப்பொய்கையிலிருந்து வெளியே தோன்றுக! அருளறம்பூண்டு உயிர்களைக் காக்கும் பெற்றியுடையவர் வருவாராயின் அவரிடம் சென்று தங்குக! என்று கூறிவிட்டு அதைப் பொய்கையில் வீசி எறிந்து விட்டு உண்ணா நோன்பு பூண்டு உயிர் நீத்தான்.

ஆபுத்திரன் மணிபல்லவத்தில் தன் உடலை விட்டுவிட்டுச் சாவகநாட்டை ஆண்ட மன்னனது பசுவின் வயிற்றில் போய்ப் பிறந்தான்.

**நாகர், நாகநாடு**

''நாகர் மலைவாழ் மக்கள்: ஆடையின்றிப் பிறந்த மேனியோடு வாழ்பவர்கள்'' என்றும், வணிகனான சாதுவன் பலமொழிகளைக் கற்றவனாதலால் நாகர் பேசிக் கொண்டதைக் கேட்டு அவர்கள் மொழியிலே பேசினான்''[9] என்று குறிப்புகளுள. நாகர்களுக்குச் சாதுவன் கூறிய அறவுரைகளிலிருந்து நாகரின் குணவியல்புகளை அறியமுடிகிறது.

> கடல்வழிச் செல்வோர் கலங்கவிழ'' உயிர் தப்பி இவ்விடத்தை அடைந்தால் அவர்களுக்குத் தீங்கு செய்யாது காப்பாற்றுங்கள். வயது முதிர்ந்தோர், தானே இறக்கின்ற உயிர்களின் இறைச்சியைத் தவிர மற்ற உயிரினங்களை வதைத்து ஊனைத் தின்னாதீர்கள்'' என்று கூறினான்.

**விழாக்கள் மலிந்த இடம் மணிபல்லவம்:**

> இந்திர விழாக் கொண்டாடாத நாளில் இந்நகரைக் கடல் கொள்ளும் என்று மணிமேகலா தெய்வத்தின் வாக்கு இருக்கிறது. அதுவுமன்றி இந்திரன் சாபமும் அப்படியே உள்ளது. ஆகையால் ஆண்டுதோறும் இந்திரவிழாச் செய்துவருக.[12]

என்று தருமசாவகன் மணிமேகலைக்குக் கூறினான்.

சாவக நாட்டிலுள்ள இந்நகரின் பெயர் நாகபுரம். இதை ஆட்சி புரிபவன் பூமிச்சந்திரன் மகன் புண்ணியராசன். மணிமேகலை தெய்வம் புண்ணிய ராசனை நோக்கிக் கூறியதாவது,

நீ மண்பல்லவம் சென்று புத்த பீடிகையை வணங்கினால் அது உன் முற்பிறப்பை உணர்த்தும். ஆதலால் நீ மண்பல்லவத்திற்கு வருக

புண்ணியராசன் மூலம் மணிபல்லவத்தின் சிறப்பு மேலும் கூறப்படுகிறது. அரசபாரம்பரியத்தின் வழிபடுதலமாகவும், யாத்திரைத் தலமாகவும் இம்மணி பல்லவம் நிலவியது என்ற செய்தியை மேல்வரும் புண்ணியராசனின் கூற்றும், நடவடிக்கையும் உறுதிப்படுத்துகின்றன.

> நான் மணிபல்லவத்தைக் கண்டு அதனை வலம்வர வேண்டும் என்று துணிந்து விட்டேன். இந்த ஆசையைத் தணிக்க என்னால் இயலாது. நான் அங்கு சென்றுவர ஒரு திங்களாகலாம். அதுவரை நீரே அரசியற் பணிகளை ஏற்று நடத்தும் என்று அரசப் பொறுப்பைச் சனமித்திர அமைச்சனிடம் ஒப்படைத்துவிட்டுக் கப்பலேறி மணிபல்லவத்துக்குச் சென்றான்.
>
> புத்ததேவன் தோன்றும் காலத்தைக் கூறினீர். அவர் தோன்றும் முன் புத்தபீடிகையை இந்திரன் மணிபல்லவத்தில் அமைக்கக் காரணம் என்ன? என்பது புண்ணியராசன் பிரமதரும முனிவரிடங் கேட்டான். இதற்குரிய பதில் வருமாறு:
>
> அப்பீடிகை புத்த தேவனைத் தவிர வேறு ஒருவரையும் தாங்காது. அப்பீடிகை புத்த தேவனைத் தாங்கினால் தான் இந்திரன் அவரை வணங்குவான். ஆதலால் தான் இந்திரன் அதை அங்கு அமைத்தான். காண்பவர் பழம் பிறப்பை உணர்த்தும்படி செய்தான்[13]

மணிபல்லவத்தில் புண்ணியராசன் வந்ததும் அவனைக் கண்டு மணி மேகலை எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தாள். அவனை அழைத்துப் போய்த் தீவை வலம் வரச் செய்தாள். பின் புத்தபீடிகை இருந்த இடத்திற்கு அழைத்துப் போய் அதை வணங்கச் செய்தாள். புண்ணியராசன் புத்தபீடிகையை வணங்கி

யதும் அது அவனுக்குப் பழம்பிறப்பை உணர்த்தியது. அதனை அறிந்த புண்ணியராசன் முற்பிறவியில் அமுதசுரபியை அளித்த சிந்தாதேவியை நினைத்து,

> தென் தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவையே! உணர்வில் தோன்றி உரைப்பொருள் உணர்வில் தோன்றி உரைப்பொருள் உணர்த்தும் நாடந்தையே! சிந்தா தேவியே! கலையின் தலைவியே! நான் பிறக்கும் பிறவி தோறும் உன்னை வழிபடத் தவறமாட்டேன். வழிபட மறந்து வாழமாட்டேன் என்று சபதமெடுத்தான். அதன்பின் மணிமேகலையும் புண்ணியராசனும் கோமுகிப் பொய்கைக்குச் சென்று நீராடி அங்கிருந்து புன்னைமர நிழலில் தங்கினர்.[14]

> மணிபல்லவத் தீவைப் போலச் சோலைகளையும் குளங்களையும் உண்டாக்கி வைப்பாயாக.[15]

இனி, 'நாகநாடு' பற்றிய செய்திகளுளொன்று குறித்து வரலாற்றுத்துறைப் பேரறிஞர் பேராசிரியர் கலாநிதி சிவசுப்பிரமணியம் பத்மநாதன் அவர்களது 60 ஆவது அகவை விழாவையொட்டி மலர்ந்த 'பத்மம்' என்னும் மலரிலே இடம்பெற்றுள்ள ''தென் தென்கிழக்காசிய நாடுகளில் கணபதி வழிபாட்டு மரபும் தொன்மையும்'' என்ற கட்டுரையில் இடம்பெறும் கருத்து ஒன்று வருமாறு:

''மணிமேகலையில் வரும் நாகநாடு நடுக்குற்றாள்பவள்'' என்ற தொடரிலே வரும் 'நாகநாடு' என்பது யாவா என்ற தீவினையே குறித்து நிற்கிறது என்பதும் நோக்கத்தக்கது[16] என்று கருத்தொன்று இடம்பெற்றுள்ளது. ஆயினும் இக்கருத்துப் பொருந்துமாறில்லை. மணிமேகலைத் தெய்வத்தின் வரலாறும் இன்றைய சக்திபீடம் நயினாதீவு என்னும் சான்றும், அரசாட்சியும் அருளாட்சியும் நிகழும் நம்பிக்கையும் கொண்டு நோக்குமிடத்து 'நாடு நடுக்குற்றாள் பவள், என்னுந் தொடருக்கும் யாவாத் தீவுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை' என்பது போதரும். ஆயினும் யாவா உட்பட அதனைச் சூழவுள்ள தீவுகளிலும் நாடுகளிலும் பௌத்த, சைவ இலக்கிய, இதிகாச வழிபாட்டு மரபுகள் நிலவியுள்ளமையை வைத்துக்கொண்டு நாகநாடு குறித்த மேற் போந்த கருத்துப் புனையப்பட்டிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. சார்புத் தன்மையுண்டாயினும் காலவோட்டத்தில் யாவாத் தீவைவிட நயினா தீவு, நாகதீவு என்ற 'சக்தி பீடம்' புகழும் கீர்த்தியும் பெற்று இலங்குவதுடன் அம்பாளின் தனித்துவ அருளாட்சி மிகவும் பயங்கரமானதாயும், பௌவிக மானதாயும் அமைகின்றமையைச் சிந்திக்குமிடத்து, 'நடுக்குற்றாள்பவன்' என்னுந் தொடரினூடே மக்கள் மனதிலே பயத்தன்மையைத் தோற்றுவித்துப்

பக்தித்திறனால் 'ஆள்பவள்' என்னும் கருத்தே நடைமுறைப் பொருத்தமா யமைவதானா 'நாகநாடு' என்பது பிற்காலப் புகழ்பெற்ற தேசம், வழிபடு மிடம், யாத்திரைத் தலம், நம்பிக்கையுடன் ஏற்றிப் போற்றும் திருத்தலம் என்னும் தனித்துவ அம்சங்களால் இன்றைய நயினாதீவையே குறித்தது என்று ஊகிப்பதில், கருதுவதில் பிழையிருக்க முடியாதென்றே கருதுகிறோம். இக்கருத்து 'ஊர்' பற்றிய சார்புடனோ, சமயம் பற்றிய வெறி நோக்குடனோ மட்டுமன்றிச் 'சமூக நடைமுறை உண்மை' என்ற அடிப்படையிலேயே ஈண்டு இங்கு நிறுவப்படுகிறது. இதில் சான்றாதாரமும் உண்மையும் முக்கியமே தவிர உணர்வு நலன் இரண்டாம் பட்சமே.

இக்கட்டுரையிலே இதுவரை யாம் எடுத்துக்காட்டிய கருத்துகளை வித்துவான் எம். நாராயணவேலுப்பிள்ளை உரைநடைத் தமிழில் ஐம்பெரும் காப்பியங்கள் (1999) என்னும் நூலே அங்கீகரித்துள்ளார்.[17]

'நாகதீபம்' குறித்த ஆய்வொன்றிலே 'நாகதீபம்' என்பது யாழ்ப்பாணம் என்பதே என்கிறார் லயனல் சரத். வாசகங்கள் வருமாறு:

> வசப மன்னரின் காலத்தில் நாகதீபத்தை ஆட்சி செய்த 'இசுகிரி' எனும் அமைச்சர் 'பியகுதிஸ்ஸ' விகாரையைக் கட்டியதாகக் கூறப்படு கிறது. வல்லிபுரத் தங்க ஓலைச் சுவடி (வல்லிபுர ரன்சன்னஸ) இந்தத் தங்க ஓலைச் சுவடி வல்பொல ராகுலதேரருக்குக் கிடைத்து அவரது பாதுகாப்பிலிருந்ததாகப் பிரசித்தி பெற்றிருந்தது. இங்கு 'நாகதீபம்' எனக் குறிக்கப்படுவது யாழ்ப்பாணம் ஆகும்.[18]

'நாகதீபம்' யாழ்ப்பாணம் என்றே பலரும் கருதுவது பற்றி நோக்குவோ மாயின், 'யாழ்ப்பாண அரசு' நிலவியதன் பின் அதற்குப் பல்வேறு தாக்கு தல்கள் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், சிங்கள அரசுகளினால் உண்டாயிற்று. 'யாழ்ப்பாண அரசு' பரம எதிரியாயும், வைரியாயும் வெல்லப் பட வேண்டியதாயும் பிற படையெடுப்பாளர்களுக்குத் தென்பட்டது. பெரும் பாலான சிங்களமொழி ஆய்வாளர்களும் கல்விமான்களும் 'தமிழரசு' வின் எதிர்ப்புக் கொள்கைகளாலும், தமிழர் குறித்த சந்தேகங்களாலும் 'யாழ்ப் பாணம்' குறித்தே அதீத விழிப்பாயிருந்தனர். ஆதலினால் பொதுமக்களது கருத்தோ, சமயப்பற்றுடன் வழிபடுதலம் பற்றிய பிரக்ஞையோ, யாத்திரை பற்றிய உணர்வுகளோ எதுவுமற்ற போக்கில் 'யாழ்ப்பாணம்' குறித்தே பெரிதாய் அக்கறை செலுத்தினார். இவ்வரசியற் சார்பு நிலைக் கொள்கை காரணமாக இன்றும் யாத்திரை வழிபடுதலமாக இலங்கும் நயினாதீவு பற்றிய செய்தித்துலக்கமோ - நோக்குநிலையோ - இருந்திருக்காத நிலையிலேயே லயனல் சரத் என்பர் 'நாகதீபமே' யாழ்ப்பாணம் என்கிறார். மேலும், 'நாக

வழிபாட்டு மரபு' குறித்த விளக்கம் எமது கருத்தையே வளம் செய்யும். அதாவது, நாகவழிபாட்டின் தொன்மைப் பண்புகள் நயினாதீவில், நாகதீவில் நிலவியதாலும் 'நாகதீபம்' என்றாயிருக்கலாம் என்றும் கொள்ளலாம். மேலும், வழிபாட்டுப் பயனால் வாழ்க்கையில் ஒளிதரும் சக்தியாக நாகவழிபாடு, நாகபூஷணி அம்பாள் வழிபாடு இருந்து வந்துள்ளமையும் இங்கு எடுத்துக் காட்டுவது மிகவும் பொருந்துவதாகும்.

இனி மணிமேகலை மூல நூலில் வரும் தீவு, மணிபல்லவம், நாவலந்தீவு, மாமணிபல்லவம், தீவகம், நாகநாடு, நாகநன்னாடு என வரும் சொற்களைக் கொண்ட தொடர்களை எடுத்து நோக்குவாம்.

1. ''நாவலோங்கிய மாபெருந் தீவினுள்''[19]

2. ''திரையுடுத்த மணிபல்லவத்திடை''[20]

3. ''மணிமேகலை தனை மணிபல்வலத்திடை''[21]

4. ''வஞ்சமில் மணிபல்லவத்திடை வைத்தேன்''[22]

5. ''கீழ் நிலமருங்கின நாகநாடாளும்''[23]

6. ''மணிபல்லவத்திடை மணிமேகலைதான்''[24]

7. ''மணிமேகலா தெய்வம் மணிபல்லவத்திடை''[25]

8. ''கால்விசை சுகக் கடல் கலிக்குறுதலின்
மாலிதை மணிவல்லவத்திடை வீழ்த்துத்''[26]

9. ''மணிபல்லவத்திடை மன்னுடன் பிட்டுத்''[27]

10. ''பிணி நோய் இன்றியும் பிறந்தனம் செய்ய
மணிபல்லவத்திடை மன்னுயிர் நீத்தோன்''[28]

11. ''மணிபல்லவத்திடை மன்னுயிர் நீத்தோன்''[29]

12. ''தலைமைகள் தோன்றி
மணிபல்லவத்திடை, என்னையாங்குய்த்துப்
பிணிப்பறு மாதவன் பீடிகை காட்டி''[30]

13. ''மணிபல்லவம் வலம் கொண்டால் அல்லது
பிணிப்புறு பிறவியின் பெற்றியை அறிவாய்''[31]

14. ''மணிபல்லவம் வளங் கொள்வதற்கெழுந்த''[32]

15. ''நாக நன்னாடு ஆள்வோன் தமைகள் பீலிவளை''[33]

16. ''நாவலந்தீவின் தானனி மிக்கோன்''[34]

17. ''கோமுகியென்றும் கொழு நீர் இலஞ்சியோடு
மாமணிபல்லவம் வந்ததீங்கெனப்
பொய்கையும் பொழியும் புனைமின்''[35]

18. ''அத்தீவகம் போன்ற சாவலதம்'' (அந்த மணிபல்லவத் தீவினைப் போன்றே)[36], மேற்போந்த வரிகளிலுள்ள ஒவ்வொரு சொற்களும் நயினாதீவே மணிபல்லவம் என்பதனை நிறுவப்போதுமானவையாகும். நுண்மான் நுழைபுலம் மிக்கோர் ஆழமாகச் சிந்தித்து இக்கருத்துகளை மேலும் விரித்து விளக்கி எழுதலாம் என்பதையும் குறிப்பிட விழைகிறேன். ஏனெனில் இக்கட்டுரையிலே இவற்றிற் கான விளக்கம் விவரிக்கப்படின் 'கட்டுரை நீட்சி' பெறும். அளவு வரையறை கருதியும் இனி வருங்கால ஆய்வாளர்களுக்கு இடமளித்தும் விளக்கங்களை விரிவஞ்சி விடுத்தோம்.

இரத்தினதீபம் என்பது மணிபல்லவத்துக்கு அருகே உள்ளதான மற்றொரு தீவு. இலங்கை என்று கருதுவோரும் உளர். 'நாகநாடு' என்பது நாகர்கள் வாழ்ந்த நாடு. 'மணிபல்லவம்' புகாருக்கு முப்பது யோசனை தூரத்திலிருந்த ஒரு தீவு என்னும் கருத்துகள் உள்ளன.

**நாகரும் இலங்கையின் ஆதிக்குடிகளும், நாகர் வரலாறு:**

உலகின் பல்வேறு பாகங்களிலும் நாகரிகம் முதலில் தோன்றிய இடங்களில் நாகர்கள் வாழ்ந்ததாகப் பெறப்படுகிறது. எகிப்து, கிரேக்கம், மொசப்பட்டேமியா, உரோமாபுரி, இந்து நதிப் பள்ளத் தாக்கு, மத்திய அமெரிக்காவின் மாயா நாகரிகம் தோன்றிய இடம், ஆபிரிக்கா, ஜப்பான், கொரியா, கம்போடியா முதலிய இடங்களில் நாகர்கள் வாழ்ந்தனர். நாகர்கள் வாழ்ந்த இடங்களில் எல்லாம் நாகவழிபாடும் இருந்ததற்கான ஆதாரங்கள் பெறப்பட்டுள்ளன. நாகரிகம் என்ற சொல் 'நாகர்' என்ற சொல்லின் அடியில் பிறந்ததாக மொழியியலாளர் கூறுகின்றனர். நாகர் + இயம் = நாகரியம் என்றாகி அது திரிவுபட்டு நாகரிகம் என்றாகியது என்பது இவர்கள் கருத்து. நாகத்தை வழிபட்ட காரணத்தால் இப்பெயர் பெற்றனர் என்ற கருத்தும் உண்டு.[37]

**இந்தியாவுக்கு நாகர் வருகை**

ஆரியர்கள் வருவதற்கு முன்பே நாகர்கள் இந்தியாவுக்குள் வந்துள்ளனர். இந்தியாவின் வடபகுதியில் இருந்த நாகர்கள் ஆரியர் வருகையால் தெற்கு நோக்கித் தள்ளப்பட்டு டெக்கான் (தக்கணப்) பள்ளத்தாக்கு மற்றும் தெற்கில் இலங்கை வரை சென்றனர் என ஏ. கே.முசும்தர் (A.K. Musumdar) என்ற வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அவர் மேல்வருமாறு கூறுவர்.

> 'நாகர்கள் தீபத்தின் பர்மியர்கள் ஆசியாவில் ஏற்பட்ட அரசியல் பிரச்சினைகளினால் இவர்கள் இந்தியாவின் வடக்குப் பாதைகளின் ஊடாகத் தெற்கு நோக்கித் தள்ளப்பட்டனர்' என்று கூறுகிறார்.[38]

வட இந்திய இலக்கியங்கள் நாகர் பற்றிக் குறிப்பிடும்போது, அவர்கள் அழகானவர்கள், புத்திசாலிகள் என்றும், அவர்கள் வாழ்ந்த இடம் மிகுந்த செல்வச் செழிப்பு உள்ளது என்றும், தேவர்கள் கூட அவர்களை வென்று அவர்கள் செல்வத்தைப் பெற விரும்பினர் என்றும் கூறுகின்றனர். தமிழிலும் பிற மொழிகளிலும் உள்ள கதைகள் கூட நாகலோகத்துடன் தொடர்புடையன வாகப் புதையல் தேடி நாகலோகம் செல்வது வீரத்துக்கு ஒரு சவால் என்றும், நாக கன்னிகைகளை மணப்பது என்றும் பல கருத்துகளின் பின்னணியில் அமைந்திருந்தன. இத்தகைய கதைகள் எல்லாமே ஆரியர் வருகைக்கு முற்பட்ட காலச் சமுதாய அமைப்பிலேயே பின்னப்பட்டுள்ளன. மகா அலெக்சாண்டர் இந்தியாவுக்குப் படையெடுத்து வந்தபோது 'தக்ஷா' எனப் பட்ட நாகரிகர்களைச் சந்தித்ததாகக் கூறியுள்ளனர். நாகபூர், அஸ்ஸாம், வங்காளம், ஒரிஸ்ஸா முதலிய இடங்களில் வாழ்ந்த நாகர்கள் வடக்கு நாகர்கள் என்றும, தென்னிந்தியாவில் வாழ்ந்த மறவர் அகமுடையர், கள்ளர் எனப்பட்ட இனத்தவர் தெற்கு நாகர்கள் வழிவந்தவர்கள் என்றும் கொள்ளப் படுகிறது.

நாகர்களின் அடையாளமாகப் பல இடங்களின் பெயர்கள் உள. நாகர் கோவில், கம்பில்யாவிலும் வேறு பல இடங்களிலும் நாகர்கள் இருந்ததாகக் கூறுகின்றன. குப்தப் பேரரசின் அரசனான சமுத்திரகுப்தனால் அலகாபாத்தில் நிறுவப்பட்டுள்ள தூண்களில் பொறிக்கப்பட்ட பெயர்களில் நாகதத்தன், நாகசேனன் என்பவை இடம்பெற்றுள்ளன. நேபாளம், காஷ்மீர் ஆகிய இடங்களில் பண்டைய அரசர்களின் பெயர் வரிசையில் நாகர்ஜுனா என்ற அரசன் பெயரும் இடம்பெற்றுள்ளது. சாளுக்கிய அரசனான 2 ஆவது புலிகேசியின் மருமகன் பெறாமகன் (Nephew) நாகவர்த்தனா எனப்பட்டவர். 2 ஆம், 3 ஆம் நூற்றாண்டுகளில் பலம் வாய்ந்த நாக அரசர்கள் நாகபூரில்

வாழ்ந்தனர். இவர்கள் சாதவாகனர், பல்லவர் முதலானோருடன் திருமண உறவுகள் கொண்டிருந்தனர். கி.பி. 800 ஆம் ஆண்டளவில் கூர்ச்சரர்களின் அரசனாக நாகபட்டன் என்பவன் இருந்தான். 11 ஆம் நூற்றாண்டின் பின்னர் கூட இந்தியாவின் மத்திய மாகாணங்களில் போகவதி, பஸ்றுர் (Bogawait, Bastur) எனப்பட்ட இடங்களில் இருந்த அரசுகள் புலியையும் பாம்பையும் சின்னங்களாகக் கொண்டு இருந்தனர்.

பண்டைய இந்தியா மகதம், நாகதீபம், குப்தம் என்ற மூன்று பெரும் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. நாகதீபம், நாவலந்தீவு என்றும் அழைக்கப்பட்டது. தென்னிந்தியாவின் பெரும் பகுதியை உள்ளடக்கிய பகுதியான நாகதீபம், போகவதி என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டிருந்தது.

இது காலப்போக்கில் பல பகுதிகளாகப் பிரிந்தது. இவ்வாறு பிரிந்து சென்ற பகுதிகளில் கடலாற் பிரிக்கப்பட்ட ஒரு பகுதியே இலங்கை எனக் கொள்ளப்படுகிறது. இக்காரணம் பற்றியே இலங்கைக்கு 'நாகதீபம்' என்ற பெயரும் நிலைத்தது.[39]

மட்டக்களப்பு மான்மியத்தின்படி கலியுகம் பிறந்து 800 ஆண்டுகளில் நாகர் ஈழத்துக்கு வந்தனர் எனப் பெறப்படுகின்றது. அது கி.மு. 1883 (கி.மு. 19 ஆம் நூற்றாண்டு) ஐந்தாம் நூற்றாண்டிலேயே விஜயன் இலங்கைக்கு வந்தான். அதற்கும் 1400 வருடங்களுக்கு முன்பிருந்தே கி.மு. 3283 கி.மு. 4 ஆம் நூற்றாண்டு) ஈழத்தில் நாகர்கள் வாழ்ந்துள்ளனர். மகாபாரதமும், இராமாயணமும் கதைகளாகக் கொள்ளப்பட்ட போதும் நாகர்கள் என்ற இனத்தவர் இந்தியாவின் தென்கரையில் வாழ்ந்தனர் என்பதற்கு இவை ஆதாரங்களாகின்றன.[40]

இவ்வாய்விலே வரலாற்றுக்கு முற்பட்ட காலம், வரலாற்றுக் காலம் (பிற்பட்ட காலம்) எனவரும் விடயங்கள் அவதானத்திற்குரியன. நாகர்களது வரலாறு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தது. நாகர், இயக்கர், வேடர் எனும் ஆதிவாசிகள் பற்றியது. பிற்பட்ட கால வரலாற்றாசிரியர்கள் தத்தம் அறிவு, ஆளுமை, நுண்ணறிவு, இயல்புகள், கற்பனைகள், நுட்ப முறைகள் என்பன வற்றைப் பயன்படுத்தியே வரலாற்று ஆவணங்களைச் சான்றுகளாகத் தந்துள் ளனர். நூல்கள், கட்டுரைகள், கட்வெட்டுகள், பிறர் குறிப்புகள் என்பனவற்றின் மூலம் கற்றறிய முடிகின்றது. ஆட்சி, ஆவணம், சாட்சி எனும் மூன்றாலும் இக்கட்டுரையின் கருத்துகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

மகாபாரதமும் ஈழத்தில் வடபகுதியிலே இருந்த நாகர்களது அரசு பற்றிய தகவலை நமக்குத் தருகிறது. பஞ்சபாண்டவர்களில் ஒருவனான

அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை மேற்கொண்டு இந்தியாவின் பல திருத்தலங் களைத் தரிசித்தவாறு தெற்கு நோக்கி வந்ததாகவும், அப்போது அவன் நாக இளவரசியான சித்திராங்கி என்பவளைச் சந்தித்து அவளை மணந்ததாகவும் கூறப்படுகிறது. அவன் இந்த இளவரசியைச் சந்தித்த தீர்த்தத்தலம் தற் போதைய கீரிமலை என்பது யாழ்ப்பாண வைபவமாலை தரும் தகவல். மகாபாரதக் காலம் கி.மு. 200 எனக் கொள்ளப்படுகிறது. 'மணிபுரம்' இருந்த நாகர்களின் பிரதேசம் இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்திருக்க வேண்டும்.[41]

கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் அதாவது சிவகணங்களின் முன்னோன் எனக் கருதப்டும் விஜயன் வருகையின்போது, நாகர்களின் பிரதான இருப் பிடங்களாக இருந்தவை ஈழத்தின் வடபகுதியும் வடக்கில் இருந்து மேற்குக் கரையோரமாகக் களனி வரையுள்ள பகுதிகளுமாகும். தெற்கே திசை மகாராமையிலும் கிழக்கே கொட்டியாரத்துக்கு அண்மையில் வரையிலும் மாத்தளைக்கு வடக்கே லேனதொர என்னும் இடத்திலும் நாக இராசதானி களாகவும் தமக்கெனச் சொந்தமான அரசுகளைக் கொண்டவர்களாகவும், இருந்தனர் என்பது பௌத்தக் கதைகளில் இருந்தும் தெளிவாகிறது. அவற்றில் புத்தர் மூன்று முறைகள் இலங்கைக்கு வந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு அவர் வந்த ஒரு முறையின் போது வடக்கில் மகோதரன் என்ற நாக அரசன் ஆட்சி செய்ததாகவும், இருவருக்குமிடையில் ஒரு இரத்தினம் பதித்த சிம்மாச னத்துக்கு ஏற்பட்ட பிணக்கை அவர் தீர்த்து வைத்து அந்தச் சிம்மாசனத்தில் இருந்து அவர்களுக்கு உபதேசம் செய்ததாகவும் கூறப்படு கின்றது. இதனை மேலும் வலியுறுத்துகிறது ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை.

*இருங்கடல்*
*வாங்கு திரையுடுத்த மணிபல்லவத்திடைத்*
*தையாலோ வென்றமுவான் முன்னர்*
*விரித்திலங்கவிரொளி சிறந்து கதிர்பரப்பி*
*யுரைபெறு மம்முரு நீலமிசை யோங்கித்*
*திசைதொறு மொன்யான் முழுநில மகன்று*
*விதிமாணாடியின் வட்டங்குயின்று*
*பதும சதுரமீமிசை விளங்கி*
*யறவோற் கமைந்த வாசன மென்ற*
*நறுமலரல்லது பிற மரஞ் சொரியாது*
*பறவையு முதிர் இறையாங்கு சென்றதிராது*
*தேவர் கோனிட்ட மாமணிப் பீடிகை*
*பிறப்பு விளங்கவிரொளி யறத்தகையாசனங்*

*கீள் நில மருங்கி நாக நாடாளு*
*மிருவர் மன்னவரொடு வழித்தோன்றி*
*யெமதீதென்றே யெழுகலாற்றார்*
*தம்பெரும் பற்று நீங்கலு நீங்கர்*
*செங்கண் சிவந்து நெஞ்சு புகையுயிர்த்து*
*தம்பெருஞ் சேனையொடு வெஞ்சினம் புரிநா*
*ளிருஞ் செரு வொழி மனெமைதீ தென்றே*
*பெருந்தவமுனி வனிருந் தறமுரைக்கும்*
*பொருவறு சிறப்பின் புரை யோரத்துந்*
*தரும பீடிகை.*[42] *(மணிமேகலை, 8, 1-2, 43-63)*

சங்ககாலப் புலவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளோரின் பெயர் களில் நாகர் எனப் பெயர் பெறும் 18 புலவர்கள் பற்றி அறிய முடிகிறது. முதற்சங்க காலத்து முரிஞ்சியூர்முடி நாகனார் தொடக்கம் அம்மெய்ய நாகனார், இளநாகனார், இனிசந்த நாகனார், சங்ககாலப் பொற்கொல்லன் வெண்நாகனார், தீன்மத்த நாகனார் நன் நாகனார், மதுரைக் கடையத்தார் வெண்நாகனார், மதுரைப் பூதன் இளநாகனார், மதுரைப் பெருமதி நாகனார், மருதநில நாகனார், முப்போ நாகனார், விரிச்சியூர் நன்நாகனார், வெள்ளைக்குடி நாகனார் என்னும் ஆண்பாற் புலவர்களும் அஞ்சியத்தை மகள் நாகையார், நன்நாகையார் எனும் இரு பெண்பாற் புலவர்களும் நாகர் குடி வழிவந்த தமிழர்களே.[43]

'நாகர்கள்' எனப்படுவோர் நரமாமிசம் உண்போர், ஆடையின்றித் திரிவோர் என்ற கருத்துகளும் அவற்றிற்கெதிரானவகையிலே நற்பண்பினர், நாகரிகர்கள், புத்திசாலிகள், சமய ஒழுக்கங்களைக் கைக்கொள்பவர்கள், எழுத்தின் முன்னோடிகள், அறிவுடைமையும் புலமையும் திறனும் மிக்கவர்கள் என்றும் கூறப்பட்டு வருகிறது. தத்தம் சார்பு நிலையில் இவை கூறப்படுவன வாயினும் 'உண்மை கண்டறிவது' என்பதே 'மெய்ப்பொருள் காண்பது' என்பது மனித வரலாற்றிலே 'நல்லதும் கெட்டதும்', 'பலமும் பலவீனங்களும்', 'ஒளியும் இருளும்', 'நன்றுந் தீதும்' ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல இணைந்தே இயங்குகின்றன. தம்மையே புகழுவோரும், புளுகுவோரும் மனிதக் குணங்களிவை என்ற இரு வகையினர் மத்தியில் இயல்புகளை இயல்பு களாகவே நோக்குவோரும் இல்லாமலில்லையல்லவா? அதாவது கருத்துகள் ஆய்வு முடிகளாகா. சமுதாயவியலில் இடம்பெறும் ஆய்வுமுடிவு களும் மாறிலிகளல்ல. ஒருவேளை விஞ்ஞான ஆய்வுகள் தீர்க்கமான முடிவு களாயமையக் கூடும். ஆனால் கலை, பண்பாட்டு, வரலாற்றாய்வுகள் முடிந்த முடிவுகளல்ல. மாற்றங்களுக்குட்படுபவை.

ஈழவரலாற்றுப் பதிவுகள் என்னும் நூலிலே, எழுதும் கலையும் நாகர்களிடமிருந்தே ஆரியர்களுக்கு அறிமுகமாகியது என்பது ஆராய்ச்சியாளர் கருத்து''[44] என்று வருவது கவனித்தற்குரியது

> நாகர்களிடமிருந்து பரவிய (பிராமி) எழுத்துக்கள் சமஸ்கிருத மொழியின் எழுத்து வடிவத்தைப் பாதித்ததாலேயே இன்றுவரை சமஸ்கிருத எழுத்துக்கள் 'தேவநாகரி' எனப் பெயர் பெற்றுள்ளன.[45]
>
> நாகர்கள் கலைகளில் குறிப்பாக நெசவில் வல்லவர்களாக இருந்தனர். தமிழ்நாட்டின் கிழக்கில் பாண்டிய நாட்டின் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த நாகர்கள் மிகச் சிறந்த நெசவாளர்களாக இருந்து மெல்லிய மஸ்லின் துணிகளையும் நெய்தனர். ஏற்றுமதியுஞ் செய்தனர். கலிங்க தேசத்தின் நாகர்கள் நெசவில் காட்டிய திறமையையொட்டித் தமிழில் 'கலிங்கம்' என்ற சொல் துணியைக் குறிப்பதாக உள்ளது.[46] 'பழசி முண்டு' என்பது பழைய நகர் என்பதன் திரிபு.[47]
>
> அநுராதபுரம் தலைநகராக்கப்படு முன்னர் நாகர்கள் குதிரை மலையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். குதிரைமலை என்பது பாண்டியர்களின் குறுநில அரசுகளில் ஒன்றாக இருந்தது என்பது சங்கநூல்களின் மூலம் அறியக்கிடக்கிறது.[48]
>
> ஆமூர் என்ற இடத்தில் அரசபீடம் அமைத்து நல்லியக்கோன் ஈழத்தை ஆண்டதற்கான ஆதாரம் சிறுபாணாற்றுப்படையில் வருகிறது. நல்லியக்கோன் ஓவியர் எனப்பட்ட நாகர்களின் தலைவன்.[49]
>
> தென்னிந்தியர்களையும் ஈழத்தவரையும் நாகர்களிடமிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாது. அவ்வாறே தென்னிந்தியாவிலும் ஈழத்திலும் இருந்த நாகர்களைத் தமிழ்மொழி பேசிய இனத்தவர்களிடம் இருந்து வேறுபடுத்தவும் முடியாது.[50]

நாகர்களது அரசுகள் யாழ்ப்பாண இராச்சியம் என்ற ஒன்று நிறுவப்படும் முன்னரே ஈழத்தின் வெவ்வேறு பகுதிகளில் இருந்துள்ளன. குறிப்பாக, வடக்கில் வன்னி உட்பட வடக்கு, வடமேற்கு, கிழக்குக் கரையெங்கும் இவை இருந்துள்ளன. நாகர்கள் பேசியமொழி தமிழ் என்பதற்கு ஆதாரமாகச் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள நாகர்களது செய்யுட்கள் பற்றியும் அறிந்தோம். வல்லிபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட தங்கத்தகடு ஒன்பது பிராகிருத (பிராகிரிட்) தமிழில் அமைந்துள்ளது. இது கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக் குரியது. இதில் யாழ். தீபகற்பம் முழுவதையும் நாகநாடு என்று குறிப்பிட்டுள்ளதாக இதனை வாசித்தோர் கூறியுள்ளனர்.[51]

> நாகதீபம் என்ற பெயர் ஒரு காலத்தில் இந்திய பெருநிலத்தில் ஒரு பெரும் பகுதியைக் குறிப்பதாக இருந்து, பின்னர் இலங்கைத்தீவு இந்தியத் தீபகற்பத்தில் இருந்து பிரிந்தபோது இலங்கையைக் குறிப்ப தாக அதற்கும் பின்னர் இலங்கையின் வடபகுதியைக் குறிப்பதாகி இன்று நயினாதீவு என்ற சிறுதீவைக் குறிப்பதாக மாறியுள்ளது.[52]

நாகர்கள் வாழ்ந்த 'நாகநாடு' என்பது முழு இலங்கையையும் குறித்தாலும் நாகர்கள் பிரதானமாக வாழ்ந்த பிரதேசம் ஈழத்தின் வடக்கும் வடமேற்கும் ஆகும். இராசதானிகள் நிறுவப்படாத மிகமுற்பட்ட காலத்தில் தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக இருந்த ஈழத்தில் குறுநில மன்னர்களால் இப்பிரதேசம் ஆளப்பட்டது என்பதற்குச் சங்க இலக்கியங்கள் நமக்குச் சான்று பகருகின்றன. இப்பகுதி பண்டைய தமிழ், பாளி இலக்கியங்களிலும் 'நாகநாடு' என்ற பெயராலேயே குறிப்பிடப்படுகின்றது. குதிரைமலை, கொற்கை, மாந்தை முதலிய இடங்களிலும் சிற்றரசர்கள் இருந்து ஆட்சி செய்துள்ளனர். நாகநாடு என்ற இப்பகுதி மணிபுரம், நாகதீபம், மணிநாகதீபம், மணலூர், மணல்புரம், மணவை என்றும் அழைக்கப்பட்டது.[53]

> மகாபாரதகாலம் கி.மு. 1600 எனக் கொள்ளப்படுகிறது. பஞ்ச பாண்டவர்களில் ஒருவரான அர்ச்சுனன் மணிபுரத்தில் இருந்த நாக இளவரசி சித்திராங்கியை மணந்த வரலாறு இருந்ததையும் இங்கு வாழ்ந்த மக்களும் சிறப்புற வாழ்ந்ததையும் அறிய முடிகிறது.[54]

இலங்கையில் நாகர்களுடன் ஆரம்பிக்கும் தமிழர் ஆட்சியின் வரலாறு குதிலைமலையைத் தலைநகராகக் கொண்டு ஆரம்பிக்கிறது.[55]

> கி.மு. 200 க்கும் கி.பி. 200 க்கும் இடைப்பட்ட புறப்பாட்டுக்களில் ஒன்றான சிறுபாணாற்றுப்படையில் வரும் பாடல்கள் சில நன்நாகனார் என்பவரால் இயற்றப்பட்டவை. இவர் வட இலங்கையைச் சேர்ந்த நாகர் சங்க இலக்கியத்தில் இடம்பெறுமளவு சிறந்த தமிழ்ப்பாடல் களை நாகர்கள் பாடியது அவர்களுக்குத் தமிழில் இருந்த புலமையை வெளிப்படுத்துகிறது.[56]

> கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் கிள்ளிவளவன் என்ற சோழ அரசன் மணிபல்லவத்தின் இளவரசியான பீலிவளை என்பவளை மணந்து அவர்கள் மகனான இளந்திரையனுக்குச் சோழ நாட்டின் ஒரு பகுதி யான தொண்டை மண்டலத்தை வழங்கினான் என்று வேலூர் பாளையச் சாசனங்கள் தெரிவிக்கின்றன. இச்சாசனங்கள் இளந்திரை யனது நாகநாட்டுப் பூர்வீகம் பற்றித் தெரிவிக்கின்றன. (ஆதாரம்: Annual report of the madras Government Epigraphist, p. 1910-1911)

> இளந்திரையனே தனது தாயின் பிறப்பிடமான மணிபல்லவத்தின் பெயரால் பல்லவ அரசை நிறுவியவன்.[57]
>
> யாழ்ப்பாணமும் பல்லவர் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்பதற்குச் சான்றாகப் பல்லவராயன்கட்டு என்றும் ஊர்ப்பெயரும் நன்னீ முதலிய ஆட்பெயரும் போத்தரையர் என்னும் தெய்வப்பெயரும் விளங்குகின்றன.[58]
>
> மணிமேகலை என்ற காப்பியம் கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்குரியது. இது நாகநாட்டு அரசனாக இருந்தவன் வளைவாணன் என்று குறிப்பிடுகிறது.[59]

''கடற்பாதைகளுக்கான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கல்வளை அமைந்துள்ளமையைப் பேராசிரியர் கலாநிதி பொன்னம்பலம் இரகுபதி விவரித்துள்ளமை இவ்வாய்ப்புத் தொடர்பில் பிரதானமான தொன்றாகும். பேராசிரியரின் கூற்று வருமாறு:

> கல்வளை அமைந்துள்ள இடம் கடற்பாதைகளுக்கான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம். வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி என்ற நான்கு எல்லைகளுக்கும் மையமாக இது அமைந்துள்ளது.[60]
>
> சிவஞானசுந்தரம் எழுதிய ''தமிழ் இலக்கிய இலக்கணப் பேழை'' என்னும் நூலில் மணிமேகலை குறித்து மேல்வருமாறுள்ளது.
>
> பிறப்புக்குக் காரணம் எதுவோ அதுவே இறப்புக்கும் காரணமாகும்.'' எனக் கூறி இவ்வுலகத்தில் பௌத்த தர்மங்கள் குறையப் பாவம் மிகுந்தன எனக் கூறி, மணிபல்லவத்தில் பெற்ற அமுதசுரபி பசி தீர்த்தலைக் காட்டிச் சமயக் கருத்தை வலியுறுத்திப் பௌத்த தர்மம் பெருக உலகில் பாவம் ஒழியும் என்பர்.[61]

பண்டிதர் மயில்வாகனனார் பாடிய 'காரைநகர் ஆண்டிகேணி ஐயனார் புராணம் (பாட்டும் உரையும்' என்ற நூலில் (ப. 118) மணிபல்லவம் பற்றிப் பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்களது கருத்தொன்று முன்மொழியப் பட்டுள்ளது. நூலில் இடம்பெறும் வரிகள் வருமாறு:

> 'மணிபல்லவம்' என்பது யாழ்ப்பாணப் பகுதிகளுள் ஒன்றான 'காரைத்தீவு' ஆகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.[62]

இத்தொடர்பில் சுயநலத்தினை மேவிய வரலாற்று நேர்மையுடன் ச.ஆ. பாலேந்திரன் 'காரைநகர் தொன்மையும் வன்மையும்' (2002) என்ற நூலை

வெளியிட்டுள்ளார். 'மணிபல்லவத்தீவு' என்ற தலைப்பில் பக். 19-64 வரை) காரைநகரே 'மணிபல்லவத்தீவு' என நிறுவ முற்பட்டுள்ளார். இந்நூலிலே மணிமேகலை, காரைநகர் மான்மியம், யாழ்ப்பாணச் சரித்திரம், ஈழத்தார் வரலாறு என்னும் நூல்களை ஆதாரமாக எடுத்தாண்டுள்ளதுடன், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, டாக்டர் கு. பகவதி, பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் போன்றவர்களின் கருத்துக்களையும் எடுத்துக்காட்டித் தமது கருத்தை வலியுறுத்தியுள்ளார் ஆய்வாளர் ச. ஆ. பாலேந்திரன். இக்கட்டுரையிலே ஏலவே எடுத்துக் கூறப்பட்டுள்ள கருத்துகளில் ஒரேயொரு கருத்து - இன்றைய நடைமுறையிலும் நாகவழிபாட்டுத் தொன்மையுடையது மணிபல்லவம் எனப்படும் நயினாதீவே என்பது தான் பிரத்தியட்சமானது என்பதாலும் 'அமுதசுரபி' பற்றிய தொன்மை நவீன நடைமுறையுடன் பொருந்துவதாய் இன்றும் தினசரி அன்னதானம் நிகழும் பீடமாகவும் நயினாதீவு இலங்குவதும் பிரத்தியட்சமே. பொருத்தப்பாடுகள் கருதியும், அண்மைக்காலப் பல்கலைக் கழக ஆய்வறிஞர் என்னும் தகைமையாலும் பேராசிரியர் கலாநிதி பரமு புஷ்பரத்தினம் அவர்கள் கொண்டுள்ள கருத்துகளை இனி நோக்கலாம்.

கலாநிதி புஷ்பரத்தினம் முதலிலே கருதுவது 'நயினாதீவில் கிடைத்த கல்வெட்டு' ஆகும். தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு'' என்னும் நூலில் இடம்பெற்றுள்ள கருத்துகள் வருமாறு:

> சிங்கள மன்னர் ஆட்சியில் காணக்கூடிய இன்னொரு மாற்றம் கல்வெட்டுக்களைச் சிங்களத்திலும் தமிழிலும் வெளியிட்டதாகும். இதன் மூலம் சிங்கள நிர்வாகத்தில் முதன் முறையாகத் தமிழும் ஆட்சிமொழியாகி மாறியதாகும். இக்கால அரச அதிகாரிகள் தமிழ் மக்களோடு கொண்ட தொடர்புகளைத் தமிழிலேயே பதிவு செய்தனர். விஜயபாகு கால பனாகடுவ செப்பேட்டில் தமிழ் எழுத்தாளர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. (Ray, 1960: 543) ஸ்ரீ சங்க போதி விஜயபாகு என்ற மன்னனைக் குறிக்கும் நான்கு கல் வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் பொலநறுவை, பால மோட்டை ஆகிய இடங்களில் கிடைத்த இரு கல்வெட்டுக்கள் முதலாம் விஜயபாகு காலத்தைச் சேர்ந்ததேயாகும். (பத்மநாதன், 1971-72: 13-26) இவனுக்குப் பின்னர் ஆட்சி செய்த மன்னர்களும் தமிழில் கல்வெட்டுக்களை வெளியிட்டுள்ளனர். இதற்கு நயினாதீவில் கிடைத்த முதலாம் பராக்கிரமபாகு காலக் கல்வெட்டைக் குறிப் பிடலாம்.''[63]

> ''பண்டு தொட்டு அநுராதபுர அரசிற்கு வடக்கில் உள்ள பிராந்தியம் நாகதீபம்''[64]

''இடைக்காலத்தில் தென்னிந்திய வம்சம் ஒன்று நாகதீபத்தின் மீது படையெடுத்ததாகச் சூளவம்சம் கூறுகிறது. சாவகன் அரசு நாகநாடு எனப்படும் வட இலங்கை என்று தெரிகிறது.''[65]

இவ்வாய்வாளருக்குப் பல்கலைக்கழத்திலே எமக்கு வரலாறு கற்பித்த பேரறிஞர், பேராசிரியர், கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலா அவர்களது கருத்தொன்றைப் பேராசிரியர், கலாநிதி ப. புஷ்பரட்ணம் மேற்கோள் காட்டுகிறார்.

யாழ்ப்பாணம் என்னும் பெயர் 15 ஆம் நூற்றாண்டில் ஏற்படும் வரை இது மணற்றி, மணலை, மணற்றிடர் என அழைக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. (இந்திரபாலா, 1972:63). சூளவம்சம் நான் காம் மகிந்தன் வல்லபன் நாகதீபத்தின் மிது படையெடுத்துத் தோல்வி யடைந்தான் எனக் கூறுகிறது (53:12-16). இச்சம்பவத்தை வெசகிரியில் கிடைத்த கல்வெட்டும் உறுதிப்படுத்துகிறது. (E:Z:1 35-5) இப்படை யெடுப்பை மேற்கொண்ட மன்னனைச் சிலர் ராஷ்ர கூடர் எனவும், வேறு சிலர் இரண்டாம் பராந்தகன் எனவும் கூறுவர். இவன் யாராக இருப்பினும் போர் நடந்த இடம் நாகதீபம். இப்போர் நாக தீபத்தைக் கைப்பற்ற நடந்ததா அல்லது நாகதீபத்திலிருந்து அநுராதபுர அரசைக் கைப்பற்ற நடந்ததா என்பது தெரியவில்லை. ஆனால் பாளி இலக்கியத்தில் வழக்கத்திற்கு மாறாகத் தென்னிந்தியப் படையெடுப்போடு 'நாகதீபம்' தொடர்புபட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது.[67]

வடமொழியில் 'உரக' என்பதற்குப் பாம்பு, நாகம், நாகர் (உரகர்) என்பல கருத்துண்டு. யாழ்ப்பாணப் பேரகராதியில் இதற்கு நாகவல்லி, மலை போன்ற கருத்துகள் உண்டு (T. L. 438). ஏறத்தாழ இதே கருத்தையே 'அக' என்ற சொல்லும் குறித்து நிற்கின்றது. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் நாகம் என்பதைக் குறிக்க 'உரக' என்னும் நாகரைக் குறிக்க 'உரகர்' என்ற சொல்லும் பயன்படுத்தப் பட்டுள்ளது. இதன்பின் மூவர் தேவாரத்தில் நாகம் என்பதைக் குறிக்க உரகம் என்னும் சொல்லும் பின்னர் ஜெயங்கொண்டார் கலிங்கத்துப் பரணியில் நாகர் என்பதைக் குறிக்க 'உரகர்' என்ற சொல்லாட்சியும் கையாளப்பட்டுள்ளது. (பாலசுப்பிரமணியம், 1988). கி.பி. 8ஆம் நூற்றாண்டில் சோழநாட்டின் காவிரியின் தென்கரையில் உள்ள 'பாம்பூர்' 'உரகபுரம்' என அழைக்கப்பட்டதைப் பல்லவர் காலக் கூரம் செப்பேடுகள் கூறுகின்றன (பல்லவ செப்பேடுகள் முப்பது: 44,65) இவ்வுரகபுரத்தை அறிஞர் சிலர் உறையூர் எனவும் கருதுகின்றனர். (வேங்கடசாமி, 1983 : 251) பிற்காலத்திலே இலங்கையில் பௌத்த மதத்தைப் பரப்பிய புத்ததத்தர் இவ்வுரகபுரத்திலிருந்தே

பாளிமொழியில் பலநூல்களை எழுதியவர் என்பது குறிப்பிடத் தக்கது.[68]

ஆதியில் இலங்கையில் வாழ்ந்த மக்களில் ஒரு பிரிவினரை நாகர் எனப் பாளி நூல்கள் கூறுகின்றன. கி.பி. 1 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 80 கல்வெட்டுக்கள் நாகமக்கள் பற்றியும் 'நாக' என்ற பெயரிலுள்ள சிற்றரசர்கள் பற்றியும் கூறுகின்றன. பாளி நூல்கள் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த 'நாக' என்ற பெயரிலுள்ள பல மன்னர்களைப் பற்றிக் கூறுகின்றன. வட இலங்கையில் கிடைத்த நான்கு பிராமிக் கல்வெட்டுக்கள் நாக சிற்றரசர்கள் பற்றிக் கூறுகின்றன. கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் தமிழர் படையுடன் வந்து ஸ்ரீநாக என்பவன் வட இலங்கையைக் (உத்திரதேசம்) கைப்பற்ற முற்பட்டான் எனச் சூளவம்சம் கூறுகிறது (44:703).[69]

ஆதியில் நாக என்ற பெயர் இலங்கையில் பரந்துபட்ட மக்களோடு தொடர்புடையதாக இருந்தாலும் காலப்போக்கில் அப்பெயர் பெரும்பாலும் தமிழ் மக்களுடன் தொடர்புடையதாக இருந்து வருவதை இன்றும் வழக்கி லுள்ள நாகன், நாகி, நாகம்மாள், நாகமுத்து, நாகநாதன், நாகராசா, நாக வண்ணன் போன்ற ஆட்பெயர்களும், நாகபடுவான், நாகமுனை, நாகர் கோயில், நாகதேவன்துறை, நாகதாழ்வு போன்ற இடப்பெயர்களும் உறுதிப் படுத்துகின்றன. பண்டைய கல்வெட்டுகளிலும், மட்பாண்டங்களிலும் வரும் 'ம' என்ற ஒலிப் பெறுமானத்தைக் கொடுக்கும் பிராமி எழுத்தையொத்த குறியீட்டை நாகர்களின் குலச்சின்னமாகக் கூறும் பேராசிரியர், கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை, அக்குறியீடு இலங்கையின் ஏனைய வட்டாரங்களைவிட, வட இலங்கையில் கூடுதலாகக் காணப்படுவதற்கு இங்கு நாக இனமக்கள் வாழ்ந்ததே காரணம் என்றார் (1980:54).[70]

நாக இன மக்கள் பற்றிக் கூறும் பாளி நூல்கள் அநுராதபுரத்திற்கு வடக்கிலுள்ள பிராந்தியத்தை நாகதீபம் எனவும், இங்கு இரு நாக மன்னர்களிடையே நடந்த சிம்மாசனப் போட்டியைப் புத்தர் தீர்த்து வைத்ததாகவும் கூறுகின்றன (MV. Viii: 54) இந்நிகழ்ச்சியை மணி மேகலை, சிலப்பதிகாரத்தில் வரும் சம்பவங்களுடன் தொடர்புபடுத்தி அவற்றில் வரும் நாகநாடு இலங்கையில் உள்ள நாகதீபத்தைக் குறிப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (சிற்றம்பலம், 1993:67-80). கலிங்கத்துப் பரணியில் ஜெயங்கொண்டான் இராசபாரம்பரியம் பற்றிக் கூறும்போது சோழவம்சத்துக் கிள்ளிவளவனின் நாகநாட்டு இளவரசியை மணந்த கதையைக் கூறுகிறார். இதேபோல் பல்லவர் கால வேலூர்ப்பாளையைச் செப்பேடு பல்லவமன்னன் ஒருவன்

> நாகர் குலமகளை மணந்த செய்தியைக் கூறுகிறது. (பாலசுப்பிர மணியம், 1988) ஆயினும், இந்நாகதீபம் எவ்விடத்தைக் குறித்ததென் பதையிட்டு அறிஞர்களிடையே பொதுவான கருத்தொற்றுமை காணப் படவில்லை. சிலர் இவ்விடயம் மகாவலி கங்கைக்கு வடக்கிலுள்ள பிராந்தியம் எனவும், வேறு சிலர் யாழ்ப்பாணம் எனவும், இன்னும் சிலர் நயினாதீவு, எனவும் கருத்துத் தெரிவித்துள்ளனர். யாழ்ப் பாணத்தில் வல்லிபுரம் என்ற இடத்தில் கிடைத்த கி.பி. 3 ஆம் நூற்றாண்டிற்குரிய பொற்சாசனத்தில் நாகதிவ (எ) என்ற பெயர் வருவதைக் கொண்டு இப்பெயர் யாழ்ப்பாணத்தையே குறித்ததாக அறிஞர்கள் பலரும் கருதுகின்றனர். சிலர் இதன் தலைநகர் மணிமேக லையில் வரும் மணிபல்லவம் எனவும், அது தற்போது வல்லிபுரத்தில் உள்ள பல்லப்பை என்ற இடமெனவும் கூறுகிறார், செ. கிருஷ்ண ராசா (1998:25).[71]

வடமத்திய மாகாணத்தில் கிடைத்த இன்னொரு பிராமிக்கல் வெட்டுத் தமிழில் நாகநகர் பற்றிக் கூறுகிறது. கலாநிதி இரகுபதி இவ்விடம் கந்தரோடையைக் குறிக்கலாம் எனக் கருதுகிறார் (பிரசுரிக்கப்படாதது). நிக்லஸ் என்ற அறிஞர் இந்நாகரைக் கி.பி. 9 ஆம் நூற்றாண்டிற்குரிய கல்வெட்டில் வரும் பெயருடன் தொடர்புபடுத்தி இது வவுனியாவின் வட எல்லையில் இருந்த இடமாகக் கூறுகிறார் (1962:81). இதிலிருந்து கல்வெட்டில் வரும் பெயர்கள் அவை காணப்படும் இடங்களை மட்டும் குறித்ததாகக் கொள்ளாது பிற மூலா தாரங்களின் அடிப்படையில் உறுதிப்படுத்த வேண்டும் என்பதைக் காட்டுகிறது.[72]

வட இலங்கையின் குறிப்பிட்ட இடத்தின் பெயராக இருந்த நாகதீபம் படிப்படியாகப் பரந்த பிரதேசத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். தொடக்ககாலப் பாளி நூல்களில் 'நாகதீபம்' என்ற பெயர், பிற்காலப் பாளி நூல்களில் 'நாகதீபம்' உத்திரதேசம் என மாறி மாறி அழைக்கப்பட்டதை இக்கூற்றுக்குச் சார்பாகக் கொள்ளலாம். 13 ஆம் நூற்றாண்டுக்குரிய குடுமியா மலைக் கல்வெட்டில் வரும் நாகநாடு யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட இலங்கையின் பரந்த பிரதேசத்தைக் குறிக்கிறது.[73]

> கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலிருந்து நாகதீபத்துடனான அரசியல் உறவு பற்றிப் பள்ளி இலக்கியங்களில் சில செய்திகள் காணப்படுகின்றன. அவை நாகதீபத்திலிருந்து அநுராதபுர அரசிற்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட படையெடுப்புக்கள், கிளர்ச்சிகள் பற்றியதாக உள்ளன.[74]

> கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 10 ஆம் நூற்றாண்டிற்கு இடைப் பட்ட கால இலங்கை வரலாற்றை ஆராய்ந்தால் இக்காலப் பகுதியில் ஒரு மன்னன் ஆளுகைக்குட்பட்ட அரசு ஒன்று நாகதீபத்தில் தோன்றியது எனக் கூறலாம்.[75]

தொல்லியலாய்வாளரும், இலங்கையில் வடபகுதியில் (தமிழர் பிர தேசத்தில்) நிலவிய அரசாட்சி முறைமைகள் குறித்துத் தமது முதுகலைமாணிப் பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டவரும், குறிப்பாக நாகதீபம், நாகவழிபாட்டு மரபுகள், பௌத்தத்தின் வருகை என்பன குறித்த ஆய்வு களைச் செம்மையாகவும், சான்றாதாரங்களோடும் மேற்கொண்டவருமான திருமதி ஜி. தனபாக்கியம் எடுத்துக் காட்டும் கருத்துகள் சிலவற்றையும் இனி நோக்குவோம்.

> மகாபாரதத்திற் சுதர்சனதீவு ஒரு முயல் போன்றதெனவும் கஸ்யதீவும் (கச்சதீவும்) நாகதீவும் அதன் இரு காதுகளெனவும் தாமிவர்ணம் (தாமிர வர்ணம்) அதன் தலை உச்சியில் இருப்பதாகவும் உருவகப் படுத்திக் கூறப்பட்டுள்ளது.[76]
>
> எத்திராய் சௌத்திரி, நாகதீபத்தை யாழ்ப்பாணத் தீபகற்பமாகக் கொள்வர்.[77] "புத்தர் நாகருக்காக இலங்கைக்கு இரண்டாவது முறை வருகை தந்தபோது நாகதீபத்திலுள்ள ஜம்பகோளப்பட்டினத்தில் நாகர்களைத் தன் போதனைகளைத் தழுவச் செய்தார் என மகிந்தர் தேவநம்பியதீசனுக்கு எடுத்துரைத்தார். இப்பழம் பெயரைக் கொண்டே யாழ். குடாநாட்டில் வதிந்த ஆதிநாகர் குடிகள் பௌத்தத்தைச் சமயப்பொறையுடன் தழுவினர் என்பதனையே நாம் அறியமுடிகிறது. அதேபோல இங்கு வாழ்ந்த பழந்தமிழ்க் குடிமக்களும் சமயப் பொறையும், இனச்சகிப்புத் தன்மையுமுடையவர்களாக இருந்தார்கள் என்பதனை எடுத்துரைப்பதற்கும் இப்பழம் பெயர் ஆதாரமாகிறது. சங்கமித்தையும் பௌத்த சங்கத்தினரும் வெள்ளரசு மரத்துடன் ஜம்புகோளத்துறையில் இறங்கியே பாத யாத்திரையாகவே அதனை அநுராதபுரத்திற்கு எடுத்துச் சென்றனர். மேலும், இந்நிகழ்ச்சியினை நினைவூட்டுமுகமாக அங்கு ஒரு விகாரையும் எடுப்பித்தார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் ஆதிநாகர்களோ அல்லது பழந்தமிழ் குடிகளோ பௌத்த வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இவர்கள் காட்டிய ஆதரவும் வரவேற்புமே சுமுகமான முறையிற் பௌத்தமதத்தைச் சிங்கள மக்கள் காலப் போக்கில் தழுவ வழி வகுத்தது எனலாம்.[78]

ஆய்வாளரும் முதுகலைமாணிப்பட்டம் பெற்றவருமான ஜி. தனபாக்கியம் தமது நூலின் உபதலைப்பொன்றை ''நாகதீவு - மணிபல்லவம் நயினாதீவு (யாழ். குடாநாடு)'' என்றமைத்துள்ளமை காணத்தக்கது. இக்கட்டுரையின் சிறப்பு நோக்கில் இவ்விடயம் மிகவும் பிரதானமாகிறது. தனபாக்கியத்தின் கருத்துகள் வருமாறு:

''ஆதிக் குடிகளான நாகர்கள் வாழ்ந்த பகுதி (யாழ். குடாப்பகுதி) நாகதீபம் என அழைக்கப்பட்டது. நாகர் கலாசாரத்தை எடுத்தியம்ப நாகதீபம் என்ற பெயர் உதவுகிறது எனலாம். நாகர் குடிகளின் தோற்ற வளர்ச்சிகளை ஆராய்வதற்கு மகாவமிசத்தின் தகவல்கள் சிறப்புமிக்கவையாகும். அதன்படி கி.மு. 6 ஆம் நூற்றாண்டளவில் இராமேஸ்வரத்திற்கு அண்மையிலுள்ள கந்தமாதனத்தை ஆண்ட குலோதரனின் தந்தையாகிய நாக அரசனுக்கும் நாகதீபத்தை ஆண்ட மகோதரநாகனுக்கும் ஒரு இரத்தினக்கல் பதித்த ஆசனத்தைக் குறித்துச் சர்ச்சை ஏற்படலாயிற்று. மணிமேகலை,

*பெருந்தவ முனிவருந் திற முரைக்கும்*<br>*பொருவறு சிறப்பின் புரையோரேத்துந்*<br>*தருமபீடிகை தோன்றிய தாங்கென* *(காதை 8, வரி: 61-63)*

என உரைக்கிறது.[79]

> மணிபல்லவத்திற்கு (நாகதீபம்) அயலாக அமைந்த இலங்காதீபம் (இரத்தின தீபம்) என்பதோடு அங்கு புத்தருடைய பாதச்சுவடு பதிக்கப் பெற்றிருப்பதையும் குறிப்பிடுவதனால், மகாவம்சத்தின் குறிப்புகளை இவை மேலும் வலியுறுத்தும் ஆதாரங்கள் ஆகின்றன எனலாம். இக்குறிப்புகளிலிருந்து நாகர்கள் பண்பாடுடைய கலா சாரத்தைப் பேணிய மக்கள் என்பதும், புத்தருடைய காலத்தில் இவர்கள் இலங்கையின் வடபாகத்தில் மட்டுமன்றி வடமேற்குப் பகுதியிற் களனியாற்றைப் பரவி வாழ்ந்தனர் என்பதும் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.[80]

நாகர்கள் இலங்கையின் மேற்கு வடமேற்கு, வடக்குப் பகுதிகளில் வாழ்ந்து பின் கிழக்குக் கரையூடாகத் தென்னிலங்கை வரை பரவினர் என்பதற்கு மகாவம்மிசம், சந்தேஸ நூல்கள் மட்டுமன்றித் தொலமியின் இலங்கைப் படத்தின் புவியியற் குறிப்புகளும் சான்றுகளாக அமைகின்றன. மற்றும், மட்டக்களப்பு மான்மியம் தென்னிலங்கையில் திருக்கோயில் எனும் ஊரின் பழையபெயர் நாகர்முறை என்று குறிப்பிடுகிறது.

''மணிமேகலை (Vi: 211-214) காவேரிப்பட்டினத்திற்குத் தெற்காக முப்பது யோசனை தூரத்திற் கடல் சூழ்ந்த மணிபல்லவம் அமைந்துள்ளது என்கிறது.

''சசோனி ஜாதகம் (Sussoni Jataka) இல. 360 நாகதீவைச் செருமதீவு எனவும் அது கருடனின் இருப்பிடமெனவும் வருணிக்கிறது. இந்த ஜாதகக் கதை இன்றைய நயினாதீவின் பழைய வரலாற்றையே குறிப்பிடுகிறது. அதாவது நயினாதீவு நாகபூஷணி அம்மனைப் பூசித்து வந்த நாகத்தினை எவ்விதம் கருடன் தாக்கியது என்ற வரலாற்றினையே இப்பெயர் வரலாறு குறிப்பிடுவதாகும்.''[81] மேலும் வலாஹச ஜாதகம் 1961 கடலோரமாகக் கல்யாணி (களனியா) ஒரு பக்கத்திலும், நாகதீபம் இந்தப் பக்கத்திலும் எனக் குறிப்பிடுவதனால் ஒரே திசையில் வடமேற்கிலமைந்துள்ள நாகதீவையே (நயினாதீவைத்) தெளிவாகப் புவியியலடிப்படையிற் காட்டியுள்ளது. வலாஹ ச. ஜாதகத்தை மொழிபெயர்த்த ரௌஸ் (Dr. Rouse) இலங்கையுடன் இணையாத தனித் தீவாகவே இதனைக் கருதுவர் (Dr. Rouse, Jatakas, No. 11, pp. 90 and Tuder, pp.31).

ஜி. தனபாக்கியம் அவர்களது மேற்குறிப்பிட்ட கருத்துகள் மெய்ம் மையும், உண்மையும், நடைமுறையில் இருபது வருடங்களின் பின் - இன்றும் கண்முன்னே காணும் காட்சிகளாயும் மிளிருகின்றன. இத்தகு ஆய்வுப் பார்வையே உண்மைகளை நிறுவும், நிலைபெறச் செய்யும் என்பது திண்மை. 2007 இல் நடைபெற்ற நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் உயர்திருவிழாவின் 11 ஆந் திருவிழாவின் போது ஆகாயத்தில் கருடன் வட்டமிட்டுக் காட்சியளித்த அற்புதக்காட்சி இடம்பெற்றதாகப் பலரும் சாட்சி கூறியுள்ளனர். அத்துடன் நாகதீவும், மணிபல்லவமும் அம்பாள் வரலாற்றோடும், இன்றும் நயினாதீவின் வடக்குக் கடற்கரையிலே வெளித் தோற்ற மாயமையும் பாம்பு சுற்றியகல், கருடன்கல் என்னும் இரு கருங்கற் சாட்சிகளையும் கொண்டு இத்தீவின் வரலாற்றை நிர்ணயிக்க ஏதுவாகும். வரலாறு ரைக்கும் செய்தி ஒருபுறமும், வழிபடும் மக்கள் கூறும் சாட்சியுரைகள் மறுபுறமும், இயற்கைத் தோற்ற அமைப்பு இன்னொரு புறமுமாக மணிமேகலை செய்திகளையும் வரலாற்றாசிரியர்களது கருத்துகளையும் மெய்ப்பித்து நிற்கின்றன.

நாகதீபம் என்ற பிரிவு இலங்கையின் வடமாகாணத்தைக் குறித்ததாகக் கெய்கர் கருதுவர். (William Geiger, Culture in mediaeval time, ed. by Heir Bechert, 1960, pp. 108). நம்பொத் (கி.பி. 1345 இல் எழுதப்பட்ட நூல்கள்) ஆகிய சிங்கள நூல்களை ஆதாரமாகக் கொண்டு W.H.D. Silva. J.R.A.S. (CB.) vol.31. No. 82). போல், இலங்கையின் மேற்குப் பாகத்திலுள்ள குடாப்பிரிவு களனியாவைத் தலைநகராகக் கொண்டு நாகராட்சியிலிருந்தது என்பது (Paul Peiries, J.R.A.S. (CB,vii.31. No. 82).

ஆதியில் யாழ். குடாவின் வடமேற்கிலமைந்த நயினாதீவு முதலிற் புத்தர் வருகையுடன் தொடர்புடையதாய் மணிபல்லவம் மணித்தீவு, செரும தீவு, நாகதீவு என்பன போன்ற பல பெயர்களாற் புகழ் பெற்றிருந்தது என்பதும், பின்னர் புத்தர் இரண்டாவது முறை நாகதீவிற்கு வந்தபோது நாகதீவில் மகோதர நாகனுக்கும் குலோதர நாகனுக்குமிடையிலிருந்த சர்ச்சையைத் தீர்த்துப் பௌத்த தரும நெறியினைப் போதித்ததோடு இரத்தினா சனத்தையும் இராஜாயதன மரத்தினையும் வழிபடுமாறு பணித்துச் சென்றனர் என்பதும் தெளிவாகிறது (ப. 33).

நாகர்களோடு சோழர்கள் கலப்படைந்து உருவாகிய பரம்பரையினரை 'நாகபல்லவ சோழர்கள்' என ந.மு. வேங்கடசாமி நாட்டார் அழைப்பர் (கள்ளர் சதித்திரம்).[82]

நாகர்கள் 'ஆதிதிராவிடர்' என்று கணிப்பிடும்பொழுது பொன்னம்பலம் இரகுபதி எழுதிய ஆய்வேடு குறிப்பிடும் செய்திகள் வருமாறு:

> ஆதித் திராவிடக் குடிகளின் பெருங்கற்பண்பாட்டு அடக்கங்களாவன கறுப்பு, சிவப்பு வண்ண மட்கலங்கள், இரும்பாயுதங்கள், சுடு மண்ணாலான வட்டமான தாயக்கட்டைகள், சங்குகள், மணிகள், கடல் உணவுகள் முதலாயன இடம்பெற்றிருந்ததனால், இவற்றின் கர்த்தாக்கள், ஆதித்திராவிடக் குடிகளே என்பது வெளிப்படையாக உண்மையாகும். ஆனைக்கோட்டைப் பெருங்கற் பண்பாட்டின் முக்கிய அமிசமென்னவெனில் கிரபிக்குறிகள், பிராமி எழுத்துகள் இரண்டும் ஒருங்கே தோன்றியுள்ளமையாகும். தமது கருத்தினை உணர்த்துமுகமாக எழுத்து வளர்ச்சிகளைக் கையாளுகின்ற மக்கள் சமுதாயத்தை நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது."[83] "ஆதியில் நாகர்களால் வழிபடப்பட்ட இலிங்கக் கோயில் திருக்கேதீஸ்வர மாகும்.[84]
>
> இதுவரை ஆனைக்கோட்டை, காரைநகர், வேலணை முதலான பகுதிகளிற் கிடைக்கப்பெற்ற பெருங்கற் பண்பாட்டுத் தலங்கள் நாகதீபத்தில் திராவிடக் குடிகளின் கலாசாரத்தைப் பெருங்கற் பண் பாட்டுக் காலத்திற்குத் தள்ளிவருகின்றன. பெருங்கற் பண்பாட்டு மக்கள், தென்பாண்டி நாட்டுப் பெருங்கற் பண்பாட்டுக் குடிகளின் அரசியல் முறைக்கு நிகரான ஆட்சி முறையினை இங்கு பின்பற்றி யிருக்கலாம் என்பதிற் சந்தேகமில்லை.[85]
>
> தன்னிச்சையான பல குறுநில அரசுகள் நாகதீபத்திற் காலந்தோறும் உருவாகியிருந்தாலும் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக்

காலத்திலே நாகதீபத்தில் ஒரு தமிழரசு முதன்முதலாகத் தன்னை அதிகாரபூர்வமாகப் பிரகடனப்படுத்தியிருக்கலாம் எனத் தெரிகிறது.[86]

பாண்டிய வமிசத்துத் தொடர்பு பூண்ட பராக்கிரமபாகு I இன் (கி.பி. 1153-1186) ஆட்சியில் ஜம்புத்தீவு (நாகதீபம்) தானாகவே இலங்கைத் தீவுடன் இணைந்ததெனச் சூளவமிசம் கூறினாலும் பராக்கிரமபாகு I இன் ஆட்சிக்குப் பின் நாகதீபம் சேதுபதி மன்னனின் நிருவாகத்தின் கீழ் இருந்தமையை மேற்கூறிய ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. மேலும், பராக்கிரமாகு I இன் நயினாதீவுக் கல்வெட்டு, அவன் அங்கு வாழ்ந்த தமிழ் மக்களுக்காக எழுதுவித்ததொன்றாகும். இதனாற் பௌத்த புனிதத்தலமான நயினாதீவு முதலாம் பராக்கிரம பாகுவின் காலத்திற் சிங்களமயமாக்கப்பட்ட பிரதேசமல்ல என்பது தெளிவாகிறது..[87]

நயினாதீவு - ஆதி அரசு எனப்பட்டது.[88]

நயினாதீவே - நாகதீவு, மணிபல்லவம், மணித்தீவு, சம்புத்தீவு என அழைக்கப்பட்டது.[89]

''யாழ். குடாநாடு, நாகதீபம், ஜம்புத்தீவு, நாவலந்தீவு என்று அழைக் கப்பட்டது.''[90] இனி, பல்லவராச்சியம் என்னும் நூலிலே பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் சுட்டும் சுவாரஸ்யமானதும், உணர்வுபூர்வமானதுமான கருத்துகளை நோக்குவோம்.

வரலாற்றுக் குறிப்புகளை நோக்கும்போது கிரேதாயுகம் நிலவிய அக்காலத்திலே ஈழத்திலே மேற்குப் பகுதியில் நாகர்களும், மாவலி யாற்றுக்குக் கிழக்கே இயக்கர்களும் ஆட்சி செலுத்தினர். நாகர் வசித்த பகுதி நாகநாடு என்று அழைக்கப்பட்டது.[91]

இன்று வளர்ச்சி பெற்ற தமிழ்மொழியை நாக வம்சத்தவர்கள் பேசி வருகிறார்கள். நாகர்கள் எழுதிய வரலாறுகளில் இவர்கள் பற்றிய குறிப்புகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. கால ஓட்டத்தில் இயக்கர்களும் நாகர்களைப் பின்பற்றி நாகரிகத்தில் மேம்பாடு அடைந்தனர். இயக்கர் என்பது ஒரு இனமோ ஒரு குலமோ அல்ல. அவர்களும் நாகரிக மரபுகளைப் பின்பற்றி நாகர்கள் ஆயினர். இன்றும் இயற்கையோடு ஒட்டி வாழ்பவர்கள் இருக்கிறார்கள். இவர் களிற் பலர் வாழ்க்கை வசதிகள் தேவைகளைப் பெற்றுக்கொள்ள நகர்ந்து சென்றார்கள்.[92]

மக்களின் தேவைகளுக்காக முதன்முதலாக உலோகங்களைப் பயன்படுத்தியவர்கள் ஈழத் தமிழரான நாகர்களே. இயற்கையின்

> பாதிப்பு ஏற்படாத இடங்களைத் தெரிவு செய்து அங்கு நகர்ந்து சென்று அமர்ந்தார்கள். அது நகர் எனப்பட்டது. நகர்ந்தவர்கள் 'நாகர்' எனப்பட்டனர். இயற்கைக்கும் அதன் தாக்கத்திற்கும் மாறாக அவர்கள் கடைப்பிடித்த வாழ்க்கை முறை நாகரிகம் எனப்பட்டது.[93]
>
> நாகர்கள் என்றால் பாம்புத் தலையையுடையவர்கள். பாம்பு உடலுடையவர்கள் என்ற பஞ்சசீலரின் கதைகளும் உள்ளன. நாகர்கள் என்றால் நாகத்தை வழிபடுபவர்கள் என்றும் ஒரு விளக்கம். நாகர்கள் என்றால் நாகரிகத்தை உருவாக்கியவர்கள் ஆவர். நாகர்களினால் ஏற்படுத்தப்பட்ட பழக்கவழக்க மரபுகள் நாகரிகம் என அழைக்கப்படு கின்றது. நாகர்களின் வாழ்க்கை முறை நாகரிகமாகும். மனிதநேய மிக்க, மனித மேம்பாட்டுக்கான விழுமியங்களைக் கொண்ட சீர்திருத்த மான பழக்கவழக்கங்களே நாகரிகம் எனப்படும். ஒரு இனத்தின் வாழ்க்கை முறையை நாகரிகம் என்பது தவறாகும்[94] என்பர் பால சுப்பிரமணியம்.

நாகதீவினைத் தனிராச்சியமாகக் கொண்டு நாகர்கள் இராமாயண காலத் திற்கு முன்பிருந்தே ஆண்டு வந்துள்ளார்கள். மகாபாரத காலத்தில் நாகதீவு அரசின் கொடியில் சிங்கம், பனை இலச்சினை பொறிக்கப்பட்டிருந்தது. பனைகொடியிற் பொறிக்கப்பட்டுள்ளதால் 'பனை நாடு' என அழைக்கப் பட்டதும் நாகதீவாக இருக்கலாம். நாகதீவு, மணிபல்லவம், மணிபுரம், மணிக்கரை, பல்லவம், கண்டிநாடு என்ற பெயர்கள் யாழ்ப்பாணக் குடா நாட்டினைக் குறிக்கின்றன. மணிபுரம், ஆமையூர், சோழியபுரம், மணி பல்லவம், இந்திரநகர் (இந்திரானை) என்பன சுழிபுரத்தைக் குறிக்கும் பெயர்களாகும்.[95]

> காலசேனன் என்ற மன்னன் திரேதாயகத்தின் முடிவில் பாலாவி மண்டலத்தில் கி.மு. 3200 ஆம் ஆண்டளவில் குதிரைமலையில் ஒரு நல்லாட்சி நடாத்தி வந்த நாகவேந்தன் ஆவான்.[96]
>
> ''கி.மு. 3 ஆம் நூற்றாண்டளவில் களனியில் நாக அரசு இருந்தது.''[97] இலங்கைத் தமிழர் இந்தியாவில் இருந்து வந்தேறு குடிகள் அல்லர் என்பதை டாக்டர் போல் பீரிஸ் 1917 இல் தெரிவித்துள்ளார். (Nagadepa and Buddhist remains in Jaffna).[98] ''சங்கமன்னன் ஒரு நாகவேந்தன்'' என்று நவநாயகமூர்த்தி வீரகேசரிக் கட்டுரையொன்றில் தெரிவித்துள்ளார்.[99]

''நாகர்கள் எல்லோரும் தமிழர்களே என்பது ஆய்வாளர்களின் முடிவு''[100] என்கிறார் பல்லவராசசேகரன் (2007).

நாகர்களும் விகாரைகளைக் கட்டினார்கள் என்று முடிவு கட்டும் பல்லவராசசேகரன் அவர்களின் ஆட்சியதிகாரம் நிகழ்ந்த பிரதேசமெங்கும் அவை 'நாகவிகாரை' என்றே அழைக்கப்பட்டன என்கிறார். அவரது வரிகள் மேல்வருமாறு:

> மூத்த சிவன், மகா சிவன் பெயர்கள் அவர்கள் சிவ வழிபாடுடைய வர்கள், நாகவழி வந்தவர்கள் என்பதனையும் உறுதிப்படுத்துகிறது. நாகர்கள் கட்டிய விகாரைகள் பெரும்பாலும் நாகவிகாரை என்றே அழைக்கப்பட்டன.[101]

நாகர்கள் அரக்கர்களோ, கொடூரமிக்கவர்களோ அல்லர். அவர்களும் மனிதர்களே என்பது, எமர்சன்றெனற், எச். பாக்கர் எனும் ஆங்கிலேய ஆய்வாளர்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனை ''ஆங்கிலேயர்களான எமர்சன்ற் றெனற் எச். பாக்கர் தமது சிலோன், ஏன்சன் சிலோன் (Anceient Ceylon) எனும் நூல்களில் 'நாகர்கள், மனிதர்கள் என்றும் திராவிடர்கள் என்றும சாற்றியுள்ளனர்' என்று கூறுவதுடன், மகாவம்சத்தில் குறிப்பிட்டிருக்கும் அவர்களின் பெயர்களில் கல்லாடநாகன், கோரநாகன், மகாநாகன், இளநாகன், மாகலநாகன், குஞ்சநாகன், குடநாகன், அயநாகன், சிறிநாகன் போன்றோர் நாகவேந்தர்களே''[102] என்றும் கூறுவர்.

இந்தியாவிலும் நாகர்கள் ஆட்சி செய்துள்ளார்கள். கி.பி. முதலாம் நூற்றாண்டில் சோழராச்சியமும் காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள பிராந்தியமும் (தொண்டை மண்டலம்) நாகவேந்தர்களால் ஆளப்பட்டது என்பதில் சந்தேக மில்லை. சோழமண்டலக் கரையில் நாகர்கள் வாழ்ந்தார்கள் என்பதும், பாண்டிநாட்டிலும் சோழ நாட்டிலும் 'உரகபுரம்' என்றழைக்கப்பட்ட நகர் இருந்ததிலிருந்து மேலும் பலப்படுத்தப்படுவதாகத் தோன்றுவதாக சினேஷ் சந்திரசர்க்கார் கூறுகிறார். (எ+டு: Cines Chandra Sircar. The successor of Sata-vakana in lower Deccen, Culcutta, (1939).[103]

பாளி நூலாதாரங்கள் நாகர்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ள பெரும்பாலான செய்திகளைப் பிழையானவை, ஆதாரமற்றவை, கற்பனைகள், கட்டுக்கதை என்று நிராகரிக்கும் பல்லவராசசேகரன் அது குறித்து மேல்வருமாறு கூறுவார்.

> பல்லவம் முன்னர் நாகதீவு என்ற பெயரால் விளங்கியது. நாகர்களை மனிதர்கள் அல்ல என்றும் மாயப்பிறவிகள் என்றும் பாளி நூல்கள் தெரிவித்தததில் உண்மையில்லை என்பது உறுதியாகிறது'' என்ப துடன், ''அசேலன் ஏலேலன் போன்ற தமிழ் அரசர்களுடைய தாயக பூமியை நாகதீவு அல்லது பல்லவமே என்பது அண்மைக் காலமாகத் தொல்லியல் கண்டுபிடிப்புகள் உறுதிப்படுத்தி வருகின்றன என்றும்,

ஈழத்தின் மேற்பகுதியாகிய பாலாவி மண்டலத்தில் நாகர்கள் அமைத்த நாக அரசினைத் தொடர்ந்து மாதோட்டம், இலங்காபுரி, மணிமலை, நாகதீவிலும் நாகர்களின் நாகரிக அரசுகள் முறையே தோன்றின. நாகர்கள் வாழ்ந்த தீவு 'நாகதீவு' என்ற பெயரால் விளங்கியது. நாகதீவு திரேதாயுகத்தில் 'புண்ணியபுரம்' என்று அழைக்கப்பட்டது.[104]

''திரேதாயுகத்தில் புண்ணிய புரத்தில் நாகரிகமடைந்த மக்கள் வாழ்ந் துள்ளார்கள். திரேதாயுகத்தில் நாகதீவில் ஒரு பெரிய அரசு இருந்துள்ளது. அக்காலத்திலே யாழ்ப்பாணக் குடாநாடு, தீவுக் கூட்டங்கள் எல்லாம் சேர்ந்து அதனைவிட மூன்று மடங்கு பெரியதாக நாகதீவு இருந்துள்ளது. இராமாயண நூல்களில் திரேதாயுகத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஒரு பெரிய அரசு நாகதீவில் அமைந்துள்ளதென்றும் அங்கும் சீதையைத் தேடிப் பார்க்க வேண்டும் என்றும் இராமன் அநுமனிடம் கூறினான். நாகரிகத்தில் மேம்பாடடைந்த மக்கள் வாழ்ந்தார்கள். அவர்களுடன் கூடிய பாதுகாப்பான கோட்டை இராசதானியில் அமைந்திருந்தது'' என்றும் கூறுவர் பல்லவராசசேகரன்.

நாகர்களின் குல தெய்வமாகச் சிவபெருமான் வீற்றிருந்தபடியால், 'திருத்தம்பலேசுவரர் நாக குல ஈச்சரம்' என்றும் அழைக்கப்பட்டது. 'நாககுல ஈச்சரம்' காலஞ் செல்லச் செல்ல 'நகுலேசுரம்' என்று மருவியுள்ளது. நாககுல ஈச்சரம் என்ற இறைவன் நாமம் நகுலேசுவரன் என்று அழைக்கப்படுகிறது. முன்பு நாகுலம் (ஈச்சரம்) என்றாயிற்று. நாகுலம், நகுலம் என மாறி வழங்கிய காலத்தில் கட்டிவைத்த நகுலமுனியின் கதை. பிற்காலத்தில் உண்மையென ஏற்கப்பட்டது.[105]

சரவணப் பொய்கை இருந்த இடம் சரவணை என்று அழைக்கப் படுகிறது.''[106] ''முருகன் வளர்ந்து பாலனாகிய பின் அன்னை பார்வதி அணைத்து வேல் கொடுத்த இடம் வேலணையாகும்.[107]

கி.மு. 10,000 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் நாகதீவு, நாகநாடு, மணிபுரம் என்ற பெயர்களாலேயே அழைக்கப்பட்டது.[108] ''துவாபர யுகம் தொடங்கிய காலத்திலிருந்து நாகதீவில் தொடர்ச்சியாக அரசு நிலைபெற்று இருந்ததை வரலாறுகள் எடுத்தியம்புகின்றன. கி.மு. ஆறாயிரம் ஆண்டளவில் இந்திரன், தான் பெற்ற சாபத்தினால் மணிபுரத்தில் மீனவனாகப் பிறந்தான். திருவடிநிலை, மணிபல்லவம் என அழைக்கப்பட்டது. சிலகாலம் இந்திரன் மணிபுரத்திலிருந்து மணிபல்லவத்தை ஆண்டான். அன்று தொடங்கி அங்கு வருடா வருடம் இந்திர விழாக் கொண்டாடப்படுகிறது. மணிமேகலையில் நாகதீவு தான் பல்லவம் என்பது தெளிவாகக் காணப்படுகிறது.

வல்லிபுர ஆழ்வாரின் 'வல்லைத் திருப்பதிகம்' பல்லவத்தினைப் பல்லவம் என்றே குறிப்பிடப்படுகிறது. செல்வச்சந்நிதிக் கந்தன் திருப்புராணத்தில் மணிபுரம் என்பது மணிக்கரை என்று குறிப்பிடப் பட்டுள்ளது யாழ். தீபகற்பமே. அதாவது மணிபுரம் என்ற பதம் யாழ். குடாநாடு முழுவதையும், ஒரு காலத்தில் குறித்திருந்தது. தண்டையணிந்த மால் பாதங்கள் பதிந்ததால், திருவடி நிலைத் துறையாகியது.[109]

மணிவண்ணனின் தளிர் போன்ற பாதங்கள் பதிந்தபடியால் நாகதீவு, மணிபல்லவம் எனப் பெயர் பெற்றது. மணிபல்லவம் காலப்போக்கில் பல்லவம் என்றே அழைக்கப்பட்டது. மணிபுரத்திலே கி.மு. 5000 ஆண்டளவில் திருமாலின் அற்புதம் நிகழ்ந்தது. பொன்னாமை பிடிபட்டதால் மணிபுரம் பொன்மையூர் என்றும் ஆமையூர் என்றும் அழைக்கப்பட்டது. தற்பொழுது ஆமை கல்லாகிய இடமே பொன்னா மையூர் என்பது மருவி பொன்னாலையூர் என்று வழங்கி வருகிறது. மன்னன் கல்லான ஆமையின் மேல் மாலின் சிலையை நிறுத்தி எழுமாட வீதிகளைக் கொண்ட கோவில் ஒன்றைக் கட்டினான்.[110]

வட இந்தியத் துறைமுகமான தாம் பிரதிபலிக்கும் பல்லவத்தின் பெருந்துறைமுகமான சம்பு கோவளத்திற்கும் இடையே அடிக்கடி கப்பற் போக்குவரத்துகள் இடம்பெற்றிருப்பது பற்றியும் கௌடில்யரின் அர்த்தசாத்திரத்தில் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் ஈழத்து முத்துக்கள், மகதப் பேரரசுக்குக் கொண்டு செல்லப்பட்டமை பற்றியும் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.[111]

மணிபுர நாட்டின் கொடியில் சிங்கமும் பனையும் பொறிக்கப் பட்டிருந்தன'' என மகாபாரம் தெரிவிக்கிறது.[112] மணிநாகன் பற்றிய குறிப்பில், பல்லவராசசேகரன் மேல்வருமாறு கூறுகிறார்:

கி.மு. 2500 ஆம் ஆண்டளவில் மணிநாகன் என்ற மன்னன் மணிபல்லவத்தினை ஆட்சி செய்தான். நவமணிகளும் கிடைக்கப் பெற்றதால், நாகதீவு மணிபுரம் என அழைக்கப்பட்டது. வீரத்துடனும் சிறப்புடனும் ஆட்சி நடாத்திய மணிநாக மன்னன் தனது பெயரினை இராசதானிக்குச் சூட்டினான். அதன் பின் மணிநாகர் என்றும் மணி நாகபுரம் என்றும் விளங்கியது. நெடுந்தீவு, ஊராத்துறை, காரைதீவு, பல்லவத்துறை (திருவடிநிலைத்துறை), கோவளம் (சம்புத்துறை), பருத்தித்துறை, நாகர்கோவில் ஆகிய ஏழு இடங்களில் கடற்காவல் தளங்கள் இருந்தன. கடற்படை, கடற்கலங்கள், கடற்காவற் தளங்கள், ஏலேலன் காலத்தில் வலிமைமிக்கதாக இருந்தன. ஈட்டி, வேல், அம்பு, வாள் போன்ற பாரம்பரிய ஆயுதங்களே படையினரால்

> பயன்படுத்தப்பட்டு வந்தன. கட்டுமரம், ஊரா, தோணி, வள்ளம், நாவா, திமில், வத்தை, படகு, மச்சுவாய், கப்பல், ஓடம் என்று தேவைக்கும் இடத்திற்கும் தக்கதாகக் கடற்கலங்கள் பயன்படுத்தப் பட்டு வந்தன. கப்பல் கட்டுவதில் வல்வெட்டித்துறை மிகமிகச் சிறந்த தளமாக விளங்கியது. 'ஏழுகடல் தாண்டினும் ஏலேலன் கப்பல் திரும்பி வரும்' என்பது நாட்டார் மொழியாகும்.[113]

> ஆனைக்கோட்டை அரசினை, தொலமி என்று மேனாட்டு ஆசிரியர் அக்கோட்டே (Ankote) என்றும், ஆமையூர் என்ற இடத்தினை ஆமூர் (Amur) என்றும், நாகதீவு என்பதை நாகதீபோய் (Nagadiboi) என்றும் நிற்காமம் என்பதனை நிகாயம் (Nigaua) என்றும் குறிப்பிட்டுள் ளார்கள். நிகாமம் சிங்கை நகரில் (சங்கானை) அமைந்துள்ள வணிகக் குழுவினரின் இருப்பிடமாகும்.[114]

நாக அரசகுடும்பத்தைச் சேர்ந்த மகோதரன் கி.மு. 600 ஆம் ஆண்டளவில் மணிபுரத்திலிருந்து ஆட்சி செய்தான்.[115]

மணிபல்லவத்தின் அரசனாக கி.மு. 500 ஆம் ஆண்டளவில் கோவேந்தன் கோலோச்சினான்.[116]

> கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் முழு இலங்கையும், மணிபல்ல வத்தின் நாக அரசர்களினால் ஆளப்பட்டது. (A.J. பீனிசியஸ் வரலாறு என்ற நூலில் நாகதீவு அரசு பற்றி மேனாட்டினரின் முதலாவது பதிவு காணப்படுகிறது. கி.மு. 5 ஆம் நூற்றாண்டிலே மூன்று அரசு களிருந்தாலும், இலங்கையின் முத்துக்குளிப்பு நாகதீவு அரசின் கட்டுப்பாட்டிலே இருந்தது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாக தீவினை முடிநாகராசர் என்ற அரசன் கி.மு. 350 ஆம் ஆண்டளவில் ஆட்சி செய்தான். இவன் தமிழில் பெரும் புலவ னாவார். இவர் இயற்றிய பாடல்கள் பாண்டிநாட்டுத் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. நாகதீவினை தீபராசா கி.மு. 250 ஆம் ஆண்டளவில் ஆண்டான் என அறிய வருகிறது.[117]

மாணிக்கநாகன் ஆட்சியில் மாணிக்கக்கல் வாணிபம் செழிப்புற்றிருந்தது. சிறந்த மாணிக்கக் கற்களை மணிபுரத்தில் பெற்றுக்கொள்ளப் பிறநாட்டினர் வந்தனர். மாசாத்துவான் செட்டி, தன் மகள் கண்ணகைக்குக் காற்சிலம்பு கொள்வதற்காக மாணிக்கப்பரல் வாங்க மீகாமனை மணிபுரம் அனுப்பினான். மாணிக்கநாகனின் கடற்படைத் தளம் நெடுந்தீவில் அமைந்திருந்தது. அதில் கடற்படைத் தலைவனாக வெடியரசன் இருந்தான். வெடிகளை எறிந்து எதிரிக்கடற் கலன்களை அழிப்பதில் தேர்ச்சி பெற்றான் வெடியரசன் என்றும்

மணிபல்லவசேகரன் விவரித்து தங்க உற்பத்தியிலும், பெரிய முத்துக்களின் உற்பத்தியிலும் இந்தியாவைப் பார்க்கிலும் இலங்கை அதிகமாக உற்பத்தி செய்கிறது. முத்துக்குளிப்பு வட இலங்கையின் மேற்குக் கரைப்பட்டினங்கள், பெருந்தொகையான மேனாட்டு வணிகர்களைக் கவர்ந்திருந்தன. அக்காலத்தில் இந்நாட்டில் செழிப்புற்றிருந்த மன்னர்களினால் இந்த முத்துக்குளிப்பு வருமானம் ஒதுக்கப்பட்டிருந்த கோயில்களும் கவர்ந்தன'' என்று தமது குறிப்புக்களில் தெரிவித்துள்ளார்.[118]

பல்லவ அரசர்கள் இந்தியாவில் பெற்ற போர் வெற்றிகளே பல்லவத்திற்குப் பெரும் புகழை ஈட்டித் தந்தன. பல்லவ அரசர்கள் பல்லவத்திலிருந்து சென்று பல்லவ இராசதானி அமைப்பிலே காஞ்சி நகரினை அமைத்தார்கள் என்ற விவரம் மணிமேகலையில் காணப்படுகிறது.

*பாரகவீதியிற் பண்டையோ ரிழைத்த*
*கோமுகி யென்னும் கொழுநீரிலஞ்சியொடு*
*மாமணிப் பல்லவம் வந்த தீங்கெனப்*
*பொய்கையும் பொழிலும் புனைமினென்றறைந்தார்.*[19]
*(மணிமேகலை)*

கொஸ்மாஸ் என்ற கிரேக்க எழுத்தாளர் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் நாகதீவில் தனிராச்சியம் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.[120]

கி.மு. முதலாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 80 க்கும் அதிகமான கல்வெட்டுக்களில் 'நாக' என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலத்தில் ஈழத்தின் பல பாகங்களிலும் தமிழ் நாகர்களே ஆட்சி செய்தார்கள். இக்கல்வெட்டுக்கள், நாக அரசர்களினால் பொறிக்கப்பட்டவையாகும்.[121]

> தென்னிலங்கை இளவரசன் 'மான' பாதுகாப்புத் தேடி நாகதீவுக்கு வந்து தங்கிப் பின்னர் இந்தியா சென்றான் என்பதால் தென்னிலங்கையை விடப் பலமான பாதுகாப்பானதான நாகதீவு அரசாட்சி விளங்கியுள்ளது.[122]

பல்லவ அரசர்கள் எல்லாரும் நாகரிகத்தில் மேம்பாடடைந்த நாகர்களாவர்.[123]

பல்லவர்களது ஆதித் தாயகம் புராதன யாழ்ப்பாணம். இங்கிருந்து நகர்ந்து காஞ்சியில் பேரரசு அமைத்தார்கள் எனப் பேராசிரியர் செ. கிருஷ்ணராசா தமது கட்டுரையொன்றிலே தெரிவித்துள்ளார்.[124]

பல்லவ நாகர்களின் தலைசிறந்த வாத்தியக் கருவி நாகசின்னம் ஆகும்[125]

**தமிழ்ப் பௌத்தர்கள்**

இத்தொடர்பில் 'நக' அரசர்களின் ஆட்சி, கந்தரோடையிற் கிடைத்த தொல் பொருட் சின்னங்கள், நயினாதீவுக் கல்வெட்டு. மணிமேகலைக் காப்பியம். நயினாதீவு புத்தவிகாரை, சிங்கள அரசவையில் வடமொழிப் பாண்டித்திய மிக்க புலவர்கள் இருந்தமை, சிங்கள மன்னர்கள் மருத்துவம், சோதிடம் போன்ற துறைகளிலே வல்ல பிராமண வடமொழிப் பாண்டித்தியமும் புலமையும் மிக்கோரைப் புரோகிதர்களாக நியமித்திருந்தமை, தமிழர் களுக்கும் பௌத்தர்களுக்குமிடையிலிருக்கும் மத ஒற்றுமைகளான மறு பிறப்பு நம்பிக்கை, மரவழிபாடு, நேர்த்தி வைக்கும் நம்பிக்கை. படையல் படைக்கும் மரபு. நாள் மற்றும் திதி பார்த்தல், நாணயங்களை வெளியிடல், கல்வெட்டுக்கள், செப்பேடுகள் பொறித்தல், சிவவழிபாட்டுடன் நிலவியமை, மரணக்கிரியைகளில் மதானுஷ்டானம், ஓதும் முறைமை, தாம்பூலம் (வெற்றிலை) கொடுத்து வரவேற்கும் முறைமை, சமயச் சகிப்புணர்வு, குருவானவரை மதித்தல், பெற்றோரை வணங்குதல், பெரியோரை ஆதுலர் சாலையமைத்து உதவுதலும் பராமரித்தலும், காணிக்கை செலுத்துதல், கோயில் வழிபாடுகள், பூரணை, அமாவாசைத் தினங்களில் இறைபாடு செய்தல், தெய்வங்களுக்குப் பொருட்களை நிவேதித்து அர்ப்பணிப்புச் செய்தல், திருமணமுறையில் ஒருமைப்பாடு, தானங் கொடுத்தல் (Alms givings), பிதிர்க்கடன்கள் புரிதல், தீர்த்தமாடல், விக்கிரகவழிபாடு, விழாக்கள் எடுத்தல், மேளமடித்தல், ஊர்வலம் வருதல், வேல்வழிபாடு, சூலவழிபாடு, பல் வழிபாடு (பௌத்த தந்தம்) கப்புறாளைப் பூசை மரபுகள், யாத்திரை செல்லல் என்பன இன்றும் இந்து, பௌத்த ஒருங்கிணைப்புகளுக்குத் தக்க சான்று களாகும். தமிழர்கள் பௌத்தத்தை வளர்த்தார்கள்; பேணினார்கள், அனுஷ்டித் தார்களென்பது மிகச் சுவாரஸ்யமான உண்மை வரலாறு ஆகும். இவை குறித்து பௌத்த சிங்கள வரலாற்றாசிரியர்களும், தமிழ்வல்ல வரலாற்றுத் துறைப் பேராசிரியர்களும் சமயத்தலைவர்களும் அவ்வப்போது காலத்துக்குக் காலம் கருத்துகளை முன்வைத்துள்ளனர். ஆயினும் காலக் கணிப்பும் அனுசரிப்பும் அங்கீகரிப்பும் 'தமிழ்ப் பௌத்தர்கள்' சார்பாகச் சிங்கள ஆய்வறிஞரிடை சகிப்புணர்வு ஏற்பட்டதாக வரலாறு இல்லை. 'தமிழர்' என்று வந்ததும் உண்மைகளைப் புறக்கணித்து இனத்துவேசம் ஆட்கொண்டு, ஒரு பக்கச் சார்புணர்ச்சி கோலோச்சும் துர்ப்பாக்கியம் 'சைவத்தின் - இந்து தத்துவத்தின் மன விசாலத்தையும்' உடைத்தெறிந்துள்ளமை மனங்கொள்ளத் தக்கது.

பௌத்தம் மதமல்ல. சைவம் மதம்; சமயம்; தொன்மையானதும் உண்மையானதுமாகும். பாளி, சிங்கள நூல்கள் புனைவுகள், வேதங்கள் ஆதி ஆதார நூல்களாகும். காலக் கணிப்பும், கடவுள் கொள்கையுமே இக்கருத்துகளை நிறுவதற்குப் போதுமானவையாகும். சைவம் இல்லற தர்மத்தை வலியுறுத்துவதுடன் துறவையும் அங்கீகரிப்பது; இயற்கை வயப் பட்டது. பௌத்தம் கோட்பாட்டு ரீதியில் ஒழுக்க சீலத்தை, பஞ்ச சீலத்தை, அட்ட சீலத்தை வலியுறுத்துவது. அவைதிக சமயங்கள் என அழைக்கப் பட்டவை சமணமும் பௌத்தமும். பிறமத ஒழுக்கப் பிறழ்வுகளினால், 'சைவம்' மிகவுயரிய - உன்னத சமயமாகப் பரிணமிக்கத் தொடங்கியது. இதன் காரணமாகத் துறவை விடவும், 'இல்லறதர்மம்' இன்றுவரை உலகிலே வெற்றிபெற்றுச் சாதனாமார்க்கமாக நல்லறவாழ்க்கை முறைமையை உலகத்தில் அங்கீகரிக்கிறது என்பதனை அனுபவ வாயிலாகவே ஏற்றுக்கொள்ள முடிகிறதல்லவா? ஆகவே போதனையை விடவும் சாதனை மார்க்கமே - சாதனை நெறியே ஆராயத்தக்கதும் அறியத்தக்கதுமாகும்.

'அனுபவமற்றவரின் கூற்றுப் பொய்யேயாகும்'. எனவே தத்துவ விற்பன்னர்களான, சாதனை வீரர்களெனத் திகழும் துறவிமார் கருத்தை விடவும் இல்லறஞானிகளின் மறைமொழி உண்மையனுபவம் தான் இல்லற ஞானிகளின் மறைமொழி உண்மையனுபவம் தான் உலகுக்குப் பயன் விளைக்கும் என்பதனை மனுக்குலம் உணரத் தொடங்கிவிட்டது. அதன் விளைவுகளில் ஒன்றுதான் இதுபோன்ற ஆதாரபூர்வமான கருத்துகளுடன் வெளிவரும் ஆராய்ச்சிக் கட்டுரைகள்.

பௌத்தத் தமிழர் வாழ்ந்ததும் மறைந்ததும் உண்மையற்றது - பொய் யானது - புலுடா என்று சிங்கள ஆய்வறிஞரும், மக்களும் கூறுவார்களே யானால் குருணாகல் பகுதியில் தற்போதுள்ள ஆதிவாசிகளான வேடர்களது இருப்பும் கேள்விக்கிடமாய்விடும். வேடுவ ஆதிவாசிகளை ஏற்றும், போற் றியும் வாழ்த்தியும் வழுத்தியும் - இன்றும் அவர்களது மொழியைக் கூட இன்னதென அறிந்து கொள்ளமுடியாத நிலையில் - ஏற்றும், உறவாடியும், உதவிகள் புரிந்தும் வரும் பௌத்தர்கள் நாகர், இயக்கர் குறித்த செய்திகள் மட்டும் பொய்யானவை என்று விசமத்தனமாய் நிராகரிக்கும் மனோநிலையை மாற்றவல்லவர்கள் தான் யாரோ? என்று வியக்கத் தோன்றுகிறதல்லவா? இவ்வம்சம் பண்பாட்டு நலத்துடன் தொடர்பு கொண்டது என்பதனை மட்டும் இவ்விடத்திற் சுட்டி இனிவருங் காலத்திலே 'மனவிரிவும்' மனவிலாசமும், நாகரிக நடைமுறையும், 'அறிவின் தெளிவும்' உள்ள போது மட்டுமே' 'பௌத்தத்தைத் தமிழர்கள் தமிழ்ப் பௌத்தர்களாயிருந்து வளர்த்தார்கள்' -

பேணினார்கள் என்பதை வெளிப்படுத்தி அங்கீகரிக்கச் செய்யலாம். இதனைச் சாதிக்கவும், போதிக்கவும் இன்னும் எவ்வளவு தமிழ் உயிர்கள் பலியாகுமோ என்பதே எம்முன்னுள்ள கேள்வி?

இனி, பௌத்தத்தை வளர்த்த பண்டைய தமிழர்கள் குறித்து வீரகேசரி யிலே லண்டன் டாக்டர் எஸ். தியாகராஜா எழுதியுள்ள ஒரு சில கருத்துகளை நோக்குவோம்.

''இலங்கையின் ஆரம்பகால பௌத்த கலாசாரம் தென்னிந்தியாவி லிருந்து - குறிப்பாக ஆந்திராவிலிருந்தும் தமிழ்நாட்டிலிருந்துமே இந்நாட்டை வந்தடைந்தன என்பதை இயம்பி நிற்கும் சான்றாதாரங்களாக யாழ்ப்பாணப் பௌத்தக் கலை வடிவங்கள் விளங்குகின்றன. புராதன யாழ்ப்பாணத்தில் வழக்கிலிருந்த தமிழ்ப் பௌத்த மதத்திற்கும் இன்று தென்னிலங்கையின் சிங்கள மக்கள் பேணும் பௌத்தத்திற்கும் கலாசார ரீதியான கட்டடக்கலை ரீதியான தத்துவ ரீதியிலான வேறுபாடுகள் இருந்தபோதிலும் இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட எந்தப் புராதன பௌத்தக்கலை வடிவமும் வடஇந்திய பௌத்தக் கலைமரபினைப் பிரதிபலிப்பதாக இல்லை. வட இந்தியாவில் ஆரம்பகாலப் பௌத்தக் கலைகள் உதயமான காஞ்சி, பாரூட், புத்தகாயா, காந்தாரா ஆகிய மையங்களின் பௌத்த கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் பண்டைய பௌத்த கருவூலங்கள் இதுவரை இலங்கையில் எங்குமே கண்டு பிடிக்கப்படவில்லை. மாறாக, யாழ்ப்பாணத்தில் கந்தரோடை, சுன்னாகம், வல்லிபுரம், புத்தூர் ஆகிய இடங்களிலும் பெரு நிலப்பரப்பில் உருத்திரபுரம், மதவாச்சி, குச்சவெளி, அநுராதபுரம், கித்துல்கொட ஆகிய இடங்களில் கண்டெடுத்த புத்தர், போதிசத்வர் சிலைகளும், பௌத்த ஐதீகக் கதைகளைச் சித்திரிக்கும் புடைப்புச் சிற்பங்களும், ஆந்திர நாட்டிற்கேயுரிய பளிங்குக் கல்லில் வடிக்கப்பட்டவையாக உள்ளன. இதையொத்த கலைவடிவங்களே தென்னகத்திலும் கிடைத்திருப்பதால் இவை ஆந்திராவிலிருந்தும், தமிழ் நாட்டிலிருந்துமே இலங்கை வந்தடைந்திருப்பதாகக் கிருஷ்ணராஜா, புஷ்பரட்ணம் போன்ற ஆய்வாளர்கள் கூறுவதில் தவறேதும் இருக்கமுடியாது. வடஈழத் தமிழர்களில் ஒரு பிரிவினர் பௌத்தர்களாக இருந்ததை நிரூபிக்கும் முக்கிய மூலாதாரங்களில் பிராமிக் கல்வெட்டுக்கள் குறிப்பிடத்தக்கவை. பௌத்த நிறுவனங்களுக்குக் கொடை தந்தோர்களாகக் கூறப்படும் அபயன், சுமணன், சுமன், பூதன், பருமகன், பருமகள், குடும்பிகன், ஆய், வேள், மல்லன், மாறன், சோடன், நாகன், பரதன் ஆகிய தமிழ்ப்பெயர்கள் கொண்ட கல்வெட்டுக்கள் இவர்கள் தமிழ்ப் பௌத்தர்களாக இரந்தார்கள் என்பதை உறுதி செய்யும் பதிவேடுகள்.

புராதன திராவிட மக்களின் பெருங்கற்காலப் பண்பாடும், பௌத்தக் கலை மரபும் இணைந்த ஒரு தனித்துவமான கலாசாரப் பண்பை யாழ்ப்பாண பௌத்தம் காட்டி நிற்கிறது. இறந்தவர்களின் புதைகுழிகளில் காணப்படும் பெருங்கற் கலாசாரப் புதைபொருட்களும், அவற்றின் மேல் எழுப்பப் பட்டிருக்கும் இடுகாட்டு ஸ்தூபங்களும் யாழ்ப்பாண பௌத்தத்திற்கு உரிய தனித்துவமான பண்புகளே.

### தமிழ்ப் பௌத்த மகா காவியம்

இரண்டாம் நூற்றாண்டின் இந்திய தென்புலத்தில் ஒப்புவமை இல்லாமல் தன்னிகரற்று விளங்கிய யாழ்ப்பாணம் தமிழ்ப் பௌத்த பாரம்பரியத்தைப் பின்னணியாகக் கொண்டு பெயர்ந்தெழுந்து பிரவாகித்த மாபெரும் காப்பி யமே மணிமேகலை. இக்காவியம் போற்றும் பௌத்தப் பண்புகளை மணி பல்லவ மக்கள் பேணிய மதத்தத்துவங்களை - தமிழர்கள் கண்ட பௌத்த தர்மத்தைப் பின்னர் ஆராய்வாம்'' (வீரகேசரி, 2008) என்று எழுதுகிறார் லண்டன் டாக்டர் எஸ். தியாகராசா. இம்மேற்கோள் குறித்து நோக்குகையில் இரு வழக்குகள் இங்கு கையாளப்படுகின்றன.

1. தமிழ்ப் பௌத்தர்கள்
2. யாழ்ப்பாணப் பௌத்தர்கள்

சர்ச்சையும், சண்டையும் பெருகுவதற்கும் இச்சொற்கள் - சொல் வழக் காறுகள் அறிஞரிடையே பெரிதும் காரணமாயுள்ளமையும் கருதத்தக்கது. இன்றும் நயினாதீவிலும், யாழ்ப்பாணத்து ஆரியகுளத்துக்கு முன்னும், கந்தரோடையிலும் பௌத்த விகாரைக்குரிய சைத்தியங்களும், வட்டவடிவ மான அத்திவாரங்களும் புத்தர் சிலைகளும் உள்ளன - காணப்படுகின்றன.

இத்தொடர்பில் இலங்கையில் வெடித்த இனக்கலவரங்களின் போதும் வடபகுதியில் கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவக் கெடுபிடிகளின் போதும் இப்பகுதிகளில் பலத்த சேதம், அழிவுகள், தாக்கங்கள், இழப்புகள் ஏற்பட்டு அப்பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ்மக்கள் சொல்லொணாக் கொடுமை களுக்கும் மரணத்துக்குமுட்பட்டனர். அத்துடன் பிறமத வழிபாட்டுத் தலங்கள் அடித்தும் இடித்தும் தீவைத்தும் குறையாட்டும் சின்னாபின்னப்படுத்தப் பட்டும் அழிக்க முனைந்தனர். எனினும், தமிழ்பேசும் மக்களின் இறை பக்தியும், மதச்சகிப்பும், அறிவுந் தெளிவும் பக்திமேம்பாடும் உயிர்ப்புடன் இருப்பதால் இன்றுவரை பௌத்த வழிபாட்டிடங்களைப் பேணி வருகின்றனர்;

பாதுகாத்து வருகின்றனர்.இராணுவ அதிகார வலுவுள்ள பிரதேசமாக்கி எல்லா வழிகளிலும் அடக்கியாள முற்படும் மனோபாவம் வேகம் பெற - ஆலயங்களைப் பேணுதல் தொடர்பான பிரச்சினைகளும் எழத் தொடங்கின. கொடாக் கண்டரும் - விடாக்கண்டர்களும் அரசியல் நடத்தும் வரை இனங்கள் மத்தியிலே நிலவும் அவநம்பிக்கையும், நம்பகமற்ற - விசுவாசமற்ற நிலைமையும் நீடித்து நிலைத்து அழிவுகளைக் கூறும். 'மேலாதிக்க வாதம்' உண்மைத் தரவுகளின் மூலம் உறுதிப்படும் செய்திகளையே 'கேட்க மாட்டேன்', 'பார்க்க மாட்டேன்', 'படிக்க மாட்டேன்', 'ஏற்றுக்கொள்ளவும் மாட்டேன்' என்று பிடிவாதம் பிடிக்கும் நிலைப்பாடே அரசியலில் புகுந்துள்ள கொலைக் கலாசார மதவாதிகளின் வேணவாவாகவுள்ளது. இதனை 'நிமிர்த்தவல்லார்களே' இன்று தேவைப்படுகிறார்கள். 'உணரமாட்டேன்' என்பதால் 'உணர்த்துவோம்' என்ற பேரெழுச்சி ஏற்பட்டாலன்றி உண்மை வெளிவராது. இன்றுள்ள அவசிய - அவசரத் தேவை பண்பாட்டுப் பேணுதலுக்கான எழுச்சியேயாகும். மத, மொழி பண்பாட்டின் அழிவே இனத்தின் அழிவுக்கு முதற்படி. எழுச்சி கொள்வது காலத்தின் கட்டளை எனலாம்.

தமிழன் எங்கே எனும் தலைப்பில் நூல் வெளியிட்டுள்ள தென் புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை தமது நூலிலே எடுத்துக்காட்டும் சான்றுகள் சிலவற்றையும் நோக்குவாம். அவர் தமது ஆய்வுக்குக் கைக்கொண்ட சான்றாதாரங்கள் குறித்தும் முதலில் எழுதியுள்ளமை கவனித்தற்குரியது.

''பழைமை ஆராய்ச்சி மரபு, இன மரபு. மொழி மரபு, இலக்கிய மேற்கோள், கல்வெட்டு மேற்கோள் ஆகியவற்றின் உதவியால் இவ்வாராய்ச்சி இயல்கிறது'' என்கிறார்.

மூன்றாவது கடற்கோள் பற்றிக் கூறும் தென் புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை மணிமேகலைச் சான்று காட்டுகிறார். அவ்வரிகள் வருமாறு!

*தீங்கனி நாவலோங்குமித் தீவிடை*
*யின்றெழு நாளிலிரு நில மாக்கள்*
*நின்று நடுக்கெய்த நீணில வேந்தே*
*பூமிநடுக்குறூஉம் போழ்கத்திந் நகர்*
*நாகநன்னாட்டு நானூறி யோசனை*
*வியன்பாதலத்து வீழ்ந்து கேடெய்தும்* *(மணி. 9:17-22)*

காவிரிப்பூம்பட்டினம் அழிவுற்றபோது தான் குமரியாறும் கடல் வாய்ப் பட்டது எனக் கொள்ளுதல் வேண்டும்.

''அன்றந்திலங்கையினை ஆண்ட மறத்தமிழன்'' என்றுரைக்கிறார் பாரதிதாசன் என்றும் எடுத்துக்காட்டுகிறார். இச்சான்றுகளிலிருந்து கடல்கோள்கள்

காலத்துக்குக் காலம் நிழ்ந்தமையும், ஆரம்பத்தில் தமிழராட்சி நிலவியபின் படிப்படியாக அது இல்லாது ஒழிக்கப்பட்டது என்ற செய்திகள் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன.''

**நாவலந்தீவு**

நாவலந்தீவு பற்றித் தென் புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை மேல்வருமாறு கருத்துரைக்கிறார்.

''தென்னாட்டவர் இந்தியாவுக்கும் அதனை அடுத்திருந்த பகுதிகளுக்கும் கொடுத்த முதற்பெயர் 'நாவலந்தீவு' அல்லது 'நாவலந்தண் பொழில்' என்பதாகும். பனிமலை தோன்றாத முதற்காலத்தில் நாவலந்தேய முழுவதும் தமிழே வழங்கிற்று.

நாவலந்தீவு என வழங்கிய நாட்டின் ஒரு பகுதிக்கு அலெக்சாந்தரின் படையெடுப்புக்குப் பின் மேற்கு நாட்டவர்கள் கொடுத்த பெயர் இந்தியா. 'இந்தியா' என்பது 'சிந்து' என்பதன் திரிபாகும். 'சிந்து' என்பதை 'ஹிந்து' எனக் கிரேக்கர் வழங்கினர்.

''நாவலந் தண்பொழில்'' என்னும் சொற்றொடரில் முதலில் நிற்பது நாவல் என்னும் தனிமரப்பெயர். 'பொழில்' எனப்படுவது 'சோலை' நாவல் மரங்களும் செடிகொடிகளும் செழித்தோங்கி வளர்ந்து கொண்டிருந்த தமது நாட்டினை 'நாவலந் தண்பொழில்' எனத் தமிழ் மக்கள் கொண்டாடினர். இதனையே 'வண்புகழ் மூலர் தண்பொழில் வனப்பு' எனத் தொல்காப்பியம் கூறிற்று. இங்ஙனமாகத் தனிமரங்களின் பெயர்கள் பல தமிழ்நாட்டில் ஊர்ப் பெயர்களாகவும் விளங்குகின்றன.

வடமொழி இராமாயண காலத்துக்கு முந்தியது தொல்காப்பியம் எனக் கருதப்படுகிறது. தொல்காப்பியத்திலே குறிக்கப்பட்ட நாவலந் தண்பொழில் ஆகிய 'மூவர்தண்பொழில்' வடமொழியளரால் 'ஜம்புகண்ட' எனவும், 'நாவலந்தீவு', 'ஜம்புதுவீத' எனவும் மொழிபெயர்க்கப்பட்டமை இன்றைய ஆராய்ச்சியாற் பெறப்படுகிறது. 'முதுகுன்றம்' 'பழமலை' என வழங்கப் பட்ட மலைப்பெயர் 'விருத்தாசலம்' என வடமொழியாளரால் மொழி பெயர்க்கப்பட்டமை யாம் அறிந்ததொன்றல்லவா?

இங்ஙனமாக, வடமொழியாளர் ஊர்ப்பெயர்களை மொழிபெயர்த்த போது காரணம் தெரிந்துகொள்ள முடியாமலோ, பெயர்களின் உண்மை யுருவங்களை அறிந்து கொள்ளாமையோ தவறாக மொழிபெயர்த்தமை யையும் காண்கிறோம். ஆத்தி மரங்கள் மிகுதியாக வளர்ந்து கொண்டிருந்த நிலப்பகுதியினை நமது முன்னோர் 'ஆர்க்காடு' என்றனர். சோழ நாட்டில்

பழைய தலைநகரம் 'ஆர்க்காடு' என்றனர். சோழநாட்டின் பழைய தலைநகரம் 'ஆரூர்' (திருவாரூர்) ஆகும். பொருளைச் செவ்வனே வாங்கிக் கொள்ள வியலாத வடமொழியாளர் 'ஆர்க்காடு' என்பதனை 'ஆற்காடு' எனக் கொண்டு 'ஆறுகாடு' எனக் கருதி 'சடாரணியம்' என மொழிபெயர்த்துக் கொண்டார்கள் என்பதறிவோம்.

திரு. ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் தமது 'ஊரும் பேரும்' எனும் சிறந்த ஆராய்ச்சி நூலிலே இதனை (ஆர்க்காடு என்பதனை) ஆற்காடு என்று கொண்டு ஆறுகாடு அங்கிருந்தனவென்று புராணம் கூறும். வடமொழியில் 'ஷடாரணியம்' என்பர். அது குறித்து டாக்டர் கால்டுவெல் கூறும் குறிப்பை அவரது ஒப்பிலக்கண முகவுரையிற் காண்க.[126] 'ஜம்புதுவீப' (சம்புத்தீவு) என நிலைபெற்ற 'நாவலந்தீவு' பாளி மொழியிலே 'ஜம்புதிவ' என நிற்கும்.[127]

## சம்புத்தீவு

''நாவலந்தண்பொழிலானது வடமொழியில் நாவல் - ஜம்பு, 'ஜம்பு துவிப ஆகிப் பின் 'சம்புத்தீவு' எனத் தமிழ்மொழியில் வந்து வழங்குகிறது. சம்புத்தீவு, கடல் கோளின் காரணமாகத் தன் பரப்பும் எல்லையும் குறுகி மாறுபட்ட காலத்திலும், தன் பெயரினை இழந்துவிடவில்லை. சம்புத்தீவின் பகுதியாயிருந்த இலங்கையும் அப்பெயரினைப் பேணிக்கொண்டே வந்தது. இலங்கையின் வடபகுதியிலுள்ள நயினாதீவுக்கும் 'சம்புத்தீவு' என்ற பெயர் வழங்கி வந்ததுண்டு.''[128]

## சம்புத்தீவுதான் 'சிங்களத் தீவு' ஆயிற்று

பழைய இலங்கையிலே வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் மக்கள் தமது நாட்டினை (நாவலந்தீவு) என்பதன் மொழிபெயர்ப்பாய்ச் 'சம்புத்தீவு' எனவே குறித்தனர் எனக் கொள்ளக் கிடக்கின்றது. 'சம்புத்தீவு' என்னும் பெயரினை மொழிபெயர்த்தெழுதிய இலங்கைத் தமிழ் பௌத்தர்கள் - காரணந்தெரியாதவர்களாய் 'சம்பு, நரி எனக் கொண்டு சிகாள எனப் பாளி மொழியில் மொழிபெயர்த்துக் கொண்டார்கள். அதனால் 'நாவலந்தீவு' எனப் பெயர் கொண்டிருந்த நமது நாடு 'சம்புத்தீவு' ஆகி இறுதியில், சிகாளத்தீவு, சிங்காளத்தீவு, சிங்களத்தீவு என மாறிற்று எனலாம். 'சம்பு' என்ற சொல்லினுக்கு 'நாவல்' என இரண்டு பொருள்கள் வடமொழியில் உண்டு. 'சம்பு - நாவல்' என்பதை மறந்து, 'சம்பு - நரி' என இரண்டு பொருள்கள் வடமொழியில் உண்டு. 'சம்பு - நாவல்' என்பதை மறந்து 'சம்பு - நரி' எனக்

கொண்டமையால் ஏற்பட்ட தவறு இது. இலங்கையை ஆங்கிலேயர் கைப்பற்றிய காலத்தில் அங்கே சத்தியவேதத்தைப் போதித்துக்கொண்டிருந்த பல்டேயஸ் பாதிரியார் தமது இலங்கை விவரணம் என்னும் நூலில் (A Description of Ceylon by Baldeus) 'நயினாதீவு' என்றால் 'நரிகள் வாழும் தீவு' எனும் பொருளுடையது என்று எழுதியுள்ளதையும் இதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம். 'ஜம்பு' என்ற வடமொழிச் சொல்லினைப் பாளிமொழியில் மொழிபெயர்த்தோர் பட்ட அவலங்களை அச்சொல்லினுக்குக் கொடுக்கப் படும் பலவாய பாடபேதங்களே எடுத்துக்காட்டுவனவாம். 'சிகாள' என்ற சொல்லானது 'சிங்காள' எனவே பல நூல்களில் (சம்யுக்ப: 111,23; விசுத்தி மார்க்க 196: பெதவத்த III: 52) வழங்கி வருகிறது. 'சிகாள' என்னும் சொல் 'சிவள' எனவும் நிற்கும். 'சிகாள' என்ற சொல்லே 'சிங்கள' என நின்று சிங்களமொழியில் நாட்டையும் மொழியையும் குறித்தது. எழுதும் போது கூட, 'சிங்கல' எனவும் 'சிங்கள' எனவும் வரம்பின்றி எழுதப்படும்.[129]

மேலும் 'ஜம்புத்தீவு' எனும் வடமொழிச் சொல் சிங்கள மொழியில் 'தம்புத்தீவு' எனவும், 'தம்பத்தீவு' எனவும் நிற்கின்றமையையும் காண்கிறோம். 'தம்ப' எனும் சொல் 'தம' எனக் கூடச் சிங்களமொழியில் வழங்குகிறது. 'நாவலந் தண்பொழில்' என்பதையே நேரே குறிப்பது போன்ற 'தம்பன்ன' 'தம்வன்னா' என்ற வழக்குகளும் சிங்கள மொழியில் இருப்பதனால் 'நாவலந் தீவு' தான் 'சிங்களத்தீவு' என வந்ததெனக் கொள்ளுதல் பொருத்தமாகத் தோன்றுகிறது.''[130]

### 'தாபிரபன' என்பது யாது?

மிகப் பழைய காலத்து யவன, ஆசிரியர்கள் பலர் இலங்கைத்தீவு 'தாபிரபன' என்னும் பெயராற் குறிக்கப்பட்டதாகக் கூறுவர். இப்பெயரினை 'Tap-raban (Tab ravan) எனப் பிரித்து, இராவணன் தீவு எனப் பொருள் கொள்வர் சிலர். 'தம்பபன்னை' எனச் சிங்கள நூல்கள் இலங்கைத் தீவுக்கு இட்டு வழங்கிய பெயரின் மரூஉ என்பர் வேறு சிலர். தாமிரபரணியாற்றுக்கருகில் வாழ்ந்த தமிழர் இலங்கையில் வந்து குடியேறியபொழுது அத்தீவுக்கு இட்ட பெயர் 'தாமிரமரணி' என்றும் அப்பெயரே 'தாபிரபன'என மருவி வழங்குகிறது என்றும் கொள்வாருமுளர். தமிழர் பனைநாடு தான் 'தாமிழபனை' 'தமிர பனை', 'தாமிரபரணி' எனக் கொள்ளப்பட்டதென்பது எமது தீர்க்கமான முடிவு என்பர் தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை.

'தமிழம்' என்ற சொல்லினையே 'திரமிளம்', 'திரமிடம்', 'திராவிடம்' எனக் கொண்ட ஆரியர் 'தமிழர்பனை' நாட்டினையும் 'தாமிரபரணி' நாடாக்கிக்

கொண்டனர் என்க. 'பனை' என்னும் சொல் 'பனி' என மருவியதற்குத் தென்னிந்திய சாசனங்களே சான்று பகர்கின்றன. (தமிழ்ச் சாசனங்கள், தங்கையநாடர், வ, ப., 21) தாமிரபரணி யாற்றுமுகத்தில் விளங்கியது கொற்கைத்துறை எனவும் அது நாளடைவில் தூர்ந்து போயிற்று எனவும் கூறுகின்ற வரலாறும் உண்டு.

தமிழர் பனை நாட்டின் பெயர்மாறி, 'தம்பபண்ணி' 'தாமிரபரணி' எனக் குறிக்கப்பட்ட காலத்தில் - இடப்பெயர்க் காரணம் தெரிக்கலாற்றா நிலையில் விசயன் என்னும் மன்னன் வரலாறு சமைக்கப்பட்ட வேளையில் நிலத்தில் அமர்ந்திருந்தோன் கையூன்றிய காலையிற் சிவப்பு நிறங் கண்டமையால் 'தம்பபன்னி' எனப் பெயர் பெற்றதெனக் கதை கட்டப்பட்டது.''[132]

**தம்பரட்டா, தாமிரபரணி தேசம்**

பௌத்தப் பெரியோர்களுள்ளே சிலர், ஆசாரிய தம்பபாலர் வச்சிரபோதி தர்மகீர்த்தி ஆதியானோர் பாண்டி நாட்டிலே வாழ்ந்தார்கள் என்பது வரலாறு. அப்பாண்டிய நாடு பாளி மொழியில் 'தம்பரட்டா' (தாமிர பரணி தேசம்) என்று கூறப்படுகிறது. (வேங்கடசாமி, சீனி, மயிலை, பௌத்தமும் தமிழும். ப. 63) ஆசாரிய தருமபாலரைப் பாளி மொழியில் 'தர்மபால ஆசாரியார்' என்பர். அவரது ஊர் 'தம்பரட்டே வசந்தசேன நாகரே தஞ்சா நாமகே' எனக் கூறப்படுகிறது.

எனவே இலங்கை மாத்திரமன்றி இந்தியாவின் ஒரு பகுதியும் 'தம்பரட்டா' எனப்பட்டமை தெளிவாகிறது. வடமொழியிலே வியாசபாரதத்தில் வன பருவத்தில் (அத். 86) யுதிஷ்டிரருக்குத் தீர்த்தமகிமைகளை உரைக்குமிடத்தில் தாம்பிரபர்ணி நதி குறிக்கப்படுகிறது. வான்மீகி இராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்தில் (அத். 47) சுக்கிரீவன் சீதையைத் தேடத் தெற்கு நோக்கிக் குரங்குப் படைகளை அனுப்புகிற இடத்தில் முனி சிரேஷ்டரான அகஸ்திய ருடைய அனுமதியின் பேரில் நீங்கள் தாமிரபர்ணி என்ற முதலைகள் நிரம்பிய நதியைக் கடந்து செல்லுங்கள் என வருகிறது. இவ்விரண்டு இதிகாசங்களிலும் தாம்பிரபர்ணியைக் குறிக்கும் பகுதி பிற்காலத்துச் சேர்க்கையாகவே பெரும் பாலும் இருத்தல் கூடும். காளிதாசன் (கி.பி. 5 ஆம் நூற்) தனது ரகுவம்மி சத்தில் '...தாமிரபர்ணி எழுகின்ற கடலிடத்து உண்டாகும் சிறந்த முத்துக்களைத் தொகுத்துக் கொடுத்தனர்' என்று கூறுகிறான். வராகமிகிரனும், (கி.பி. 505-587) தனது மிருகத் ஜாதகத்தில் பாண்டிய அரசனையும் தாம்பிரபர்ணி நதியையும் முத்துக் குளித்தலையும் கூறுகிறான். மார்க்கண்டேய புராணத்திலும் (அத். 27, 52) இன்னும் பல புராணங்களிலும் தாம்பிரபர்ணி நதி கூறப்பட்

டுள்ளது என்பர் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை (தாம்பிரபர்ணி, பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை).

**பழைய வழக்காறு**

''மெகஸ்தனிசும் (கி.மு. 302) பெரிபுளூஸ் நூலாசிரியனும் (கி.பி. 80), தொலமியும் (கி.பி. 150) 'தாப்ரபனெ' (தாபிரபன) என்ற பெயராலும், கீர்நார் சிலாசாசனத்தில் அசோகச் சக்கரவர்த்தியும் (கி.மு. 273-232) பௌத்த ஆசிரியர்கள் சிலரும் 'தாம்பன்னி' என்ற பெயராலும் சிங்கள நாட்டை (இலங்கைத் தீவை) வழங்கியிருக்கின்றனர். இவ்விரு பெயர்களும் 'தாம்பிர பர்ணி' என்பதன் மரூஉவாதல் வெளிப்படை. 'தாம்பிரபர்ணி' என்ற நகர் ஒன்று இலங்கையிலுள்ளதாக மார்க்கண்டேய புராணம் (அத். 58:28) கூறு வதும் தாம்பிரபர்ணி நதி கடலோடு கலக்குமிடத்திற்கு நேராக இலங்கைத்தீவு உள்ளதும் இங்கே அறியத்தக்கன'' என்பது பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை யின் கூற்றாகும். (தாம்பிரபர்ணி - பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை)

பல்கலைக்கழகத்திலே சமஸ்கிருதப் பேராசிரியரும், இலக்கிய கலா நிதியும், தீவகத்தின் முதுபெரும் ஆய்வறிஞரும், நயினாதீவைப் பற்றிய முன்னோடி ஆய்வினை மேற்கொண்டவரும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே என் பேராசானுமாகிய பேராசிரியர், கலாநிதி வி. சிவசாமியின் கருத்துகளை இனி நோக்குவாம்.

> இலங்கையின் பூர்வீக குடிகளான யஷர், நாகர் என்போர் பற்றித் தீபவம்சம், மகாவம்சம் முதலிய நூல்கள் கூறுகின்றன. இவர்களில் யஷர், ஆதி, ஒஸ்ரலோயிட் இனத்தவர் எனவும், நாகர் திராவிடர் எனவும் வரலாற்றாசிரியர் பொதுவாகக் கருதுவர். இந்நாகர் பெரும் பாலும் வட இலங்கையிலே வாழ்ந்தனர். இவர்களிடையே நாக வழிபாடு பிரபல்யமாக விளங்கி வந்துள்ளது. நாகம்மாள் (நாக பூஷணியம்மன்), நாகதம்பிரான் கோவில்கள் தீவகத்திலே குறிப்பாக, நயினாதீவு, அனலைதீவு, புங்குடுதீவு முதலிய இடங்களில் பிரபல் யமாக உள்ளன. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் மிகப் பிரசித்தி பெற்றதாகும். நாக, நயினா எனும் பதங்கள் பாம்பு எனும் பொருள்படும். நாகவழிபாடு இன்றும் இப்பகுதியிலே பிரபல்யமாக உள்ளது. புராதன நாகர் மத்தியில் இவ்வழிபாடு நன்கு நிலவிற்று. வையாபாடல் எனும் நூல் 'நாகநயினார் தீவு' எனக் குறிப்பிட்டிருப்பது கவனித்தற்பாலது.[133]

> புராதன தீவகத்திலே வாழ்ந்த திராவிடர், குறிப்பாகத் தமிழர் மத்தியிலே ஆதி இந்து சமயம் நிலவியிருக்கலாம்.[134]

> தீவகத்திலும் பௌத்தம் நிலவியிருக்கலாம். புராதன இலங்கைப் பௌத்த மரபிலே நாகதீப - குறிப்பாக, நயினாதீவு ஒரு முக்கியமான பௌத்த நிலையமாகக் கூறப்பட்டுள்ளது. இங்கு புத்தபெருமானே எழுந்தருளியதாகவும் கூறப்படுகிறது. இதைவிடப் 'பியங்குதீவ' என ஒரு சாரார் கருதும் புங்குடுதீவும், காரைதீவும் (காரைநகர்) பௌத்த புனித இடங்களாகக் கூறப்பட்டுள்ளன. அதே வேளையிலே தமிழ்நாட்டுப் பௌத்த மரபினை அடிப்படையாகக் கொண்டெழுந்த மணிமேகலையிலே கூறப்படும் மணி பல்லவம் நயினாதீவு எனப் பொதுவாக அடையாளம் காணப்படுகிறது. மணிமேகலை, ஆபுத்திரன், அஷயபாத்திரம் பற்றிய ஐதீகங்கள் இன்றும் நயினாதீவில் உள்ளன. எனவே தென்னிந்திய இலங்கைப் பௌத்த மரபுகள் தீவகத்திலும் சங்கமித்துள்ளன எனலாம். அக்காலகட்டத்தில் வாழ்ந்த பௌத்தர்களிற் பலர் தமிழர் எனலாம்.[135]

இக்கட்டுரையிலே முன்னர் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பன்னாட்டு வணிக, சமய, பண்பாட்டுத் தொடர்புகள் குறித்த செய்திகளையும் பேராசிரியர், கலாநிதி வி. சிவசாமி தமது கருத்துகளினாலும், எழுத்தினாலும் நிலை நாட்டியுள்ளமை காணத்தக்கது. அவரது கருத்துகள் மேல்வருவன:

> இந்தியத் தொடர்புகளைவிடக் கிரேக்க, உரோம, அராபிய, ஜாவக, சீனத் தொடர்புகளும் குறிப்பிடற்பாலன. பொலந்நறுவ, தம்பதெனிய, கோட்டையரசர்களின் காசுகளும், யாழ்ப்பாண மன்னரின் சேது நாணயங்களும், ஐரோப்பிய ஆட்சியாளரின் நாணயங்களும் இப் பகுதியில் இதுவரை அறியப்பட்டுள்ளன. சீனத் தொடர்புகளைக் காட்டும் சான்றுகள் குறிப்பிடற்பாலன. கி.பி. 10 ஆம் நூற்றாண்டு தொடக்கம் சில நூற்றாண்டுகளாகச் சீன வர்த்தகம் இலங்கையிலே செழிப்பாக நடைபெற்றது. சுமார் அரை நூற்றாண்டுகளுக்கு முன் நயினாதீவிலுள்ள பப்பரவன்சல்லி எனுமிடத்திலே கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனச் சாடிகள் கிடைத்தன. இத்தகைய சாடிகள் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை முதலிய இடங்களிலும் வெளியே பொலநறுவ போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன. அல்லைப் பிட்டியிலே சுமார் பத்து ஆண்டுகளின் முன் பேராசிரியர் ஜோன் காஸ்வெல் நடத்திய அகழாய்வின் போது, மேற்குறிப்பிட்ட சீனச் சாடிகள், மட்பாண்டங்கள் முதலானவற்றின் துண்டுகளும், பிறவும் வெளிவந்தன.[136]

'இனி, 'நயினாதீவு இடப்பெயர் ஆய்வு' என்னும் கட்டுரையிலே கலாநிதி இ. பாலசுந்தரம் குறிப்பிடும் கருத்துகளை நோக்குவாம்.

கந்தபுராணத்தில் 'சப்த தீவுகள்' என்ற குறிப்பு வருகிறது. இவை இந்து சமுத்திரத்தில் காணப்பட்டன என்றும், அவற்றுள் 'சம்பு' என்பது நயினாதீவாகும் என்றும் 'கந்தபுராண மறைபொருள்' என்ற நூலிலே டானியல் ஜோன் குறிப்பிட்டுள்ளார்.[137]

நாகதீவு, நாகத்தீவு, நாகநயினாதீவு, நாகதீபம், நாவல்தீவு, பூந்தோட்டம், சம்புத்தீவு, மணிபல்லவம், மணிபல்லவத் தீவு, மணிநாகதீவு, பிராமணத் தீவு, மணித்தீவு, நரித்தீவு, நாகேஸ்வரம் என வடமொழியிலும், தமிழிலும் நாகதிவயின, நாகதீபய, நாகதீப எனச் சிங்களத்திலும் 'ஹர்லெம்' என டச்சு மொழியிலும் வழங்கப்படுகின்றன.[138]

'இலக்கியம் சுட்டும் 'மணிபல்லவம்' என்ற பெயரும் நயினாதீவினையே குறிக்குமென்பர். 'ஒரு சிறுதீவு காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து தன்னைத் தரிசிப்பவர்களுக்குப் பழம்பிறப்பின் செய்தியைத் தெரிவிக்கும் புத்தபீடிகை ஒன்றும், கோமுகி எனும் பொய்கையும் இருந்தன. மணிமேகலை தன் பழம் பிறப்பை இப்புத்த பீடிகையால் உணர்ந்தாள். அமுதசுரபி என்னும் பாத்திரத்தைத் தீவதிலகையின் உதவியால் இக்கோமுகியிலே பெற்றாள். எனவே இப்பெயர் வழங்கியது கி.பி. 2 ஆம் நூற்றாண்டளவில் ஆகலாம்.'[139]

''முற்காலத்தில் நயினாதீவில் இறைவன் சந்நிதியும் இறைவி சந்நிதியும் ஒரே ஆலயத்தில் வெவ்வேறாக இருந்தன. அப்பனும் அம்மையும் கோயில் கொண்டருளி இருந்த ஆலயமே நாகேஸ்வரமென அழைக்கப்பட்டது. அந்த ஆலயப் பெயரே ஊர்ப்பெயராக வழங்கி வருகிறது.''[140]

**நயினாதீவும் நிகழ்வுகளும்**

1. புத்தர் பெருமான் கி.மு. 423 - 483 இதற்கிடையில் நாகதீவில் நாகவழிபாடாற்றியிருக்கிறார்.
2. பர்மாவிலிருந்து தர்மசோகமகாராசா புத்திரசோகத்தில் வருந்தி நாகவழிபாடியற்றிப் புத்திரப் பேறடைய நாகதீவுக்கு வந்தார்.
3. அருச்சுனன் மணிபுரத்திற்கு வந்து நாககன்னியை மணந்து பப்பிரவாகனைப் பெற்றாள். இன்றைய நாகபூஷணி அம்மன் கோயில் அமைந்திருக்கும் இடத்தின் பெயர் ப்பிரவா(க)ன் சல்லி என்பதும் நோக்கற்பாலது.

4. ஆபுத்திரன் அட்சயபாத்திரத்தைக் கோமுகிப் பொய்கையில் இட்டுச் சென்றான்.
5. நெடுமுடிக்கிள்ளி எனும் சோழ மன்னன் மணிபல்லவத்திற்கு வந்து பீலிவளை என்பாளை மணந்து தொண்டைமான் இளந்திரையனைப் பெற்றான் என யாழ்ப்பாணச் சரித்திரம் கூறுகிறது. (Navaratnam, C. C. (1958), Tamils and Ceylon, Jaffna, p. 74-75).
6. இங்கு (நயினாதீவில்) கிரேக்க, உரோம, இந்திய, சீனப் பழைய நாணயங்கள் காலத்திற்குக் காலம் கிடைத்துள்ளன.
7. கிபி. 12 ஆம் நூற்றாண்டுக்குரிய சீனநாட்டுச் சாடிகள் கிணறு ஒன்றில் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

''நாகர் வாழ்ந்த காலத்திலிருந்தே நயினாதீவில் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். ஏறக்குறைய 14,000 வருடங்களுக்கு முன்பே நயினாதீவில் குடியேற்றம் இருந்திருக்க வேண்டும். அவர்களாற் தாபிக்கப்பட்ட ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் மூலஸ்தானத்திலுள்ள நாகம் 14,000 வருடங் களுக்கு மேற்பட்டதெனக் கட்டிடக்கலை, சிற்பக்கலை, பொறியியல் நிபுணரான திரு.எம். நரசிம்மன் (11.-3.1951) கருதுகிறார்.''[141]

''நனசயாத நாகதீவில் நாகத்தின் மணிவாங்க கசிவான மனதுடனே கடுகவுமையழைத்தோங்காண்'' என வழக்குரைத்த காதை கூறுகிறது. 'உலக அறிவியின் ஒரு தனி ஏறி (மேகலை, 17:86) என்னும் வரியில் சுட்டும். உலகத்தில்' இன்றும், 'உலக நிலை' என்ற காணிப் பெயராக வழங்குகிறது. 'அமுதசுரபி' என்ற பெயரில் 1961 இல் அன்னதான சபையொன்று நயினா தீவிலே செயற்பட்டு வருகிறது. ஆபுத்திரன் இந்திரனின் சதியால் இத்தீவிற்கு வந்து அமுதசுரபியைக் கோமுகி என்ற பொய்கையிற் போட்ட பின்னர் இறந்தான் என்ற நாட்டார் வழக்கிலான கதை ஒன்றும் இங்கும் வழங்குகிறது.''[142]

இனி, பிராமிக் கல்வெட்டுச் சான்றுகளினூடே 'ஈழமும் நாகவணக் கமும்' என்னும் அருமையும் பெருமையும் மகிமையும் மகத்துவமுமிக்க கட்டுரையொன்றினை எனக்குப் பல்கலைக்கழகத்தில் வரலாறு கற்பித்த பேராசான், பேராசிரியர், கலாநிதி சி. க. சிற்றம்பலம் (முன்னாள் தலைவர்) வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) எழுதியுள்ளார். பல்வேறு ஐதீகங்களையும் வாதப் பிரதிவாதங்களையும், முரண்பாடுகளையும் எதிர் கொண்டும் அலசியும் நுண்ணாய்வு செய்தும் தமது கருத்துக்களை முன் வைக்கும் சி. க. சிற்றம்பலம் மேல்வருமாறு எழுதியுள்ளார்:

புத்தபிரான் மேற்கொண்டதாக நம்பப்படும் விஜயத்தில் நிலைத் திருந்த சிற்றரசுகள் வடபகுதியில் மட்டுமன்றி இந்நாட்டின் பிறபகுதி களிலும் காணப்பட்டதை மகாவம்சம், தாதுவம்சம் போன்ற நூல்கள் மட்டுமன்றிப் பிராமிக் கல்வெட்டுக்களும் எடுத்தியம்புகின்றன. கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குரிய (கி.பி. 150) ரெலமி என்ற அறிஞர் ஈழத்திலுள்ள இடங்கள், மக்கள் பற்றித் தமது புவியியல் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளதை இச்சந்தர்ப்பத்தில் நோக்கும்போது இக்குறிப்புக்கள் எவ்வாறு பிராமிக் கல்வெட்டுச் சான்றுகளை உறுதி செய்கின்றன என்பதும் நன்கு புரியும். இது பற்றி முதலியார் இராசநாயகம் அவர்கள் கூறிய கருத்துகளை முதலில் நோக்குவோம். (Rasanayagam. C. 1926:78-79) இவ்வறிஞர், நாகர்கள் ஈழத்தின் வடபகுதியில் மட்டுமன்றித் தென்கிழக்குப் பிராந்தியங்களிலும் வாழ்ந்தார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். நாக வணக்கத்தில் ஈடுபட் டோரையே இவ்வாறு நாகவம்சத்தினர் என இராசநாயகம் அவர்கள் அழைத்தமை ஈண்டு நோக்கற்பாலது. நாக வழிபாடு திளைத்திருந்த இடங்களாக ரொலமியன் குறிப்பைக் கொண்டு ஈழத்தின் தென்பகுதி நகய்ரோய் (Nageoroi) எனவும், கிழக்குப் பகுதி நாகதீபி (Nagadiboi) எனவும் அழைக்கப்பட்டதாக இவர் குறிப்பிடுவதோடு நாகவழி பாட்டிற்றிழைத்த இரு நகரங்களையும் இராசநாயகம் அவர்கள் குறித்துள்ளார். இவற்றுள் ஒன்று அம்பாந்தோட்டைக்கு வடக்கே உள்ளது. இதனை இவர் ரொலமியின் நாகடோப (Naka douba) என அழைக்கிறார். மற்றது திருகோணமலைக்குக் கிட்டவுள்ள நாகதீப (Nagadiba) என்ற நகரமாகும். அத்துடன் மாத்தறைக்கு வடக்கே இரண்டு மைல் தொலைவிலுள்ள நைமன என்ற கிராமத்தின் பெயர் உண்மையிலேயே நைநாக என்ற சொல்லிலிருந்து மருவியதென்பதும் இவரது விளக்கமாகும். இதே இடத்தில் பழைய நாக கோயிலொன்றும் இருந்ததாக இவர் குறிப்பிடுகிறார். தற்காலத்தில் மகவிற்ற என்ற இடமே பழைய காலத்தில் நாகவழிபாட்டின் நகரமாகிய மாபபட்டுன என்றும் இவர் கருகிறார். பிற்காலத்தில் சோழர்படையெடுப்பு நடை பெற்ற காலத்தில் சிங்கள அரசர்கள் புகலிடம் தேடிய இடமாக மகாவம்சம் குறிக்கும் 'மகாநாக்குல' என்ற இடம் தான் மேற்குறிப் பிட்ட 'நைமன' என்பதும் இவரது வாதமாகும். ஆனால் அண்மையில் சின்னத்தம்பி அவர்கள் ரொலமியின் குறிப்பினைப் பற்றி ஒரு நூல் வெளியிட்டுள்ளார். (Sinnatamby, J.R., 1968) இந்நூல் நாகதீபி (Nagadibi) தற்கால சுளதிக் பிரதேசத்திலிருந்து வடபகுதியிலுள்ள முல்லைத்தீவு வரை அடங்கியுள்ளது என்கிறார். பாளி நூல்கள் தரும் குறிப்பினை நோக்கும் போது 'நாகதீபம்' கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட காலத்தில்

மேற்கூறிய நிலப்பரப்பை உள்ளடக்கிய பகுதியாக இருந் தமை புலனாகின்றது. ரொலமி கூறும் நானிகிரி (Nanigiri) திஸமகாராமவுக்கு வடக்கே உள்ள பகுதி என இவர் இனங்கண்டுள்ளனர். அத்துடன் இதற்குச் சான்றாதாரமாக ஈழநாக என்ற மன்னனால் திஸமகாராமப் பகுதியில் புனரமைக்கப்பட்ட நாகமகா விகாரையையும் குறிப் பிடுகிறார். அத்துடன் ரொலமியின் குறிப்பில் வரும் நச்சமே (Nachaduma) என்பது திஸ்ஸமகாராமப் பகுதியிலுள்ள நாகவழி பாட்டோடு தொடர்புடைய ஒரு நகரமென்பதும் இவரது கருத்தாகும்.[143]

மேற்கூறிய கருத்துகள் ரொலமி காலத்தில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் களனியாறு தொடக்கம் வடக்கெ வடமேல் வடமத்திய வடமாகாணப் பகுதிகள் வரை நாகவழிபாடு திளைத்திருந்தமையை எடுத்துக்காட்டுவதோடு தெற்கேயும், தென்கிழக்கேயும் இவ்வழிபாடு பரந்திருந்தமையையும் எடுத்துக் காட்டுகின்றன எனலாம். சமகாலத்தில் தமிழகத்திலும் நாகவழிபாடு நிலவிய தற்கான ஆதாரங்கள் உள. மலைபடுகடாம் இதற்குச் சான்றாகும். இதிற் காணப்படும் சில வரிகள் குறிப்பிடத்தக்கன (Subramaniapillai, G. 1948: 100).

*முரம்பு கண்ணுடைந்த பரவலற் போழ்விற்*
*கரந்து பாம்பொடுங்கும் பயம்பு மாருளவே*
*குறிக்கொண்டு மரங்கொட்டி நோக்கிச்*
*செறிதொடி விறலியர் கைதொழு உப்பழிச்ச*
*வறுதுநெறிபொரீஇ வலஞ் செயாக் கழிமின்* *(மலைபடுகடாம்)*

இவ்வாறே மருதமரத்தின் கீழ் உள்ள புற்றிலுள்ள பாம்புக்கும், மரத்திலுள்ள தெய்வத்திற்கும் கொடுக்கப்பட்ட நிவேதனம் பற்றியும் பெரும்பாணாற் றுப்படை (232:233) கூறுகிறது (Subramaniapillai, A. 1948: 99).

*பாம்புறை மருதின் ஒருங்கு சினை நீழல்*
*பலிபெறு வியன் களம் மலிய வேற்ற* *(பெரும்பாணாற்றுப்படை)*

இன்னோரிடத்தில் நாகம் கொடுத்த இரத்தினக்கல்லை ஆரியவம்ச அரசன் சிவனுக்குக் கொடுத்தது பற்றிய குறிப்பு சிறுபாணாற்றுப்படையில் (295:96) காணப்படுகிறது (Subramaniapillai, A. 1948: 101).

*நிழல், திகழ், நீல நாகம் நல்கிய கலிங்கம்*
*ஆலமர் செல்வற் கமாந்தனன் கொடுத்த ஆய் ஆகும்*
*(சிறுபாணாற்றுப்படை)*

ஒருகால் நாட்டின் பெரும்பகுதியை உள்ளடக்கிய நாகதீபம் என்ற பதம் இன்று நயினைத்தீவை மட்டுமே குறித்து நின்றாலும் இங்குள்ள

வழிபாட்டு மரபு ஈழத்தின் ஆதி வழிபாட்டிற்கும் அதன் தொடர்ச்சிக்கும் இன்றும் சான்றாக நிற்பது போற்றத்தக்கது.[144]

வரலாற்றறிஞர் முதலியார் குல. சபாநாதன் அவர்களினால் எழுதப்பெற்று 1962 ஆம் ஆண்டு வெளிவந்த நூல், 'இலங்கையின் புராதன சைவாலயங்கள் - நயினை நாகேஸ்வரி' என்பது. இந்நூல் நாற்பது நான்கு (44) ஆண்டுகளின் பின் 2006 ஆம் ஆண்டு மீள்பதிப்பாகப் பிரசுரிக்கப்பட்டு நூலுருப் பெற்றுள்ளது. குல சபாநாதன் மேல்வருமாறு எழுதியுள்ளமை கவனிக்கத் தக்கது.

> மணிமேகலா தெய்வம் இத்தீவுகளைப் பாதுகாத்து வந்ததென்ற ஐதீகம் ஒன்றுண்டு. மணிமேகலா தெய்வமானது அரக்கர் வாதை பண்ணாதபடி இந்திரன் ஏவலாலே சில தீவுகளைப் பாதுகாத்துக் கொண்டிருந்தது. மணிமேகலை மணிபல்லவத்தைத் தரிசித்தாளென மணிமேகலையெனும் காப்பியம் கூறுகிறது. மணிபல்லவம் என்பது காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே 30 யோசனையளவிலுள்ள ஒரு சிறுதீவு என்பது மணிமேகலை எனும் நூலிற் கூறப்பட்டுள்ளது. மணிமேகலை மணிபல்லவத்தில் இறங்கி அமுதசுரபியெனும் அஷய பாத்திரத்தைப் பெற்றாள் என மேற்கூறிய நூல் தெரிவிக்கிறது. மகாவம்சத்தில் இவ்வரலாறு சிறிது வேறுபடக் கூறப்பட்டுள்ளது. நாகதீபத்தைப் பற்றிப் புத்த ஜாதகக் கதைகளில் அநேக குறிப்புகள் காணப்படுகின்றன. நாகதீவு அல்லது மணிபல்லவம் எதுவாயிருக்கலாம் என்பது பற்றி அபிப்பிராய பேதமுண்டு. யாழ்ப்பாணக் குடா நாடு முழுவதுமே மணிபல்லவம் அல்லது நாகதீவு என்றழைக்கப் பட்டதெனக் காலஞ்சென்ற முதலியார் இராசநாயகம் அவர்கள் கருதினார்கள். டாக்டர் போல் பீரிஸ் அவர்களும் இக்கொள்கையை ஆதரித்து எழுதியுள்ளார். வல்லிபுரக் கோயிற் பொற்சாசனத்தைப் பற்றி டாக்டர் எஸ். பரணவிதான அவர்கள் எழுதிய கட்டுரையிலும் இக்கொள்கையினை வலியுறுத்தியே எழுதியுள்ளார். இப்பொழுது நயினாதீவு எனப்படுவதே பண்டைக்காலத்தில் மணிபல்லவம் நாக தீவு, மணித்தீவு எனப்பல பெயர்களால் வழங்கப்பட்டதென்பர் பிறிதொரு சாரார். இக்கொள்கையினை ஆதரித்து திரு செல்லையா தில்லையம்பலம் அவர்கள் 'நற்றவம் மிக்க நயினாதீவு' எனும் கட்டுரையொன்று எழுதியுள்ளார். இங்ஙனம் ஆராய்ச்சியாளர் வாத மிடினும் பொதுஜனங்கள் புறக்கணித்து நயினாதீவையே புண்ணியஸ் தலமாகக் கொண்டு வழிபடுகின்றனர். பௌத்தர்களும் தங்கள் புத்தர் பெருமானின் பாதம் படிந்த புண்ணிய ஸ்தலமாகிய நாகதீவு இந்த நயினைதீவேயென்று கருதி அங்கே ஒரு விகாரை கட்டியுள்ளார்கள்.

> இப்பொழுது ஏறக்குறைய நாடோறும் யாத்திரிகர்கள் அநேகர் செல்கின்றனர். எதிர்காலத்தில் இந்த விகாரை பல்லாயிரக் கணக்கானோர் பக்தியுடன் சென்று வணங்கும் ஆலயமாக விளங்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. கடலோட்டுகாதை, வெடியரசன் நாடகம், வையா பாடல் முதலியவற்றை நோக்குமிடத்து நயினாதீவு யாத்திரைத் தலமாக விளங்கியிருத்தல் கூடுமெனக் கருத இடமுண்டு. நாக நயினார் அல்லது நாகதம்பிரான் கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்தலமாதலின் இது நாகநயினாதீவு எனப் பெயர் பெற்றதெனவுங் கொள்ளலாம்.[148]

இனி, பேராசிரியரும் கலாநிதியும் சிரேஷ்ட வரலாற்றுத்துறைப் பேரறிஞரும் என்னைக் கலாநிதிப்பட்ட ஆராய்ச்சியில் நெறிப்படுத்திய மேற்பார்வை யாளருமான பேராசான், பேரறிஞர் சி. பத்மநாதன், நாகராலும், திராவிட ராலும், இந்திரனாலும் மணிமேகலைத் தெய்வத்தினாலும் வளர்க்கப்பட்ட சைவசமயம் பற்றி மேல்வருமாறு கூறுகிறார்:

> பௌத்த சமயம் தர்மாசோகனுடைய ஆட்சியிலே கி.பி. 3 ஆம் நூற்றாண்டிலே பரப்பப்படுவதற்கு முன்னரே சைவசமயம் இலங்கை யிலே காணப்பட்டது. அநுராதபுர நகரத்தை அமைத்தபொழுது பாண்டுகாபயன் என்னும் அரசன் பலவழிபாட்டு நிலையங்களை அமைப்பித்தான். 'சிவிகசாலை', 'சொத்திசாலை' என்னும் நிலையங் களை அவன் தாபித்தான் என்று மகாவம்சம் கூறுகிறது. அவற்றுள், சிவிகசாலை என்பது சிவலிங்கத்தைத் தாபித்து வழிபடும் கோட்டம் என்று அதன் உரைநூலான 'வம்ஸத்தப்பகாஸினி' விளக்குகிறது.
>
> சொத்திசாலை என்பது பிராமணர்கள் வேதம் ஓதுவதற்கென்று அமைக் கப்பட்ட சாலை என்று அறிஞர் கருதுவர். மிகப் பழமையான பிராமிச் சாசனங்களிற் 'சிவ' என்னும் பெயர் கொண்ட பலரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. பௌத்த சமயம் அரசரின் ஆதரவோடு பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்த போதும் இலங்கையிலே சைவசமயமும் இந்தகலாசார மரபுகளும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொண் டிருந்தன. பௌத்தர்களுக்கும் சைவர்களுக்கும் இடையில் பொதுவாக நெருங்கிய உறவுகள் ஏற்பட்டிருந்தன.[149]

இனி, இவ்வாய்வாளர் எழுதி வெளியிட்ட 'வட இலங்கையின் சக்திபீடம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் (வரலாறும் தலப் பெருமையும் - 2004) என்னும் நூலில் இடம்பெறும் சில அம்சங்களையும் இவ்வாய்விலே இணைத்து நோக்குவாம். 'நாகவம்சம், நாகவணக்கமுறை, நாக அரசு' பற்றியமையும் கருத்துகள் வருமாறு:

> வடமொழி இலக்கியங்களில் நாகர்களைப் பற்றிய பல ஐதிகங்கள் காணப்படுகின்றன. இவர்கள் பாதாள வாசிகள் என்றும் நினைத்த மாத்திரத்தில் வேண்டிய உருவத்தினை எடுக்கும் திறன் படைத்தவர்களென்றும், நகரங்களில் வாழ்ந்த இவர்கள் செல்வந்தர்கள் என்றும், இவர்களின் கன்னிகைகள் அழகுமிக்கவர்கள் என்றும் ஐதீகங்கள் தோன்றின. இவர்களிற் சிலர் அரை மனித உருவமும், அரை நாக உருவமும் படைத்த தெய்விகத் தன்மை பொருந்தியவர்கள் என்ற கருத்துக்களும் மேற்கூறிய ஐதீகங்களிற் காணப்படுகின்றன. பாளி இலக்கியங்களும் இவர்களை அமானுஷ்யர்கள் என அழைக்கின்றன.[150]

> இந்தியாவில் வரலாற்றுக் காலத்தில் நிலைத்திருந்த நாகவம்சங்கள் பற்றிய குறிப்புகள் பல உள. தக்கணத்தில் சாதவாகனர் தமது நாக வம்சத் தொடர்பினை நிலைநாட்டத் தவறவில்லை. இவ்வாறே வட இந்தியாவில் குப்தப்பேரரசின் எழுச்சிக் காலத்தில் நிலவிய நாக அரசுகள் பற்றிய குறிப்புக்களும் அவதானிக்கத்தக்கவை. தமிழ் நாட்டிலுள்ள காவிரிப்பூம்பட்டினம் நாகர்களது தலைநகராக முன்னொருகால் விளங்கியதென்ற ஐதிகமும் வழக்கில் உண்டு. சங்கப் புலவர்களிற் சிலர் 'நாக' என்ற அடைமொழியைத் தாங்கியும் காணப்பட்டனர்.[151]

மணிமேகலையிற் செட்டியான சாதவன் திசைமாறி நாக நாட்டை அடைந்தும் நாகபாஷை தெரிந்ததால் அங்கிருந்து தப்பிவந்த செய்தி கூறப்படுகிறது. இதனால் 'நாகவம்சம்', 'நாக' என்ற அடைமொழியையுடைய பெயர்கள் 'நாகநா' போன்ற பதங்கள் ஆகியன ஓர் இனத்தின் அடைமொழி அல்ல எனவும் மாறாக நாகவணக்கத்தில் ஈடுபட்ட மக்களே இத்தகைய அடைமொழிகளால் அழைக்கப்பட்டனர் எனவும் கொள்வதே தருக்க ரீதியானதாகும். இத்தகைய வழிபாடு இந்தியா எங்கணும் வியாபித்திருந்தாலும் பண்டைய தமிழகத்தின் ஒரு பகுதியாகிய இன்றைய கேரளப் பிரதேசத்தில் தான் இது முக்கியமான ஓர் இடத்தினை வகிக்கிறது. இன்றைய கேரளம் பண்டைய சேரநாட்டின் ஒரு பகுதியாகும். கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் தொலமி என்ற அறிஞரின் கவனத்தை ஈர்க்கும் அளவுக்கு இங்கு நாகவழிபாடு முன்னிலை பெற்றிருந்தது போற் தெரிகிறது. அவர் குறிப்பிடும் 'அய்ஓய்' (AIOI) என்பது அக அல்லது பாம்பைக் குலமரபுச் சின்னமாகக் கொண்ட அவ்வகை வணக்கத்திலீடுபட்ட மக்களைக் குறித்தது என்பர். இன்னும் சிலர் இது 'ஆய்' வம்சத்தைக் குறிக்கும் என்பர். இன்றும் கேரளத்தில் நாயர்களின் வீட்டின் ஒவ்வோர் தென்மேற்கு மூலையிலும் பார்ம்புகள் சுகமாக வாழ்வதற்கான 'காவு' அல்லது சிறிய சோலை காணப்படுவதானது 'நாக' வழிபாட்டின்

தொன்மைக்கும் தொடர்ச்சிக்கும் ஒரு சிறப்பான சான்றாகும். இச்சந்தர்ப்பத்தில் பாக்கர் இப்பாம்பு வணக்கத்தில் ஈடுபட்ட நாயருக்கும், ஈழத்து நூல்களிற் குறிக்கப்படும் நாகருக்குமிடையில் உள்ள ஒற்றுமையை இனங்கண்டு இந்நாக வணக்கமும் அங்கிருந்தே ஈழத்தினை அடைந்தது என்ற கருத்தினை முன் வைத்தமை நினைவுகூரற்பாலது (Paker, H. 1984:15) பௌத்த ஜாதகக்கதை மூலமும், பாளி நூல்களிலும் 'நாகர்' பற்றிய ஐதீகங்கள் எழுத்துக்காட்டப்படு கின்றன. இக்கருத்தினை உறுதிப்படுத்துவதாகப்'' பண்டைய இந்திய, ஈழப் பௌத்த வழிபாட்டிடங்களிற் காணப்படும் நாக உருவங்கள் விளங்கு கின்றன.''[152]

''நாக'' என்ற பதத்திற்கும் 'நக்ன' எனற வடமொழிப் பதத்திற்குமிடையே உள்ள தொடர்பினை எடுத்துக்காட்டி இப்பதம் 'ஆடையின்றித் திரிவோரைக்' குறித்தது என்றும், ஆரம்பத்தில் உடல் முழுவதையும் மறைக்காது திரிந்த இம்மக்கட் கூட்டத்தினர் காலகதியில் அரையின் கீழ் உள்ள பகுதியை மட்டும் மறைத்தனர் என்றும் கூறப்படுகின்றது. இவ்வாறே கேரளத்திலுள்ள 'நாயர்' என்ற வகுப்பினர் 'நாகர்' வழிவந்தோர் என்றும் கருதப்படுகிறது (Subramaniam, K.R. 1985:12).[153]

> சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் குறிப்பிடப்படும் 'நாகநாடு' பற்றி அறிதல் பொருத்தமுடையதாகும். இவை குறிப்பிடும் நாகநாடு பாளி நூல்கள் கூறும் நாகதீபமே என்பதில் ஐயமில்லை. மணிமேகலையில் வரும் மணிபல்லவம் இந்நாகநாட்டின் ஒரு பகுதி யாக விளங்கியிருக்கலாம். சிலர் தற்கால நயினாதீவு தான் இந்த மணிபல்லவம் என அபிப்பிராயப்படுகின்றனர். ஒரு பரந்த பிரதேசத் தைக் குறித்த 'நாகதீபம்' என்ற சொல் ஈற்றில் இன்று 'நயினாதீவு' என்ற ஒரு சிறு தீவுக்கு வழங்கப்படுகின்றது எனக் கொள்வதே சால் புடையது. வரலாற்றுச் சான்றுகளும் தடயங்களும் நயினாதீவே 'நாகதீபம்' என்பதனை நிறுவுகின்றன.[154]

''நாகதீபம், நயினாதீவு நாகவழிபாட்டுக்குரிய இடமே. இவ்வழிபாடு கால கதியில் பின்வந்த வழிபாடுகளுடன் சங்கமித்தது. நாகர்கள் அமானுஷ்யர்கள் அல்லர் என்பதனையும் நாகவழிபாட்டிற் திளைத்தோரே இப்பெயர் கொண்டழைக்கப்பட்டனர் என்பதற்குமான இலக்கிய கல்வெட்டு, தொல்லியற் சான்றுகள் பல உள. அக்காலத்தில் ஒருவர் குடியிருந்த பெயர் பெரும்பாலும் அவரது சமய நம்பிக்கையைப் பிரதிபலிப்பதாக இருந்தது. இத்தகைய பெயர்களில் 'நாக' என்ற பெயர் ஈழத்தை ஆண்ட மன்னர்கள் பலர் குடியிருந்த பெயராகவும் மக்கள் பலர் குடியிருந்த பெயராகவும் காணப்படுவதை

நோக்கும்போது இவை அவர்கள் கடைப்பிடித்திருந்த வழிபாட்டையே சித்திரிக்கின்றன எனலாம்.

திரு வி. கனகசபைப்பிள்ளை நாகர்களின் வரலாற்றை ஓரளவு எடுத்துக் கூறியுள்ளார். சில குறிப்புகளை நோக்குவாம்.

''(நாகர்) ஒரு காலத்தில் இந்தியா, இலங்கை, பர்மா ஆகிய பரப்பின் பெரும் பகுதியையும் ஆண்டார்கள். பெரிதும் தெக்கணத்திலேயே இருந் திருக்கக்கூடிய ஒரு நாகர் தலைநகரம் இராமாயணத்தில் வருணிக்கப் பட்டுள்ளது.

*நஞ்சுறைவன் பற்கள் கொடு நாகரினமைந்தர்*
*பொன் செய் கொடுந்தாழிடும் புரிசைமதில் காக்க*
*எஞ்சுதலில் வீதிபல எங்கணும் நிறைந்து*
*மிஞ்சவரு போகவதி மேவு நகரத்தே*

*மின்செய் பொலங் கோயிலிடை வியன் தவசின் மீதே*
*அஞ்சவரு வாசுகி அமர்ந்தபதி காண் நீ*
*மஞ்சுதவழ் மாடமொடு கூடம்மிடைகாடு*
*வஞ்சவரு பைங்கழனி யாவும் விழி கொள்வாய்*[155]

(*ஆதாரம்:* Tree and serpent worship by fergusson, p. 60)

வரலாற்றில் நாகர்களை கி.மு. 6 ஆம் நூற்றாண்டிற் காண்கிறோம். அப் போது ஒரு நாக மரபினர் மகதத்தை ஆண்டனர். இம்மரபைச் சார்ந்த ஆறாம் மன்னனாகிய அஜாசத்துருவின் ஆட்சியிலேயே கௌதம புத்தர் தம் புதிய கோட்பாட்டை வகுத்துரைத்தார். அது நாகர்களின் பேராதரவைப் பெற்றது.

> இலங்கை வரலாற்று நூல்கள் யாவுமே நாகர்களைப் பற்றிய செய்தி களுடன் தொடங்குகின்றன. இவற்றிலிருந்து கி.மு. 6 ஆம் நூற் றாண்டின் தீவின் மேற்குக்கரையில் வல்லமை வாய்ந்த நாக அரசுகள் நிலவினவென்றும் அக்காரணத்தால் தீவு நாகத்தீவு என்று அழைக்கப் பட்டதென்றும் அறிகிறோம். 1800 ஆண்டுகளுக்கு முன்வரையப் பட்ட பண்டை அமராவதிச் சிற்பங்களிலும் அது போன்ற பிற இடங்களிலும் தலைக்குமேல் பின்புறமாக விரிந்த படங்களுடன் நாகங்கள் தீட்டப்பட்ட மனித உருவங்கள் உள்ளன. இவை நாகர் உருவங்களே.[156]

இனி, திரு வி. கனகசபைப்பிள்ளை எழுதிய நூலினை மொழிபெயர்த்த பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை இந்நூலின் 86 ஆம் பக்கத்தில் அடிக்குறிப்பாக எழுதியுள்ள பாகமும் பரிசீலனைக்குகந்ததொன்றாகும்.

நாகர்கள் தமிழராகவே தமிழகத்தில் வாழ்ந்தனர். எங்கும் வேறு இன மொழிக்குரியவரென்ற பேச்சும் ஏற்படவில்லை. தனியினமாகவே வாழ்ந்தனர். ஆகவே, அவர்கள் கடல் கொண்ட தமிழகத்திலோ, தமிழகம் சூழ்ந்த நிலத்திலோ இருந்த தமிழினப் பிரிவினர் என்றும், கடல்கோளின் பயனாகவோ வேறு காரணங்களாலோ எங்கும் பரந்தவர் என்றும் கருத இடமுண்டு''. இது இன்னும் விரிவாகவே ஆராயத்தக்கது.[157]

**நாகர் வரலாறு**

புத்த(ர்) பிரான் நாகருக்காக இலங்கைக்கு இரண்டாவது முறை வருகை தந்தபோது, நாகதீபத்திலுள்ள ஜம்புகோளப்பட்டினத்தில் நாகர்களைத் தன் போதனைகளைத் தழுவச் செய்தார் என மகிந்தர் தேவநம்பியதீசனுக்கு எடுத்துரைத்தார். இப்பழம் பெயரைக் கொண்டே யாழ். குடாநாட்டில் வசித்த ஆதிநாகர் குடிகள் பௌத்த மதத்தைச் சமயப்பொறையுடன் தழுவினர் என்பதனையே நாம் அறிய முடிகிறது. அதேபோல் இங்கு வாழ்ந்த பழந்தமிழ்க் குடிமக்களும் சமயப் பொறையும், இன எதிர்ப்புத் தன்மையுமுடையவர்களாக இருந்தார்கள் என்பதினை எடுத்துரைப்பதற்கும் இப்பழம் பெயர் ஆதாரமாகிறது. எடுத்துக்காட்டாகச் சங்கமித்தையும், பௌத்த சங்கத்தினரும் வெள்ளரச மரத்துடன் ஜம்புகோளத் துறையில் இறங்கியே பாதயாத்திரையாக அதனை அனுராதபுரத்திற்கு எடுத்துச் சென்றனர். மேலும் இந்நிகழ்ச் சியை நினைவூட்டுமுகமாக அங்கு ஒரு விகாரையும் எடுப்பித்தனர் (மகாவம்சம், xx: 25). இத்தகைய சந்தர்ப்பங்களில் ஆதி நாகர்களோ அல்லது பழந்தமிழ்க் குடிகளோ பௌத்தமதத்தவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இவர்கள் காட்டிய ஆதரவும் வரவேற்புமே சுமுகமான முறையிற் பௌத்தமதத்தைச் சிங்களமக்கள் காலப் போக்கில் தழுவவழி வகுத்தது எனலாம்.[158]

வலாஹச ஜாதகத்தை மொழிபெயர்த்த டாக்டர் ரௌஸ் (Dr. Rouse) இலங்கையுடன் இணையாத தனித் தீவாகவே இதனைக் கருதுகிறார்.[159] மகாவம்சத்தை மொழிபெயர்த்த (Turnour) என்பவரும் இக்கருத் தினையே தெரிவிப்பர். காலப்போக்கில் இந்நிலை மாறி நகர்ப் பகுதிகள், எல்லைகள் விரிவாக்கம் பெறுகின்றன. அதனால் வரலாற்றுக் காலத்தில் நாகதீபம் என்ற பிரிவு இலங்கையின் வடமாகாணத்தைக் குறித்ததாக ஹெய்கர் கருதுவர்.[160]

'செலிக்மன்' கிறித்து சகாப்தத்தின் பல நூற்றாண்டுகளுக்குப் பின் நாகதீபம் என்பது மஹாவில்லாச் சிலவிற்கு வடக்கேயுள்ள பகுதியைக் குறித்ததென்பர்.[161]

செ. குணசிங்கம், கோகர்ணக் கடற்கரையில் மகாநாகன் (கி.பி. 556-559) செய்த நாகவழிபாட்டை ஆதாரமாகக் கொண்டு (சூளவம்சம்: 41:75-87) நாகவழிபாட்டையுடைய நாகர் குடிகள் ஆரம்பகாலத்தில் திருகோணமலைப் பகுதியில் வாழ்ந்திருந்தார்கள் என்பதினை வற்புறுத்துவதோடு, நாக எனப்பட்டது இலங்கையின் வடபகுதி, (கிழக்கு, மேற்குப் பகுதி உட்பட) முழுவதையும் உள்ளடக்கியிருந்ததென்றும் அதன் தென்னெல்லையை நிச்சயித்துக்கொள்ளல் தற்போதைய நிலையில் முடியாததொன்று எனவும் கூறுவர் (கலாநிதி செ. குணசிங்கம், கோணேஸ்வரம், 1973).

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, சுவாமி ஞானப்பிரகாசர், முதலியார் இராசநாயகம் முதலானோர் நாகதீபத்தின் பழைய இராசதானி சிங்கைநகரென அழைக்கப்பட்ட வல்லிபுரப் பகுதி என்பர். சோழராட்சிக்குப் பின் நாகதீபம் (யாழ்.குடா) சேதுபதி மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டதாகத் தெரிகிறது. குலோத்துங்கன் (கி.ப. 1133-1150) காலத்தவரான புகழேந்திப் புலவர் நாகதீபத்தையும் இராமேஸ்வரத்தையும் ஆண்ட பாண்டிய அரசன் சிங்கை யாரிய சேகரனைப் பற்றிப் புசழ்ந்து பாடியுள்ளார்.[162]

''முசலிந்த என்ற பாம்பினால் புத்தர் அடிபணிய வைத்த செய்தி பௌத்த தர்ம நூல்களில் உண்டு.''[163]

**இன்றைய யதார்த்த நிலைமைகள்**

இன்று பூர்வீக வரலாறுகள் பல்வேறு மாறுதல்களாலும், நடைமுறை ஆக்கிர மிப்பாலும், காலதேச வர்த்தமானங்களுக்கேற்பப் பெரிதும் மாறுதலடைந் ததும், மருவியும, சிதைந்தும், அழிந்தும் உள்ள நிலைமையே மிஞ்சியுள்ளது - எஞ்சியுள்ளது. 'வரலாறு திரும்பவும் தனது நிலையை நிலைநிறுத்தியும் நிலைநாட்டியுமே தீரும்' என்ற கொள்கைக்கிணங்க அது தனது யதார்த்தத்தை மேலும் உறுதி செய்யும் போக்கே இன்று காணப்படுகிறது. இக்கருத்தில் வேற்றுமை நிலவ முடியாது. தென்னிந்தியக் களநிலைமையும், இந்தியத் துணைக் கண்டத்தின் உலக அரசியல் கண்ணோட்டங்களும் தெற்கு, தெற்கிழக்காசிய நாடுகள் குறித்த உலகத் தாபனத்தின் கண்ணோட்டமும் குறிப்பாக இலங்கை குறித்த நிலைப்பாடுகளும் சற்று வளர்ச்சியடைந் திருப்பதையே நிதானித்து மதிப்பிட முடிகிறது. வரலாற்றுக்கு முந்திய நிலையில் இந்திய உபகண்டத்துடன் இணைந்தும் பிணைந்தும் இருந்த தடயங்களும் சான்றுகளும் இன்று மறுபடியும் முதன்மை பெறுவதனை உய்த்துணர முடிகிறது. இராமர் அணை குறித்த செய்திகளும் உலக நோக்கில் இலங்கையின் வடபிரதேசத்திற்கும் இந்திய நாட்டுக்குமுள்ள உறவுகளின்

நெருக்கமும் மீண்டும் பண்பாட்டு வரலாறு துலக்கம் பெற்று ஜீவனுள்ளதாக மாறும் சூழல் ஒன்று உருவாகி வருவதற்கான 'உலகக்கள நிலைமை' ஒன்றுள்ளது. நிலைபேறுடைய உண்மைகள் எந்த அழிவுக்குள்ளும் நிலை பேறடையும்' என்ற பேருண்மைக்கு இவ்வாய்வுக் கட்டுரைப் பொருளும் அடங்கும். எனவே, மக்கள் மயப்படும்படியான சமயம், சமூகம், பண்பாடு, அரசியல், அரசு என்று வரும்பொழுதும் தொன்மங்களதும், புராதனச் சான்று களதும் நிலவேறுகள் உறுதிப்படுத்தப்படும் என்பதே பேருண்மை. 'பழந்தமிழ் நாடே மணிபல்லவம்' என்பர் தமிழவேள் இ. க. கந்தசாமி'' [164]

முடிவாக, பிரபஞ்சத்தின் வலுவான, நெறிமுறையான சுழற்சியென்பது ஒற்றுண்டல்லவா? அப்பிரபஞ்ச இயக்கத்திற்குக் கட்டுப்பட்டதொரு பேருண்மையே முடிவில் நிலைபேறடையும் அல்லவா? ஆகவே, சரியான - முடிவான ஆய்வுக்குரிய (ஆய்வுக் கருத்துகள் முடிவுகளல்ல. அவை முன்மொழிவுகளே). காலத்திற்குரிய தீர்க்கதரிசனச் சிந்தனை விரிவையே நாமும் நாடி நிற்கிறோம்.

**அடிக்குறிப்புகள்**

1. அரசுமணி, க., (1991), *காவியச் செல்வி மணிமேகலை*, வள்ளி புத்தகநிலையம், இராயப்பேட்டை, சென்னை, ப. 7.
2. மேலது, ப. 7.
3. மேலது, ப. 55.
4. மேலது, ப. 55.
5. மேலது, ப. 55.
6. மேலது, ப. 55.
7. மேலது, பக். 82-83.
8. மேலது, ப. 86.
9. மேலது, ப. 87.
10. மேலது, ப. 90.
11. மேலது, ப. 117.
12. மேலது, ப. 121.
13. மேலது, ப. 124.
14. மேலது, ப. 125.
15. மேலது, ப. 153.
16. *பத்மம்*, (2004). Prof. S. Pathmanathan Feliciation Volume, Editors Prof. V. K. Kanagaratnam, Dr. Rajagopal, Dr. P. Pushparatnam, Mr. Maheswaran, தென் -

தென்கிழக்காசிய நாடுகளில் கணபதி வழிபாட்டு மரபும் தொன்மையும், Bavani pathip Paham, Kandy, p.5.

17. மேலதிக விவரங்களுக்குப் பார்க்க நாராயணவேலுப்பிள்ளை, எம். வித்துவான்: (1999), உரைநடைத் தமிழில் ஐம்பெருங்காப்பியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி கதைச் சுருக்கமும் எளிய தமிழ் உரையும், மலர் பிரிண்டர்ஸ், சென்னை, பக். 71-74.

18. *லயன்ஸ் சரம்*, (2000), புராதன இலங்கையில் தமிழ்ச் சிங்கள உறவுகள், மொழி பெயர்ப்பு றம்சியா பாறூக், நுகேகொடை, 'சவி' வெளியீட்டகம், எஸ். ரஞ்சகுமார், பேஸ் செட்டர்ஸ், 113, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு 13.

19. *மணிமேகலை*, (1965), ஊரலர் உரைத்த கதை, வரி 1, புலியூர்க்கேசிகன் தெளிவுரை யுடன், பாரி நிலையம், சென்னை.

20. மேலது, சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை, 212.

21. மேலது, துயிலெழுப்பிய காதை, வரி. 1.

22. மேலது, வரி. 22.

23. மேலது, மணிபல்லவத்துத் துயருற்ற காதை, வரி. 54.

24. மேலது, பாத்திரம் பெற்ற காதை, வரி. 1.

25. மேலது, அறவணர்த் தொழுத காதை, வரி. 7.

26. மேலது, பாத்திரமரபு கூறிய கதை, வரி. 81.

27. மேலது, வரி. 101.

28. மேலது, பாத்திரங்கொண்டு பிச்சைபுக் காதை வரி. 16.

29. மேலது, வரி. 120.

30. மேலது, கந்திற்பாவை வருவதுரைத்த காதை,வரி. 14-16.

31. மேலது, ஆபுத்திரனோடு மணிபல்லவமடைந்த காதை, வரி. 25.

32. மேலது, வரி. 120.

33. மேலது, வரி. 178.

34. மேலது, கச்சிமாநகர் புக்க காதை, வரி. 180.

35. மேலது, வரி. 212-214.

36. மேலது, வரி. 207-208.

37. *ஏகநாயகவல்லி சிவராசசிங்கம்*, (2003), அத்தியாயம் 6, 'நாகரும் இலங்கையின் ஆதிக்குடிகளும் நாகர் வரலாறு' ஈழவரலாற்றுப்பதிவுகள், Arrow web Publication, Tronto, canada, p. 58.

38. மேலது, ப. 59.

39. மேலது, பக். 59-60.

40. மேலது, ப. 61.

41. மேலது, ப. 62.

42. மேலது, ப. 64.

43. மேலது, ப. 64.

44. மேலது, ப. 65.
45. மேலது, ப. 64.
46. மேலது, ப. 66.
47. மேலது, ப. 66.
48. மேலது, ப. 68.
49. மேலது, ப. 68.
50. மேலது, ப. 71.
51. மேலது, ப. 104.
52. மேலது, ப. 104.
53. மேலது, ப. 104.
54. மேலது, ப. 105.
55. மேலது, ப. 105.
56. மேலது, ப. 105.
57. மேலது, ப. 106.
58. மேலது, ப. 106.
59. மேலது, ப. 106.
60. Ponnampalam Ragapathy, *Early Settlement of Jaffna*, p. 07.
61. சிவஞானசுந்தரம், இ.க., (2005), *தமிழ் இலக்கிய இலக்கணப்பேழை*, மாணவர் மறுதோன்றி அச்சகம், சென்னை, ப. 72.
62. மயில்வாகனனார், க., (2007), *காரைநகர் ஆண்டிகேணி ஐயனார் புராணம் - பாட்டும் உரையும்*, பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம், ப. 118.
63. புஷ்பரட்ணம், ப., (2003), *தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு*, பவானி பதிப்பகம், புத்தூர், கிழக்கு, யாழ்ப்பாணம், ப. 134.
64. மேலது, ப. 161.
65. மேலது, ப. 162.
66. மேலது, ப. 168.
67. மேலது, ப. 169.
68. மேலது, ப. 175.
69. மேலது, ப. 175.
70. மேலது, ப. 176.
71. மேலது, ப. 176.
72. மேலது, ப. 176.
73. மேலது, ப. 177.
74. மேலது, ப. 185.
75. மேலது, ப. 185.

76. தனபாக்கியம், ஜி., (1988), *இலங்கையில் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாசாரமும்*, சென்.ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு, (எ + டு) மகாபாரதம், Vi, 6, 55-56).
77. மேலது, ப. 13.
78. மேலது, ப. 27.
79. மேலது, ப. 29.
80. மேலது, ப. 30.
81. மேலது, ப. 31.
82. மேலது, ப. 38.
83. மேலது, ப. 79.
84. மேலது, ப. 108.
85. மேலது, ப. 200.
86. மேலது, ப. 200.
87. மேலது, ப. 200.
88. மேலது, ப. 205.
89. மேலது, ப. 249.
90. மேலது, ப. 250.
91. *பல்லவராசசேகரம்*, (2007), பல்லவராச்சியம் (நிகழ்வுகளின் பதிவுகள், கி.பி. 1948 ஆம் ஆண்டு வரை), ரெயின்போ மினிவாய் (பிரின் ) லிமிட், திருகோணமலை.
92. மேலது, ப. 29.
93. மேலது, ப. 30.
94. மேலது, ப. 32.
95. மேலது, ப. 32.
96. மேலது, ப. 51.
97. மேலது, ப. 54.
98. மேலது, ப. 55.
99. நவநாயக மூர்த்தி, *வீரகேசரி*, (18.02.1996).
100. *பல்லவராசசேகரன்*, (2007), மு.கு.நூ. ப. 67.
101. மேலது, ப. 73.
102. மேலது, ப. 77.
103. மேலது, ப. 108.
104. மேலது, ப. 109.
105. மேலது, ப. 110.
106. மேலது, ப. 110.
107. மேலது, ப. 113.

108. மேலது, ப. 113.
109. மேலது, ப. 114.
110. மேலது, ப. 115.
111. மேலது, ப. 116.
112. மேலது, ப. 117.
113. மேலது, ப. 119.
114. மேலது, ப. 121.
115. மேலது, ப. 122.
116. மேலது, ப. 123.
117. மேலது, ப. 124.
118. மேலது, ப. 124.
119. மேலது, ப. 128.
120. மேலது, ப. 131.
121. மேலது, ப. 133.
122. மேலது, ப. 133.
123. மேலது, ப. 144.
124. மேலது, ப. 199. *வீரகேசரி*, 12.02.1995.
125. மேலது, ப. 232.
126. கணபதிப்பிள்ளை, மு., தென்புலோலியூர், (1961), *தமிழன் எங்கே, தமிழன் யார்?*, ஈழமணி நூற்பதிப்பகம், கொழும்பு, ப. 42.
127. மேலது, ப. 62.
128. மேலது, ப. 63.
129. மேலது, ப. 64.
130. மேலது, ப. 65.
131. மேலது, ப. 64.
132. மேலது, ப. 65.
133. *மணிபல்லவம்*, (1990), ''தீவகம் ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்'', பேராசிரியர் வி. சிவசாமி, நயினாதீவு மணிபல்லவ கலாமன்றத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவிழாவை யொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர், ஸ்ரீலங்கா அச்சகம், யாழ்ப்பாணம், ப. 17.
134. மேலது, ப. 17.
135. மேலது, ப. 17.
136. மேலது, ப. 18.
137. மேலது, ப. 24 (எ + டு) ''நயினாதீவு இடப்பெயர் ஆய்வு'', கலாநிதி இ. பால சுந்தரம்.
138. மேலது, ப. 24.
139. மேலது, ப. 25. (எ + டு) *கலைக்களஞ்சியம்*, தொகுதி 8, ப. 78. மேலது, ப.

140. மேலது, ப. 25. (எ + டு) சரவணபவன். ஐ., பிரபல சோதிடர், 1972, ப. 21.
141. மேலது, ப. 27. (எ + டு) சரவணபவன், ஐ, (1972:25).
142. மேலது, ப. 27. (எ + டு) சண்முகநாதபிள்ளை, நா.க, (1981), *புராதன நயினை நாகபூஷணி ஆலய வரலாறும் அருட்பாமாலையும்*, பூபாலசிங்கம் வெளியீடு, யாழ்ப்பாணம்.
143. மேலது, பக். 46-47.
144. மேலது, ப. 48.
145. 'Glimses of Hindu Heritage', (2003), 2nd world Hindu conference souvenir Editors: Patrick Harrigan (Chief Editor), Prof. S. Pathmanatjan, Prof. P. Gopalakrishnan., Ministry o Hindu Religious affairs, Uni Arts Ltd., Colombo, (Quotd Article Title- Pre Buddhist Hinduism in Sri Lanka Archeaologial Perspective by Prof. s.K. Sitrampalam. Professor of History, Dean of Graduate studies, University of Jaffna, Thirunelvely, p. 174.)
146. Opp. cit., pp. 179-180.
147. Opp. cit., p. 180.
148. சபாநாதன், குல., (2006), *இலங்கையின் புராதன சைவாலயங்கள் நயினை நாகேஸ்வரி*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, பக். 20-21.
149. பத்மநாதன், சி., (2005), *இலங்கையின் இந்து சமயம்*, அகில இலங்கை இந்துமாமன்ற வெளியீடு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு. பக். XIII - XIV.
150. கனகசபாபதி நாகேஸ்வரன், (2004), *வட இலங்கையின் சக்திபீடம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் - வரலாறும் தலப்பெருமையும்*, லஷ்மி அச்சகம், கொழும்பு, ப. 17.
151. மேலது, ப. 17.
152. மேலது, ப. 18.
153. மேலது, ப. 18.
154. மேலது, ப. 19.
155. மேலது, ப. 23 (எ + டு) Ramayana, IV,205, India Antiquary, Vol. p. 05.
156. மேலது, ப. 24 (எ + டு) Archaeological survey of southern India, Vol. I, Buddhist stupas of Amaravati and Jaggayapeta.
157. மேலது, ப. 25.
158. கனகசபாபதி நாகேஸ்வரன், (2004), மு.கு. நூல்.
159. (எ + டு) Rouse, Dr. Jatake, No. II, pp. 90 and Index pp. 312.
160. (எ + டு) Geiger, W., *Culture in Mediaval time*, ed by Heinz Bechert, 1960.
161. (எ + டு) Seligman, Veddha, p. 26.
162. (எ + டு) *தமிழ் நாகர் சரிதை*, பாட்டு 16.
163. மேலது, ப. 36

164. கந்தசாமி க.இ.க. *தமிழவேள்*, (05.04.2008). முதுபெருந்தமிழ்த் தொண்டனும் ஆய்வாளனுமாக விளங்கும் 'தமிழவேள்' ஐயா இக்கட்டுரையாசிரியருக்குச் 'சிலப்பதி காரம் - நாடகநூல்' என ஆய்வு செய்து தமக்குக் கட்டுரை தருமாறு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கருத்து. 'பழந்தமிழ் நாடு' தானே துலங்கும்.'தமிரின் பூர்வீகம் ஈழமே' என்பது நிறுவி ஏற்கப்படுமிடத்து 'மணிபல்லவம்' என்பது ஈழத்தோடும், வடபகுதி யோடும், நயினாதீவுடனும் தொடர்புடையதென்பது நிறுவப்படும் என்பது இவ்வாய்வாளர் கருத்து. 'தமிழவேள்' ஐயாவின் நைட்டிகப் பிரமச்சரியத் தமிழ்த் தொண்டுகளுக்கும் புலமைக்கும் ஆய்வுப் பொருள்களுக்கும் சிரந்தாழ்ந்த - பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னையும் ஒரு பொருட்டாக எண்ணி 'சிலப்பதிகாரம் - பன்முகநோக்கு' என்ற கட்டுரையை வடிவமைத்து எழுதி உபகரிக்குமாறு என்றும் எப்பொழுதும் பெருமனதுடனும் பேராவலுடனும் முழுமனவிருப்பத்துடனும் தமிழவேள் க.இ.க. கந்தசாமி ஐயாவுக்குத் தொலைபேசி மூலம் சிபார்சு செய்த பேராசிரியரும் நல்வழிகாட்டியுமாய்ப் பிறர்க்கும், தமிழுக்கும், சைவத்திற்கும், ஆய்வுகளுக்கும், எப்பொழுதும் பேருதவிகளைப் புரியும் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையின் முன்னாட் தலைவருமான பேராசிரியர், கலாகீர்த்தி சி. தில்லைநாதன் அவர்களைப் பணிந்து வணங்கி எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்முதுபெரும் சிந்தனையாளர்கள் தமிழுக்கும் ஆய்வுக்கும் கிடைத்த முதுகெலும்பு.

# 2

# மணிபல்லவம் என்பது நயினாதீவே

### மணிபல்லவம் என்பதும் நாகவழிபாட்டுத் தொன்மையுடையதும் இன்றைய நயினாதீவு என்பதற்கான வரலாற்றுச் சான்றுகளும் மூலாதாரங்களும்

**தமிழ் இலக்கியச் சான்றாதாரங்கள்**

பூர்வீகச் சரிதங்களை, தொன்மைச் சான்றுகள் நிறுவுவன. கடல்சூழ் உலகிலே - பிரபஞ்சத்திலே - கண்டங்களும், தீவுகளும், திட்டுக்களும், உபகண்டங் களும் சமுத்திரங்களும் பெருமலைகளும் சமவெளிகளும் ஆறுகளும் நன்னீர்ச் சுனைகளும் துறைமுகங்களும் கல்வெட்டுக்களும் சாசனங்களும் பொறிப்புக்களும் நாணயங்களும் பூர்வீக மண்டையோடுகளும் புதைகுழி களும் தாழி அடக்கம் முதலான கிரியைகளும் உள்ளன. வரலாறுகளும் பொய்ப்பதில்லை. இதனை ஆய்வுகளும், கண்டுபிடிப்புகளும் ஐதீகங்களும் வழிபாட்டு மரபுகளும் சிலைகளும் விக்கிரகங்களும் தொன்மைமிக்க ஏட்டுச் சுவடிகளும் மெய்ப்பித்து நிற்கின்றன. செவிவழிக் கதைகளும் நம்பிக்கை களும் அரசபாரம்பரியங்களும் சில உண்மைச் செய்திகளை உணர்த்தி நிற்கின்றன. வடஇலங்கை தீவுகள், நாகதீவு, மணிபல்லவம், நயினாதீவு, வணிக கணங்கள், கப்பல் கட்டுதல், வாணிபம், தென்னிந்தியா, சீனத் தொடர்புகள், கிரேக்க. யவனத் தொடர்புகள் என்பன சிலப்பதிகாரம், மணி மேகலை, பட்டினப்பாலை, பரிபாடல் என்னும் நூல்களால் தெரிய வருகின்றன.

வடஇலங்கையின் சப்த தீவுகளுடன் தனித்துவமும், மகத்துவமும் மகிமையும் மகோன்னதமும் மிக்கது மணிபல்லவம் எனப்படுது நயினா தீவாகும். நாற்புறமும் சமுத்திரத்தினாற் சூழப்பட்டு தெய்வீக நலஞ் சிறக்கப் பல்சமய வழிபாட்டுத் தலங்களைக் கொண்டியங்கும் சர்வமத சந்நிதி நயினா தீவாகும். பலராலும் பழவடியாராலும் போற்றி ஏற்றி - விரும்பப்படும் பீடமாக, இடமாக, தெய்வத் திருத்தலமாகவே, விளங்குவது மணிபல்லவ மெனும் நயினை யம்பதி. தக்கார்; தாழ்விலாச் செல்வர் வாழும் ஊர் நயினாதீவாகும். ஆன்மிகத்தின் பிறப்பிடம் நயினையென்பது மெய்ப்பிக்கத் தக்கதாகும். புனித புண்ணியபூமி நயினாதீவு.

கண்டத் திட்டுகளின் தோற்றம் பூர்வீகமானது. பூகோள ரீதியில் சிறு தீவுகளின் தோற்றம் குறித்த செய்திகள் பரத கண்டம் எனும் தேசத்தின் தொன்மை வரலாற்றோடு இணைந்தது. கடற்கோள்களின் தாக்கத்தால் நிலப்பிளவுகள் - நிலப்பிரிவுகள் இடம்பெற்றிருக்கலாம் என்பது இன்றைய ஊகம். காலத்துக்குக் காலம் கடலின் வேகம் - வீச்சு - எழுச்சி பல்வேறு நிலமாறுதல்களை உண்ணடாக்கியே இருக்கும். காலநிலையிலேற்படும் தாக்கம் நில அமைப்பின் தன்மையையே திருத்தியும் பதுக்கியுமிருக்கும். இயற்கை மாற்றம் என்பது இயல்பானது; நடப்பது; நிகழ்வது. இக்கருத்தை வரலாற்றுத் தடயங்களும் சான்றுகளும் மூலங்களும் நிரூபித்து நிற்கின்றன.

வாணிபம் - வாணிகம் - வண்மை செய்தல் (வள்ளண்மை, வளப்ப மெனப்படும்). பிறர்க்குந் தமக்கும் வளப்பம் உண்டாவதற்கு ஏதுவான ஒரு நன்முயற்சியே வணிகமாவது. நிலவழி வாணிபம், கடல்வழி வாணிகம் என இருவகையுண்டு. இவ்வறுள் இலக்கியச் சான்றுகளால், துறைமுகங்களால், பண்டைமாற்றுக்களாற் குறிப்பிடப்படுவது - சிறப்புடையது கடல் வணிக மாகும். ஈழம், கடாரம், சீனம், சோளகம், யவனம் முதலிய நாடுகளோடு நம்மவர்கள் முன்பு வாணிபஞ் செய்து வந்தார்களென்பது இலக்கியங் களிலிருந்து தெரிகிறது. தமிழ்மக்கள் ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டு களுக்குமுன்னமேயே கடல் வாணிபத்திற் சிறந்திருந்தனர். முன்னிருந்த மக்கள் கடல்வழியாகப் பிறநாட்டுக்குச் சென்று வந்த வழக்கம் 'முந்நீர் வழக்கம்' என்று குறிக்கப்படுகிறது. தமிழிலக்கியப் பெருநூல்களிலே பொறுக்க முடியாத பெரிய துன்ப நிகழ்ச்சிகளுக்கு உவமம் வருகின்ற இடங்களில் ஆரிருள் மழை நாளில் நடுக்கடலிற் கலங்கவிழ்ந்து வருந்தும் மக்களின் நிலைமையே பெரும்பாலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. கலங்கவிழ்ந்து தவிப்போர், மணிமேகலையிற் ''கலங்கவிழ்ந்த மாக்கள்'' என்றும், ''உடைகல மாக்கள்'' என்றும் கூறப்படுவர். சிலப்பதிகாரத்திலே,

*இடையிருள் யாமத்து எறிதிரைப்*
*பெருங்கடல் உடை கலப்பட்ட எங்கோன்*

என்று இத்துன்பநிலை அவ்வுணர்வு தோன்ற விளக்கப்பட்டிருக்கிறது. பல வகையான கப்பல்கள் அக்காலத்துத் தமிழகத்திற் செயல்பட்டன. 'கலம் செய் கம்மியர்' என்றே தொழிலாளருள் ஒருவகையினர் தமிழகத்தில் இருந்தனர். புணை, பரிசில், கட்டுமரம், தோணி, திமில், ஓடம், படகு, அம்பி, வங்கம், கப்பல் முதலிய பல பிரிவான கலங்கள் அப்போது செய்யப்பட்டன. ஒவ்வொரு பெரிய கப்பலும் ஒரு மதில் சூழ்ந்த மாளிகை போலத் தோன்றுமாம்.

*பிணக்கு கதிர்க் கழனி நாப்பண் ஏமுற்ற*
*உணங்கு கலன் ஆழியன் தோன்றும்*
*ஓர் எயில் மன்னன் (புறநானூறு)*

பழந்தமிழர் உள்நாட்டு வாணிபத்தில் பண்டங்கள் பொதிந்த மூட்டைகளைச் சுமப்பதற்கு எருது, கழுதை முதலிய விலங்குகளையும் பயன்படுத்திக் கொள்வர் என்ற செய்தி பெரும்பாணாற்றுப்படையில் 'அணர்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்' என்பதால் அறியப்படும்.

பழந்தமிழர் வணிகம் நன்றாக நடைபெறுவதற்கு நல்ல முதலும், நாணமும், நற்குணமும் இன்றியமையாதனவென்றும் இவற்றைச் செல்வ தாகவும் அறிந்திருந்தனர். பட்டினப்பாலை வாணிபர் நாட்டின் பொது நலன்களிலும் கருத்தும் முயற்சியம் பற்றும் உடையவர்களாகத் திகழ்ந்தமை நினைவு கூர்தற்குரியது. உலகியலறிவோடு பேசிப் பேசிப் பழகினவர் களாதலால் வணிகரிற் பலர் பிறரை வயமாக்கத்தக்க பேச்சுத்திறம் உடைய வர்களாக இருந்திருக்கக்கூடும். இவர்களிற் பலர் புலவர்களாகவும் விளங்கினர். சீத்தலைச் சாத்தனார், இளவேட்டனார், பொன். வணிகனார், இளந்தேவன் என்னும் சிறந்த சங்கப் புலவர்கள் வணிக முயற்சியுள்ளவர்களேயாவர். இவர்கள் முறையே கூலவாணிகரும், அறுவை வாணிகரும், பொன் வாணிகரும், பண்ட வாணிகருமாவர். இவர்கள் தாமுந் திருத்தமான உயர்ந்த தமிழ்க் கல்வி பயின்று பிறர்க்கும் அதனால் பரவச் செய்து வந்த பெருந் தகையோருமாவர்.

## தமிழ் - பௌத்தக் காப்பியமான மணிமேகலையில் இடம்பெறும் மணிபல்லவம் தொடர்பான செய்திகளும், சம்புத்தீவு, நாகதீவு, புத்த பீடிகை எனும் கொள்கைகளும்

தீவுப்பகுதிகள் இன்று 'தீவகம்' என்று அழைக்கப்படுகிறது. 'சம்புத்தீவு' என்று நயினாதீவுக்குப் பெயருண்டு. சம்புத்தீவு, தீவக சாந்தி என்னுந் தொடர்கள் மணிமேகலையிலே இடமபெற்றுள்ளன. அரசு மணி என்பார் கூற்று வருமாறு:

''சம்புத்தீவின் காவல் தெய்வம். இந்நகரிலிருந்து இந்திரனுக்கு விழா எடுத்தது. அதனால் தீவக சாந்தி என்றும் பெயர்.''

பண்டைக் காலத்தில் நாவல் மரங்கள் நிறைந்த தீவு போல் இருந்ததால் நாவலந்தீவு என்று பெயர் பெற்றது. 'சம்பு' என்றால் நாவல் மரம். (சம்பு குண்டம் - நாவற்குழி) அதனால் நாவற்தீவைச் சம்புத்தீவு என்றும் கூறுவர். 'சம்பா தீவனம்' என்னும் பெயரும் மணிமேகலையிலே வருவது 'சம்பு' நாவல் சம்பாதிவனம் 'நாவல் மரங்கள் நிறைந்த வனம்' ஆகலாம். சம்பாதி

வனம் - சடாயுவின் தம்பி சம்பாதி. சூரியனின் அருகே பறந்து சென்றபோது வெப்பத்தால் சிறகுகள் தீப்பற்றியெரிய இங்கே வீழ்ந்தான். சடாயுவும் சம்பாதியும் இறைவனைப் பூசித்துப் பேறுபெற்ற இடம்தான் இவ்வனம். இது அச்சந்தரக் கூடியதாகும்.

'மணிபல்லவம்' பற்றிய செய்திகள் மணிமேகலையில் மேல்வரு மாறுள்ளன. 'மணிபல்லவந்தீவைக் கதிரவன் தன் பொன்னிறக் கதிர்களால் ஒளிமயமாக்கத் தொடங்கினான். தீவு- என்பது நான்கு பக்கங்களிலும் கடலாற் சூழப்பட்டுள்ள நிலப்பகுதி. நயினாதீவா? என்பது 'தீவு' என்று புரிகிறது. இத்தீவு நயினாதீவா? காரைதீவா? யாழ்ப்பாணம் குடாநாடு தானா? நாகர் ஆட்சி செய்த வடபகுதிப் பிரதேசமா? என்னும் ஐயங்கள் பிரதானமாகின்றன. ஆயினும், இன்றும் 'நயினாதீவு' தீவு என்னும் சொல் லுடன் இணைந்து நிற்பதும், நாற்புறமும் கடலாற் சூழப்பட்டுள்ளதும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் பதினொராந் தீ விழாவின் போது, சடாயு, சம்பாதி (கருடப்பறவை) வட்டமிட்டு வணங்குவதும் என நோக்கும்போது மணிபல்லவம், மணிபல்லவத் தீவு என்ற பதில்கள் நயினா தீவையே குறித்துள்ளன என்பது தெளிவு. அத்துடன் ஊராத்தோட்டைத் துறைமுகம் பராக்கிரமபாகுவின் கல்வெட்டு. பாம்பு சுற்றிய கல். கருடன் கல் என்பவையும் சான்றுகளாகின்றன. மணி பல்லவத்திற் கடல் சூழ்ந்திருப் பதும், கடலலைகள் விசையாக வீசுவதும் கருதினால் இப்பின்னணி நயினா தீவின் இன்றைய மணிபல்லவத்தின் இயற்கைச் சூழலே என்பதனை உய்த் தறிய அதிக நேரம் வேண்டியதில்லை. 'மணிமேகலை அங்குமிங்கும் நடந்துசென்றபோது மலர் பூத்துக் குலுங்கும் சோலைகளையும் இதழ் விரித்துச் சிரிக்கும் செந்தாமரை மலர்கள் நிறந்த தடாகத்தையும் கண்டார்' எனக் கூறப்படுவதால் மணிபல்லவம், மணிபல்லவத்தீவு என்பது நீண்ட நிலத் தொடர்ச்சியுடையதொன்றல்ல என்ற கருத்தை உறுதிப்படுத்துவதாயுள்ளது. பொய்கை - தடாகம் - தென்பட்டதும் மணிமேகலையில் உண்டு. 'குளம்', 'பொய்கை', 'புத்தர் பள்ளம்' என்று அழைக்கப்பட்ட உண்மை வரலாறு நயினாதீவு பற்றிய ஆய்வில் பலராலும் குறித்துக் கூறப்பட்டு வருகிறது. எனவே, 'மலர்கள் நிறைந்த தடாகம்' இருந்த இடமே 'மணிபல்லவம்' என்பது போதரும். மனித நடமாட்டமில்லாத - தொடர்பற்ற பிரதேசமாக தனிமைப் படுத்தப்பட்ட இடமாக - ஆளரவமற்ற பிரதேசமாகவும் மணிபல்லவம் இருந்ததென்பது திரிகாலமுண்மையேயாகும்.

### புத்த பீடிகை - தரும பீடிகை

''அப்போது அவள் முன் (மணிமேகலை முன்) திடீரென்று ஒரு தரும பீடிகை தோன்றியது. வட்டமாய் அமைந்த தரும பீடிகை மூன்று முழ உயரமும் ஒன்பது முழ அகலமும் கொண்ட பெரிய பீடிகை. அதன் உச்சியில் புத்தர் அடிச்சுவடுகள் அமைந்திருந்தன. அதைப் புத்தபகவான் இருக்கை என்று எண்ணி மரங்கள் அதன்மீது மலர்களைக் சொரியுமாம். பறவைகள் அதைப் பூசிப்பது போல் சிறகுகளைத் தம் உடலிலிருந்து சிலிர்த்துச் சொரியுமாம்.'' இவ்வாறு வர்ணிக்கும் மணிமேகலை 'புத்த பீடிகை மணிபல்லவத்தில் ஏற்படுத்தப்பட்ட (1991:55). அதைக் காண்பவர்களுக்கு அவர்களுடைய பழம் பிறப்பை உணர்த்தவல்லது. நாகநாட்டை ஆண்ட இரண்டு மன்னர் அப்பீடிகையை அடைய ஒருவர்க்கொருவர் போரிட்டுக்கொண்டனராம். அது கண்ட புத்தபகவான், ''இந்த இருக்கை உங்கள் இருவருக்கும் உரியது அன்று; எமக்குரியது'' என்று கூறி அப்பீடிகை மீது அமர்ந்து அவ்விரு வருக்கும் அறிவுரை கூற அவர்கள் நல்லறிவு பெற்றனர். இதற்கான நேரடிச் சான்று இன்றும் புத்த கோயிலிலே அனைத்து யாத்திரிகர்களது கண்களுக்கும் தரிசித்து வழிபடத்தக்க வகையிலே வெளிப்படையாகவே (வரலாறு எழுதப் பட்டும்) உள்ளது. நேரிலே காண்க: தரிசிக்கவும். இந்திரன் அமைத்த பீடம் என்றும், மணிமேகலை புத்த பீடிகையை வலம் வந்து தரிசித்து வணங்கினாள் என்ற செய்தியும் இன்றைய நயினாதீவே மணிபல்லவம் - மணிபல்லவத் தீவு என்பதனை உறுதிப்படுத்துகின்றன. நிலத்தில் மணிமேகலை வீழ்ந்து வணங்கித் தொழுததும் அவள் பழம்பிறப்பையுணர்ந்தாள்'' என்றும் தெளி வாகக் கூறுகிறது மணிமேகலை.

### அமுதசுரபியின் மகிமையும் பெருமையும்

'புத்தபிரான் அவதரித்த நாளான வைகாசி நிறைமதி நாள் (வைகாசி சுத்த பௌர்ணமி) அன்று கோமுகிப் பொய்கையிலிருந்து 'அமுதசுரபி' என்னும் ஐயக்கலம் (பிட்ஷாபாத்திரம்) வெளிப்படும். அக்காலம் ஆபுத்திரன் கையி லிருந்த அற்புதக்கலம். அதில் இடப்பட்ட சோறு எடுக்க எடுக்க குறையாது வளரும். இதன் பெருமையை அறவண அடிகளிடம் கேட்டறியலாம். இன்று தான் 'அமுதசுரபி' தோன்றும் நன்னாள். நாம் அங்கே போவோம் என்று கூறி மணிமேகலையைக் கோமுகிப் பொய்கைக்கு அழைத்துச் சென்றாள் தீவதிலகை. இம்மணிமேகலைச் செய்தியின் நடைமுறைப் பெறுபேறே இன்றும் தினமும் நயினாதீவில் ஆலயத்திலும் அமுதசுரபியிலும் நிகழும்

தினசரி அன்னதானப் பெருமை. இத்தகு நடைமுறைகள் இன்று நிகழும் இடம் நயினாதீவு எனப்படும் மணிபல்லவத்திலேயே என்பதனை அறிந் துணர்ந்து தெரிய வேறென்ன சான்றுதான் வேண்டுமோ? உலக அறங்க ளெல்லாவற்றுக்கும் சிறந்தது பிறர்பசி போக்குவதுதான். பசி போக்குவோரே சிறந்தவர்: 'மண்டினி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரோ' என்பது மணிமேகலை. பௌத்தத் தமிழ் வம்சத்தவர் நாகவம்சத்தவர்களான நயினாதீவு ஸ்ரீ மணிபல்லப தேசத்தவரேயவர் என்பது போதரும்.

### விழாக்கள் மலிந்த இடம் பணிபல்லவம்

''இந்திர விழாக் கொண்டாடாத நாளில் இந்த கரைக்கடல் கொள்ளும்'' என்று மணிமேகலை தெய்வத்தின் வாக்கு இருக்கிறது. அதுவுமன்றி இந்திரன் சாபமும் அப்படியே உள்ளது. ஆகையால் ஆண்டுதோறும் இந்திரவிழாச் செய்து வரும்'' என்று தருமசாவகன் மணிமேகலைக்குக் கூறினான். சாவக நாட்டிலுள்ள இந்நகரின் பெயர் நாகபுரம். அரசபாரம்பரியத்தின் வழிபடு தலமாகவும், யாத்திரைத் தலமாகவும் இம்மணிபல்லவம் நிறுவியது என்பது புண்ணியராசன் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

### நாகநாடு நடுக்குற்றாள்பவள்

'நாகநாடு' என்பது மணிபல்லவமாகிய நயினாதீவு. 'நடுக்குற்றாள்பவள் - பயத்தினாலும் பக்தியினாலும் ஈழத்து ஆட்சியும் அருளும் செய்தருளும் நாகபூஷணி அம்மன்' என்பது பொருள். மணிமேகலை காட்டும் 'நாகநாடு நடுக்குற்றாள்பவள்' என்ற தொடரிலே வரும் 'நாகநாடு' என்பது யாவா என்ற தீவினையே குறித்து நிற்கின்றது என்பதும் நோக்கத்தக்கது என்று கருத்தொன்று 'பத்மம்' என்னும் மலரிலே இடம்பெற்றுள்ளது. ஆயினும் இக்கருத்துப் பொருந்துமாறில்லை. மணிமேகலா தெய்வத்தின் மணிமேகலைக் குறிப்பும், இன்றைய ஸ்ரீ புவனேஸ்வரி சக்திபீடம நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயமே என்னும் சான்றும், அரசாட்சியும், அருளாட்சியும் நிகழும் நடைமுறை நம்பிக்கையும் கொண்டு ஆயுமிடத்து 'நாடு நடுக்குற்றாள் பவள்' என்னுந் தொடருக்கும் யாவாத் தீவுக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை'' என்பது போதரும். ஆயினும், யாவா உட்பட அதனைச் சூழவுள்ள தீவுகளிலும் நாடுகளிலும் பௌத்த, சைவ இலக்கிய, இதிகாச வழிபாட்டு மரபுகள் நிலவியுள்ளமையை வைத்துக் கொண்டு நாகநாடு குறித்த மேற் போந்த

கருத்துப் புனையப்பட்டிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. அது வெறும் புனைவே. கட்டுக் கதையேயாம். ஒரு புடைச்சார்புத் தன்மை யுண்டாயினும், காலவோட்டத்தில் யாவாத் தீவைவிட நயினாதீவு, மணி பல்லவம், நாகநாடு, நாகதீவு என்ற சக்திபீடம் பெருமையும், மகிமையும், புகழும், கீர்த்தியும், அருட்சிறப்பும் கொண்டு இலங்குவதுடன் அம்பாளின் தனித்துவ அருளாட்சி மிகவும் பயங்கரமிக்கதாயும், பௌதீகமானதாயும் அமைகின்றமையை எண்ணுமிடத்து, 'நடுக்குற்றாள்பவள்' என்னும் தொடரி னூடே மக்கள் 'பக்தர்கள்' யாத்திரிகர்கள் மனதிலே பயத்தன்மையைத் தோற்றுவித்துப் பக்தித் திறனால் 'ஆள்பவள்' என்றும், 'நாகநாடு' என்பது பிற்காலப் புகழ் பெற்ற தேசம். வழிபடும் இடம், யாத்திரைத் தலம், பாம்பு வழிபட்ட தலம், நம்பிக்கையுடன் ஏற்றுப் போற்றும் திருத்தலம், நாகர் குடியினர் ஆண்ட தேசம், நாகங்கள் வாழுமிடம் என்னும் தனித்துவ அம்சங்களால் இன்றைய மணிபல்லவம் - நயினாதீவையே குறித்தது என்று ஊகித்தும் சான்றுகாட்டியும் நிறுவுவதிலும் கருதுவதிலும் பிழையிருக்க முடியாதென்று யாம் கருதுகிறோம். இக்கருத்து 'ஊர்' பற்றிய சார்புடனோ, சமயம் பற்றிய வெளியுணர்வுடனோ அன்றி, 'சமூக நடைமுறை வழிபாட்டுப் பேருண்மை' என்ற அடிப்படையிலேயே ஈண்டு இங்கு நிறுவப்படுகிறது. இதில் உண்மையும், சான்றாதாரமும் (மூலச் சான்றும்) முக்கியமே தவிர உணர்வு நலன் - புலமை நலன் - வித்துவம் என்பது இரண்டாம் பட்சமே.

**நாகமும் இலங்கையின் ஆதிக்குடிகளும்: நாகர் வரலாறு**

''உலகின் பல்வேறு பாகங்களிலும் நாகரிகம் முதலில் தோன்றிய இடங்களில் நாகர்கள் வாழ்ந்ததாகப் பெறப்படுகின்றது. ஆபிரிக்கா, ஜப்பான், கொரியா, கம்போடியா முதலிய இடங்களில் நாகர்கள் வாழ்ந்தனர். நாகர்கள் வாழ்ந்த இடங்களில் எல்லாம் நாகவழிபாடு இருந்ததற்கான ஆதாரங்கள் பெறப்பட் டுள்ளன. 'இன்றைய நடைமுறையிலும் - நாக வழிபாட்டுத் தொன்மை யுடையது 'மணிபல்லவம்' எனப்படும் நயினாதீவே என்பதாலும், 'அமுத சுரபி' பற்றிய தொன்மையும் இன்றைய நவீன நடைமுறையும், பொருந்தி யமைவதாலும், இன்றும் தினசரி அன்னதானம் நிகழும் பீடமாகவும் நயினா தீவு இலங்குவதும் பிரத்தியட்சமே. புத்த பீடிகை நயினாதீவிலேயே உண்டு. ஆகவே யாத்திரைத் தலமாக பிறமதத்தினராலும் இன்று அனுசரிக்கப்படுவது நயினாதீவே. பேராசிரியர் கலாநிதி பரமு புஸ்பரத்தினம் அண்மையில் தெரிவித்துள்ள மண்டைதீவு அகழ்வுகள் பற்றிய கருத்தில் 'பப்பிரவர்கள்'

சீனர்கள் தொடர்பும் நயினாதீவுக்கும் உண்டு என்பது கருதத்தக்கது. 'நயினா தீவு ஆதி அரசு' எனப்பட்டது. நயினாதீவே நாகதீவு, மணிபல்லவம், மணித்தீவு, சம்புத்தீவு என அழைக்கப்பட்டது. (1988:205-249) என்பது ஆய்வாளர் ஜி. தனபாக்கியம் அவர்களது கருத்து. 'ஒரு பழந்தமிழ்நாடே மணிபல்லவம்' என்பர் தமிழவேள் க. இ. க. கந்தசாமி. இவ்வாய்வுக் கருத்துகள் மூலமாக மணிபல்லவமென்பது நயினாதீவே எனத் தெளியலாம்.

3

# நயினை ஸ்ரீ நாகபூஷணி

திருவருள் மிக்க அருட்சக்தியாகிய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் பக்தர்களுக்கு வேண்டிய அனுக்கிரகங்களை வாரி வழங்கிக் கொண்டிருக் கிறாள் என்பது உலகறிந்த பேருண்மை. பயபக்தியோடும் நேர்த்திகளோடும் உளவிருப்பத்தோடும் ஆற்றாமையோடும் அன்போடும் மணிபல்லவம் என மிளிரும் நயினைக்கு யாத்திரை செய்யும் அடியார்களின் தொகை நாளுக்கு நாள் பல்கிப் பெருகிக் கொண்டே வருகின்றதென்பது அந்தச் சந்நிதியின் பேரருட் பிரவாகமே எனலாம்.

அற்புதங்களைக் கண்ணுக்கு முன்னால் காட்டியும், கனவிலே காண் பித்தும் நிகழ்த்தும் மகோன்னத கீர்த்தி மிகுந்த சக்தி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் என்பது பிரத்தியட்சம். பூர்விக வரலாறும், அன்பர்கள், அறிஞர்கள், ஆய் வாளர்கள் குறிப்புகளும் யாத்திரிகர்களது அனுபவ வெளிப்பாடுகளும் அருளற்புதங்களை நம்பகத் தன்மையுடையனவாக்குகின்றன. நயினை அம்பாளின் அருள்நிலை வெளிப்பாடும், வியாபிதமும் கவிஞர்களது நெஞ் சிலும் சொற்களிலும் பீறிட்டு உந்தி வெளிப்பட்டு நிற்பதும் இலக்கியச் சான்றுகளென விளக்குகின்றன.

'அற்புதத் தெய்வம் இதனின் வேறுண்டோ' என்னும் வியப்புக்கு ஒவ்வொரு பக்தனையும் பக்தையையும் இயக்குகின்றது. ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருள் வீச்சு 'அலை முத்தெறியும் நயினை வளர் அமுது' என்று கவிஞர் திலகம் வி. சிவராஜசிங்கம் 'நயினை நாகபூஷணியம்மை பிள்ளைத் தமிழ்' என்ற தனது நூலில் அம்பாளை ஆராதித்து துதித்துப் பாடியுள்ளார். நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அற்புதத்தினாலே பதிகம், திரு வூஞ்சல், இரட்டை மணிமாலை, நீரோட்ட கயமக அந்தாதி, மான்மியம் முதலிய பிரபந்தங்களும் வெளிவந்துள்ளன.

பக்தி மார்க்கத்திலே இறைவியைத் தாயாகவும் சேயாகவும் பாவனை செய்து வழிபடும் முறை தூய்மையானதும் புனிதமானதும் இலகுவானது மாகும். சரித்திர காலத்திற்கப்பாற்பட்ட அற்புதங்கள் பல நிறைந்த நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் வரலாறு மணிமேகலையிலே குறிக்கப்படும்

மணிபல்லவம், நயினாதீவு தான் என்று ஆராய்ச்சியாளர் கூற்று இத்திருத் தலத்தின் அற்புதத்திற்கு தக்க எடுத்துக் காட்டாகிறது. சக்தியின் அம்சங்களில் ஒன்றாகிய மானஸாதேவியின் மறு பெயர்களாக 'நாகாபரணபூஷிதை', 'நாகவாஹினி' என்னும் நாமங்களோடு சம்பந்தப்பட்ட பெயர்கள் பல தேவி பாகவதத்தில் வருகின்றன.

'நச்சுவாய் அகிமாலினி' என்று அபிராமிப்பட்டரும், 'நாகபூஷணத்தி அண்டமுண்டநாரணி' என்று அருணகிரிநாதரும் போற்றுகின்றனர். ஆழ்கடல் சூழ் வட இலங்கையில் ஏழு தீவுகள் சூழ்ந்திருக்க எழில்பெற்று விளங்குவது நயினையம்பதி. பரப்பிலே சிறியதாயினும் வரலாறு, இதிகாசம், புராணம், இலக்கியம் ஆகியவற்றில் புகழ்ந்து பேசப்பட்ட பெருமையுடையது. மணித் தீவு, மணிநாகதீவு, மணிபல்லவம், மணிபுரி, நாகநயினாதீவு, நாகதீவு, நாகேஸ்வரம், நயினாதீவு ஆகிய பல பெயர்கள் இத்தீவையே குறிப்பன என்பது வரலாற்று அறிஞர்கள் கருத்து.

சக்தி வழிபாட்டின் நாகவழிபாட்டின் பழமைக்கும் பெருமைக்கும் தன்னிகரில்லாச் சான்றாக இவ்வாலயம் விளங்குகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றினாலும் சிறந்து விளங்கும் இத்தலத்துக்குக் கன்னிப் பெண் களும் சுமங்கலிகளும், திருமணம், குழந்தைப் பாக்கியம், நாகதோஷம் நிவர்த்தி என்பனவற்றுக்காகவே குடும்பத்துடன் யாத்திரை செய்கின்றனர். 'மணித்தீவு புவனேஸ்வரி' என ஆதியில் அழைக்கப்பட்ட மூர்த்தமே தற்போது 'நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி' என வழங்கப்படுகிறது என்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம் தோன்றிய வரலாற்றுக்கான கர்ண பரம்பரைக் கதையொன்றுண்டு. முன்னொரு காலத்தில் நயினாதீவில் உள்ள அம்பிகையை நாகம் ஒன்று பூசித்து வந்ததெனவும், அதனை ஒருநாள் கருடனொன்று கொல்ல முயன்றதெனவும், அவ்வழிச் சென்ற வணிக னொருவன் பாம்பைக் காப்பாற்றினான் எனவும் கூறப்படுகிறது. வீடு சென்று வணிகன் துயில் கொண்டு எழுந்தபோது வீடு நிறைய நாகரத்தின மணிகள் இருந்ததாகவும், இச்செல்வம் கொண்டு வணிகனே இவ்வாலயத்தைக் கட்டு வித்தான் எனவும் கதை வழங்குகிறது. பல்லாயிரக்கணக்கான மெய்யடி யார்களது யாத்திரைத் தலமாக விளங்கும் நயினையம்பதியில் அன்றுபோல் இன்றும் அன்னை ஸ்ரீ நாக ராஜேஸ்வரி எடுத்துரைக்க முடியாதளவிற்கு பல்வேறு அற்புதங்கள் புரிந்த வண்ணம் இருக்கிறாள்.

இத்தீவின் மேற்குக் கரையில் படகுத்துறை என்ற பெயரில் ஓரிடம் இன்றும் அழைக்கப்படுகிறது. மேற்குப் பகுதிக்கடல் மிகவும் ஆழமாகவும்

பெரிய கப்பல்கள் போக்குவரத்துச் செய்யக்கூடியதாகவும் இருக்கிறது. நாகம்மாள் கோயிலிற் கண்டெடுக்கப்பட்ட சிலாசாசனமும் இக்கொள்கை யினை வலியுறுத்துகிறது.

இச்சாசனம் - கல்வெட்டு பன்னிரண்டாம் நூற்றாண்டில் பொலநறுவை யிலிருந்து அரசாண்ட மகாபராக்கிரமபாகு என்பவனால் பொறிக்கப்பெற்றது. இக்கடலில் நாவாய்கள் என்று சொல்லப்படும் மரக்கலங்கள் காற்றில் அகப் பட்டு உடைந்து போனால் எவ்வித முறைகள் கையாளப்பட வேண்டு மென்பது அச்சாசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. ஏலவே கப்பல்களிற் போக்குவரத்துச் செய்தவர்களும் வணிகரும், நயினாதீவிலுள்ள - நாகபூஷணி அம்பாள் ஆலயத்தைத் தரிசித்திருத்தல் கூடுமென ஊகிக்க இடமுண்டு. நயினாதீவுச் சிலாசாசனம் - கல்வெட்டு வாசகங்கள் வருமாறு:

ஊராத்துறையிற் பரதேசிகள் வந்து இருக்க வேணுமென்றும் இவர்கள் ரஷைப்பட வேணுமென்றும் பு(து) துறைகளில் பரதேசிகள் வந்த(ாலித்) துறையி(ே)ல) சந்திக்க (ே)வணுமென்றும் நா(வாய) ஆனை குதிரையொடு(ம்) பண்டாரசேவைக்கு ஆனை குதிரை கொடு வந்த மரக்கலங் கேட்ட துண்டாகில் நாலத்தொன்று பண்ட(ா)த்துக்கு கொண்டு மூன்று கூறும் (உ) டையவனுக்கு விடக் கடவதாகவும் வாணிப மரக்கலங் கெட்ட துண்டாகில் செம்பாகம் பண்டாரத்துக்குக் கொண்டு செம்பாகம் உடையவனுக்கு விடக்கடவதாகவும் இவ்வயவஸதை... தித்து.... தனையுங் கல்லிலுஞ் செம்பிலும் எழுத்து வெட்டு வித்து இவ் வயஸதை செய்து கொடுத்து தேவபராக்கறமபூஜோ''

என்று சாசனம் உள்ளது. இந்தச் சிலாசாசனம் பழைய எழுத்துகளினாற் செதுக்கிப் பொறிக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவு, நயினாதீவு ஆகியவற்றை அடுத்துள்ள கடற்பகுதிகளிற் கப்பல்கள் அடிக்கடி சேதமுற்றன என்பது இதனால் அறியக்கிடக்கிறது. மேலும் வருடந்தோறும் அறுபது கப்பல்கள் சேதமடைவதாக ஜோன் எனும் கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் குறிப்பிட் டுள்ளார் என முதலியார் செ. இராசநாயகம் எடுத்துக்காட்டியுள்ளார். நெடுந் தீவுக் கடலிற் கப்பல்கள் சேதமடைவது சர்வசாதாரணமென்பதற்கு வைபவ மாலையுடையார் குறிப்பிட்டிருப்பதும் தக்க சான்றாகும்.

''வட இலங்கையைச் சங்கிலி அரசன் ஆட்சி புரிந்த காலத்தில் நாற்பத் தொன்பது வன்னியர்மார் தென்னாட்டிலிருந்து மரக்கலமேறி வருகையில் நெடுந்தீவிற் கடலில் அழிந்துபோயினர்''

என்ற குறிப்பு (யாழ்ப்பாண வைபவமாலை, பக். 60) உள்ளது. சீனத்துச் சாடிகள் நயினாதீவிலே கண்டெடுக்கப்பட்டுள்ளமை பன்னிரண்டாம் நூற்

றாண்டுகளிலேயே நயினாதீவுக்கும் சீனாவுக்கும் தொடர்பு இருந்தமையை புலப்படுத்துகின்றன.

சீனத்துச் சாடி 1937ஆம் ஆண்டில் கொழும்பு நூதனசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சொற்பகாலத்துக்குள்ளேயே ஆலயத்தின் புனருத்தாரண வேலைகள் நிகழ்ந்தமையும் நிறைவுபெற்றமையும் மகா கும்பாபிஷேக வைபவம் பூர்த்தியானமையும் அம்பாளின் அற்புத நிகழ்வுகளாகவே சொல்ல வேண்டும்.

''அதிசயமான வடிவுடையாள்'' என்று அம்பாளை அபிராமிப்பட்டர் பாடிய வரிகள் சர்வநிச்சயமானவை. அம்பிகையைச் சரண்புகுந்து அதிக வரம்பெற அனுதினமும் அவள் பாதாரவிந்தங்களைப் பணிந்து வணங்கு வோமாக.

*(தமிழ்நாதம், 21.06.2012)*

4

# அற்புதத் தெய்வம்
# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்

திருவருள் மிக்க அருட்சக்தியாகிய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மை பக்தர்களுக்கு வேண்டிய அனுக்கிரகங்களை வாரி வழங்கிக் கொண்டிருக் கிறாள் என்பது உலகறிந்த பேருண்மை. பயபக்தியோடும், நேர்த்திகளோடும் உளவிருப்பத்தோடும் ஆறாமையோடும் அன்போடும் மணிபல்லவம் என மிளிரும் நயினைக்கு யாத்திரை செய்யும் மக்கட்டொகை நாளுக்கு நாள் பல்கிப் பெருகிக் கொண்டே வருகிறதென்பது அச்சர்வமத சந்நிதியின் பேரருட் பிரவாகமேயெனலாம். அற்புதங்களைக் கண்ணுக்கு முன்னாற் காட்டியும், கனவிலே காண்பித்தும் நிகழ்த்தும் மகோன்னத கீர்த்தி மிகுந்த சக்தி நாகபூஷணி அம்பாள் என்பது பிரத்தியட்சம். பூர்வீக வரலாறும் அன்பர்கள், அறிஞர்கள், ஆய்வாளர் குறிப்புகளும் யாத்திரிகர்களது அனுபவ வெளிப்பாடுகளும் அருளற்புதங்களை நம்பகத்தன்மையுடையன வாக்கு கின்றன. நயினை அம்பாளின் அருள் நிலை வெளிப்பாடும் வியாபிதமும் கவிஞர்களது நெஞ்சிலும் சொற்களிலும் பீறிட்டு உந்தி வெளிப்பட்டு நிற்பதும் இலக்கியச் சான்றுகளென விளங்குகின்றன.

'அற்புதத் தெய்வம் இதனின் வேறுண்டோ' என்னும் வியப்புக்கு ஒவ்வொரு பக்தனையும் பக்தையையும் இயக்குகிறது ஸ்ரீ நாகபூஷணியின் அருள் வீச்சு. 'அலைமுத்தெறியும் நயினை வளர் அமுது' என்று தமரநீர்ப் புவனம் முழுதொருங்கீன்ற அகிலாண்டகோடிப்பிரமாண்டநாயகியை ஆராதித்துத் துதித்துப் பிள்ளைத் தமிழிலே பாடியுள்ளார் அமரர் கவிஞர் திலகம் வ. சிவராஜசிங்கம். புலமை நலனும் வித்துவத்திறனும், கவிவளமும் கைவந்த கவிராஜசிங்கம் சிவராஜசிங்கம் உள்ளம் உவக்க அம்பிகையின் அருளை மடுத்து இன்னமுதக் கனியின் சாற்றில் தேன் கலந்து பக்தர்களுக்குப் பருகத் தந்துள்ளார் நயினை நாகபூஷணியம்மை பிள்ளைத் தமிழிலே.

சுயம்பு மூர்த்தியும் அற்புதத் தெய்வமுமான நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மையின் பிள்ளைத்தமிழைப் படிப்போர்க்கு வல்வினை பறந்தோடும்; நெஞ்சிற் பதிப்போர்க்குத் துன்பம் மறையும்; நாவிற் துதிப்போர்க்கும்

செல்வம் பலிக்கும்; பலர் நடுவே எடுத்தோதுவோர்க்கு இகலோக இன்பம் பெருகும் என்பது துணிபு. 'அம்மையின் அருட்பார்வை பிள்ளைத்தமிழ்க் கவிஞர்பாற் பதிந்தது' என்கிறார் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்கள்.

ஈழுத்தில் பழமையும் பிரபல்யமும் மிக்க திருத்தலங்களுள் சக்திபீடம் எனத் திகழ்வது நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அற்புதத்தினாலே பதிகம், உஞ்சல், இரட்டை மணிமாலை, நீரோட்டாமக அந்தாதி, மான்மியம் முதலிய பிரபந்தங்களும் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தமும் எழுந்துள்ளன. தமிழறியும் இறையுணர்வும் பாய்ச்சுவது அம்பாளின் பேரருளேயாகும். 'தமிழ்க் கவிதை தடம்புரண்டு நலிந்து நிற்கும் வேளையில், இலக்கிய இலக்கணப் பாரம்பரியம் என்பது யாது என்பதை உணர்த்தும் படைப்பாக நயினை ஸ்ரீ நாகபூஷணியம்மை பிள்ளைத்தமிழ் அமைகிறது. ஆசிரியர் கையாளும் யாப்பமைதிகளின் லாவகமும் கற்பனையின் செழுமையும் போற்றத்தக்கவை. மரபுவழி வந்த பிரபந்த வடிவமாயினும், ஆசிரியரின் தனித்துவம், தலக்காட்சிகள், பிரதேச வருணனைகள், வாழ்க்கைச் செய்திகள், ஐதீகக் கதைகள் ஆட்சி முதலியனவற்றிலே சிறப்பாக வெளிவருகின்றது' என்கிறார் கலாநிதி பொ. பூலோகசிங்கம்.

பக்தி மார்க்கத்திலே இறைவியைத் தாயாகவுஞ் சேயாகவும் பாவனை செய்து வழிபடும் முறை தூய்மையானதும் புனிதமானதும் இலகுவானது மாகும். சரித்திர காலத்திற்கப்பாற்பட்ட அற்புதங்கள் பல நிறைந்த நயினை நாகபூஷணி அம்மனின் வரலாறு மணிமேகலையிலே குறிக்கப்படும் 'மணிபல்லவம்' நயினாதீவுதான் என்று ஆராய்ச்சியாளர் கூற்று இத்திருத் தலத்தின் அற்புதத்திற்கெடுத்துக் காட்டாகிறது. சக்தியின் அம்சங்களில் ஒன்றாகிய மானஸாதேவியின் மறு பெயர்களாக 'நாகபூஷிதை', 'நாகவாஹினி' என்னும் நாமங்களோடு சம்பந்தப்பட்ட பெயர்கள் பல தேவிபாகவதத்தில் வருகின்றன. 'நச்சுவாய் அகி மாலினி' என்று அபிராமிப்பட்டரும் 'நாக பூஷணத்தி அண்டமுண்ட நாரணி' என்று அருணகிரிநாதரும் போற்று கின்றனர். ஆழ்கடற் சூழ் வட இலங்கையில் ஏழு தீவுகள் சூழ்ந்திருக்க எழில் பொதுளி விளங்குவது நயினையம்பதி. பரப்பிலே சிறியதாயினும் வரலாறு, இதிகாசம், புராணம், இலக்கியம் ஆகியவற்றில் புகழ்ந்து பேசப்பட்ட பெருமையுடையது. மணித்தீவு, மணிநாகதீவு, மணிபல்லவம், மணிபுரி, நாகநயினாதீவு, நாகதீவு, நாகேஸ்வரம், நயினாதீவு ஆகிய பல பெயர்கள் இத்தீவையே குறிப்பன என்பது வரலாற்றறிஞர் கருத்து.

சக்தி வழிபாட்டின் - நாகவழிபாட்டின் பழமைக்கும் பெருமைக்கும் தன்னிகரில்லாச் சான்றாக இவ்வாலயம் விளங்குகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றினாலும் சிறந்து விளங்கும் இத்தலத்துக்குக் கன்னிப் பெண் களும், சுமங்கலிகளும் திருமணம், குழந்தைப் பாக்கியம், நாகதோஷ நிவர்த்தி என்பனவற்றுக்காவே குடும்பத்துடன் யாத்திரை செய்கின்றனர். 'மணித்தீவு புவனேஸ்வரி' என ஆதியில் அழைக்கப்பட்ட மூர்த்தமே தற்போது 'நயினா தீவு ஸ்ரீ நாகபூஷணி' என வழங்கப்படுகிறது என்பதற்கு ஆதாரங்களுண்டு.

ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம் தோன்றிய வரலாற்றுக்கான கர்ண பரம்பரைக் கதையொன்றுண்டு. முன்னொரு காலத்தில் நயினாதீவில் உள்ள அம்பிகையை நாகம் ஒன்று பூசித்து வந்ததெனவும், அதனை ஒருநாள் கருடனொன்று கொல்ல முயன்றதெனவும், அவ்வழிச் சென்ற வணிக னொருவன் பாம்பைக் காப்பாற்றினான் எனவும் கூறப்படுகிறது. வீடு சென்ற வணிகன் துயில் கொண்டு எழுந்தபோது வீடு நிறைய நாகரத்தின மணிகள் இருந்ததாகவும், இச்செல்வங் கொண்டு வணிகனே இவ்வால யத்தைக் கட்டு வித்தானெனவும் கதை வழங்குகிறது. பல்லாயிரக்கணக்கான மெய்யடியார்களது யாத்திரைத் தலமாக விளங்கும் நயினையம்பதியில் அன்று போல் இன்றும் அன்னை நாகராஜேஸ்வரி எடுத்துரைக்க முடியாத அளவிற்குப் பல்வேறு அற்புதங்கள் புரிந்த வண்ணம் இருக்கிறாள். நெடுங் காலம் பிள்ளைப்பேறு அற்றிருந்த தம்பதியர் அம்பிகையின் அருளால் நன்மக்கட்பேறு வாய்க்கப் பெறுகின்றனர். தீராத பிணிகள் (குறிப்பாகப் பசிப்பிணி) போக்கும் திருப்பதியாகவும் இத்தலம் திகழ்கிறது. நித்திய அன்னதானம் ஆலயத்திலும், உயர் திருவிழாக் காலங்களிலே 'அமுதசுரபி' அன்னதான மடத்திலே அன்னதானப் பணியும் நிகழ்கின்றனவென்பது கண்முன் நிகழும் பேரற்புதம்.

இத்தீவின் மேற்குக் கரையில் படகுத்துறை என்ற பெயரால் ஓர் இடம் இன்றும் அழைக்கப்படுகிறது. மேற்குப் பகுதிக் கடல் மிகவும் ஆழமாகவும் பெரிய கப்பல்கள் போக்குவரத்துச் செய்யக்கூடியதாகவும் இருக்கிறது. நாகம்மாள் கோயிலிற் கண்டெடுக்கப்பட்ட சிலாசாசனமும் இக்கொற்கை யினை வலியுறுத்துகின்றது.

இச்சாசனம் - கல்வெட்டு - பன்னிரண்டாம் நூற்றாண்டில் பொலனறுவை யிலிருந்து அரசாண்ட மகா பராக்கிரமபாகு என்பவனால் பொறிக்கப் பெற்றது. இக்கடலில் நாவாய்கள் காற்றில் அகப்பட்டு உடைந்து போனால் எவ்வித முறைகள் கையாளப்படவேண்டுமென்பது இச்சாசனத்தில் விவரிக்கப் பட்டுள்ளது. எனவே, கப்பல்களிற் போக்குவரத்து செய்தவர்களும் வணிகரும்,

நயினா தீவிலுள்ள ஸ்ரீ நாகபூஷணியம்மாள் ஆலயத்தைத் தரிசித்திருத்தல் கூடுமென ஊகிக்க இடமுண்டு.

நயினாதீவுச் சிலாசாசனம் - கல்வெட்டு வாசகங்கள் வருமாறு:

*ஊராத்துறையிற் பரதேசிகள் வந்து*
*இருக்க வேணுமென்றும் இவர்கள்*
*ரஷைப்பட வேணுமென்றும் பு(து)*
*துறைகளில் பரதேசிகள் வந்த(ாலித்)*
*துறையிலே(ல) சந்திக்க(ே)வணுமென்றும்*
*நா(வாய) ஆனை குதிரை யொடு(ம்)*
*பண்டார சேவைக்கு ஆனை குதிரை*
*கொடு வந்த மரக்கலங் கெட்டதுண்*
*டாகில் நாலத் தொன்று பண்ட(ா)த்துக்கு*
*கொண்டு மூன்று கூறும் (உ)டையவனுக்கு*
*விடக் கடவதாகவும் - வாணிப மரக்கலங்*
*கேட்ட துண்டாகில் செம்பாகம்*
*பண்டாரத்துக்குக் கொண்டு செம்பாகம்*
*உடையவனுக்கு விடக் கடவதாகவும்*
*இவ் வயவஸதை.... தித்து....*
*தலையுங் கல்லிலுஞ் செம்பிலும் எழுத்து வெட்டுவித்து*
*இவ் வயஸதை செய்து கொடுத்து தேவபராக்கிரம பூஜோ*

என்று சாசனம் உள்ளது.

இந்தச் சிலாசாசனம் பழைய எழுத்துக்களினாற் செதுக்கப் பொறிக்கப் பட்டுள்ளது. நெடுந்தீவு, நயினாதீவு ஆகியவற்றை அடுத்துள்ள கடற்பகுதி களிற் கப்பல்கள் அடிக்கடி சேதமுற்றன என்பது இதனால் அறியக்கிடக்கிறது. மேலும் வருடந்தோறும் 60 கப்பல்கள் சேதமடைவதாக ஜோன் எனும் கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் குறிப்பிட்டுள்ளாரென முதலியார் செ. இராசநாயகம் எடுத்துக் காட்டியுள்ளார். நெடுந்தீவுக் கடலிற் கப்பல்கள் சேதமடைவது சர்வசாதாரணமென்பதற்கு வைபவமலையுடையார் குறிப் பிட்டிருப்பதும் தக்க சான்றாகும்.

வடஇலங்கையைச் சங்கிலி அரசன் ஆட்சி
புரிந்த காலத்தில் நாற்பத்தொன்பது வன்னியர்மார்
தென்னாட்டிலிருந்து மரக்கலமேறி வருகையில்
நெடுந்தீவிற் கடலில் அமிழ்ந்து போயினர்

என்ற குறிப்பு (யாழ்ப்பாண வைபவமாலை, ப. 60) உள்ளது.

சீனத்துச்சாடிகள் நயினாதீவிலே கண்டெடுக்கப்பட்டுள்ளமை, பன்னிரண்டாம் நூற்றாண்டுகளிலேயே நயினாதீவுக்கும் சீனாவுக்கும் தொடர்பு இருந்தமையைப் புலப்படுத்துகின்றன. சீனத்துச் சாடி 1937 ஆம் ஆண்டில் கொழும்பு நூதனசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இன்றைய அறங்காவலர்களுக்கும் அடியார்களுக்கும் அம்பாள் அருளிய அற்புதம் - கருணை மழை என்று வருணிக்கத்தக்கது. குடிநீர்த் தட்டுப்பாடு நிரம்பிய தீவுப்பற்றில் - குடிப்பதற்கே நன்னீர் அரிதாகவே கிடைக்கும் பிரதேசத்தில் மிகமிகச் சொற்ப தினங்களிலே அம்பாளின் ஆலய முகட்டு - உள்வீதி திருப்பணி நிகழ்ந்தமையும், நிறைவுற்றமையும், மகா கும்பாபிஷேக வைபவம் பூர்த்தியானமையும் பேரதிசயமே எனலாம். அறங்காவலர்கள் தண்ணீர்த் தொட்டி, நன்னீர்த் தொட்டிகளைக் கட்டிவிடலாம். ஆனால் அவற்றை நிரப்புவதற்கான பெருமழையை அம்பாளே வருஷிக்க வேண்டுமல்லவா? இது நிகழ்ந்தேறிய அற்புதம் தனியே கட்டுரையென எழுதிப் பூரிக்கவைக்கத்தக்கது. அருள் மழை - கருணை மழை - கட்டிட மழை - கடும் மழை - கடாட்ச மழை என்றெல்லாம் கோயிலை (Plate) பிளேற் போட்டுக் கட்டிய காலத்து அதிசயம் - அற்புதம் பெருவியப்பேயாகும். உயர்திரு விழாவின் 11 ஆம் திருவிழாவிலே கூடும் பெருந்திரளான அடியார்கள் கண்டு வியக்கும் அற்புதக் காட்சி இயல்பான இயற்கை விநோதமேயாகும். உணர்ச்சியும், புளகாங்கிதமும், வியப்பும் விண்ணை நோக்கி விரியும் கண்களும் விண்ணிலே அருள்புரியும் கருடக் காட்சியும் குதூகலமும் ஆனந்தமும் கருத்திற்கும் கற்பனைக்கும் எட்டாதவை. வருணிக்க முடியாத மெய்ச் சிலிப்பூட்டும் சம்பவங்கள் என்பது நிச்சயம். 'அதிசயமான வடிவுடையாள்' என்று அம்பாளை அபிராமிப்பட்டர் பாடிய வரிகள் சர்வ நிச்சயமானவை. அம்பிகையைச் சரண்புகுந்து அதிக வரம் பெற அநுதினமும் அவள் பாதார விந்தங்களைப் பணிந்து வணங்குவோமாக.

5

# சீறிடும் நாகபூஷணித் தாய்

அழியாத கன்னிகையாக விளங்குபவள் நயினை நாகபூஷணி - வித்தின்றி விளை மூலமாகவும் திகழ்பவள். அழகுக்கொருவரும் ஒவ்வாத வல்லியென மிளிர்பவள். அலை கடலாணையைத் தன்னகத்தே கொண்டு, ஐந்தலை நாகத்துள் பஞ்சபூத அடக்கத்தினை இயைவித்து நிற்பவள். அருளைச் சுரந் தளித்து மருளைக் களைபவள். வன்நெஞ்சப் பேதயரை வைது அநுக்கிரகம் செய்யும் ஆற்றல் பெற்று விளங்குபவள். குண்டலினி சக்தியாயும் நாகா பரண பூஷிதையாயும் இலங்கும் அம்பிகையின் அருள் பழுத்த திருக் கோலத்தைக் காணும் அடியார்கள் நெக்கருகி நின்று வழிபடுவர். இந்துப் பெருமக்கள் ஒவ்வொருவரது இருதயத்திலும் சிந்தனையிலும் குடிகொண்டு வாழ்பவள் நாகபூஷணித்தாய் - அனைத்துயிர்களையும் இரட்சித்துக் காப்ப வளான அம்பிகை வேண்டுவார் வேண்டுவதறிந்து வழங்கும் தன்மையால்; பால் நினைந்தூட்டும் தாய்.

### அக்கினி அனர்த்தம்

3 - 3 - 1986 அன்று நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு ஏற்பட்ட 'அக்கினி அனர்த்தம்' 1958 ஆம் ஆண்டுக்குப் பின், - 28 ஆண்டுகளுக்குப் பின் நிகழ்ந்த கோர அழிவெனலாம். இறைவிக்குரிய சொத்து பொது மக்களுக் குரிய சொத்தேயாம். இரு தேர்களும் மஞ்சமும் சகடையும் பிரதான வாயிற் கதவுகளும் எரிக்கப்பட்ட சம்பவம் தமிழ்க் கலாசார சீரழிப்பினதும் பண்பாட்டு அழிப்பினதும் முன்னோடி நடவடிக்கை என்றே கருத வேண்டும். காரண காரியத் தொடர்பில்லாத கண்மூடித்தனமான செய்கையும் மிலேச்சத்தனத்தின் வெளிப்பாடும் தான் இந்த அழிபாடுகளினால் வெளிப்படையாகின்றன. 'கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை' என்ற முதுமொழிக்கிணங்க வேற்று மதத்தினரது இச்செய்கை இந்துக்களின் கொதிப்பினுக்குள்ளாகியுள்ளது. 'பொய்யர் தம் பொய்யினை' உலகுக்கு அம்பிகை உணர்த்தாமலா போய் விடுவாள்? இறைவனும் இறைவியும் ஐக்கியமான பீடமே நயினா தீவு என்பது அறிஞர் கருத்து. மூலஸ்தானத்திலிருக்கும் ஐந்து தலை நாக உருவின்

அடிப்பாகம் வளர்ந்து செல்வதாகவும், அதன் வால் முனைப்பில் இலிங்கப் பிரதிஷ்டை விளங்குவதாகவும் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். 1958 ஆம் ஆண்டு இடம் பெற்ற அழிபாடுகளின் போதும், ஆலய மடம், கடைகள், தேர்கள், சப்பரம் என்பன கொளுத்தப்பட்டதுடன், ஊரவர்கள் பலர் பலத்த அடி உதைக்கும் உள்ளாகினர். அப்பொழுது இருந்த புத்த கோயிலைச் சேதப்படுத்தியதாகவே ஊரவர் பலர் தேடப்பட்டு, நொறுக்கப் பட்டதுடன் அதனால், நோய்வாய்ப்பட்டும், மடிந்தும் உள்ளனர். இன்றும் அந்தச் சரித்திரம் கொடுமையான வக்கிரங்களின் பசுமையான நினைவலை களாகப் பலராலும் எடுத்துக் கூறப்படுவதுண்டு. அன்று நடந்த அநீதி ஊரவர் களைத் தீவிலேயே அகதிகளாக்கி விட்டுள்ளது. 'வெட்ட வெட்டத் தழைப் பவள்' அம்பிகை என்பதற்கும் வாழையாடி வாழையாக வரும் திருக்கூட்டத் தொண்டர்களது புனிதமான பக்திப் பணி பரம்பரை பரம்பரையாகத் தொண்டு செய்வோரது ஆழமான ஆன்மிக அநுபூதி நெறி தக்க உறுதுணை புரியும். 'நற்செய்கை' பக்கபலமாயமைவன எனலாம். பத்தாயிரம் ஆண்டுகளுக்கு மேற் பழமை வாய்க்கப் பெற்ற இத்தலத்தின் மகிமையைச் சிறு சிறு சுரண்டல்கள் மூலம் சீரழித்துவிட முயல்பவர்கள். பாழ் நரகக் குழிக்குள் வீழ்ந்து பதைப்புறுவர். தெய்வம் நின்றறுக்குமன்றோ!

**அம்பாள் கருணை**

நயினை நாகபூஷணிக்கான ஆலயத்தின் 1788 இல் இராமலிங்கர் - இராமச் சந்திரர் கட்டினார் - அன்றிலிருந்து அவர் வழிவரும் ஆண் சந்ததியினரே மனேச்சராவர்கள். 1935 இல் கிழக்குக் கோபுரம் கட்டப்பட்டது. 1951இல் விமானம் புனரமைக்கப்பட்டு 26 - 4 - 1951 இல் புனராவர்தன சம்புரோஷண மஹா கும்பாபிஷேகம் நிகழப் பெற்றது. அம்பாளுக்கான புதிய சித்திரத்தேர் 8 - 7 - 1957 இல் வெள்ளோட்டம் விடப்பட்டது. இத்தேர் 1958 இலும் அழிபாடுகளுக்குள்ளாகவில்லை. 1986 இலும் அழிபாடுகளுக்குள்ளாக வில்லை. 1986 இலும் அம்பாளின் மறக் கருணைச் சிறப்பினால் இப்பெரிய தேர் எதுவித பாதிப்புக்குள்ளாகிவில்லை. 12 ஆம் நூற்றாண்டுக்கால பொல நறுவைக் கால சாசனம் இங்குள்ளது. வணிகத் தொடர்பினை வலியுறுத்து வதாயும், துறைமுகமாக (படைத்துறை) விளங்கியதற்குச் சான்று காட்டு வதாயும் உள்ளது இக்கற்சாசனம். 1960 ஆம் ஆண்டு தொடக்கம் 15 நாட்கள் திருவிழா இங்கு நடைபெற்று வருகிறது.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலுக்கு அருகே வடக்குக் கடலில் இன்றும் வெளிப்படையாகக் காணப்படும். கருடன் கல். பாம்பு, சுத்திக் கல்

இரண்டும் இத்தலத்தின் பூர்விகக் கதைகளினதும் கர்ண பரம்பரைச் செய்தி களினதும் உண்மையினை எடுத்து விளக்குவனவாயுள்ளன. இத்தலத்தின் தலவிருட்சம் வன்னிமரம் அம்பாளின் தேர்ச் சிற்பங்களில் வரலாற்றுச் சம்பவங்கள் அழகுறச் சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளன. நாகம் பூசித்து நின்ற இத்தலம் 'நாகேஸ்வரம்' என்றும் பெயர் பெற்றுள்ளது. 'மணிபல்லவம்' என்ற பெயர் இதன் இதிகாச காவிய, இலக்கியச் சிறப்பினுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. கலைக் களசியம் தொகுதி 8 இல் மணி பல்லவம் என்ற பெயரிற்கு அரியதொரு விளக்கமுண்டு. இது கி.பி. 2 ஆம் நூற்றாண் டளவில் இத்தலத்திற்குண்டான பெயர்.

**புத்தர் வருகை**

நயினை தீவில் சக்தி பீடம் (ஸ்ரீ புவனேஸ்வரி பீடம்) நிறுவியவன் 'இந்திரனே' என்பது மணிமேகலைக் காப்பியத்தினால் நிறுவப்படும். அதன் பின்னர்தான் புத்த பகவான் நயினா தீவுக்கு வந்தார். புத்த பெருமான் கி.மு. 563 இற்கும் கி.மு. 484 இற்குமிடையில் தனது யாத்திரை காரணமாக நாகதீவைத் தரி சித்து நாக வழிபாடாற்றியிருக்க வேண்டும். சாவக நாட்டு மன்னன் புத்தரது பாத பீடிகையைத் தரிசிக்க வந்ததாக மணிமேகலை கூறும். பர்மாவிலிருந்து தர்மசோக மகாராசா புத்திர சோகத்தால் வருந்தி நாகதீவுக்கு வந்தார். பாண்டவர்களில் ஒருவனான 'அருச்சுணன்' நாக கன்னிகையை மணஞ் செய்து 'பப்பிரவாகனைப்' பெற்றான். பப்பிரவாகன் சல்லி (காணிப் பெயர்) என்பது ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் அமைந்துள்ள இடம். நெடுமுடிக் கிள்ளி என்னும் சோழ அரசன் பீலிவளையை மணந்து தொண்டமான் இளந்திரயனைப் பெற்றான் என 'யாழ்ப்பாணச் சரித்திரம்' கூறும் 'புத்தர் பிரான்' சரித்திர காலந் தொட்டேற்பட்ட நாக வழிபாட்டை ஆராய்வதற் காகவும், அதைத் தாமும் வழிபடுவதற்காகவுமே நாகதீவுக்கு வந்தார் எனக் கருதுவோருமுளர்.

போர்த்துக்கேயர் வருகை நயினாதீவுக்குப் பெரும் நட்டத்தை விளை வித்தது. நாகபூஷணியம்மன் கோயில் முற்றாக அழிக்கப்பட்டது. பொருட்கள் சூறையாடப்பட்டன. கி.பி.1620 - கி.பி. 1624 இற்கும் இடைப்பட்ட காலமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

**நாகரிக உதயம்**

ஒல்லாந்தர் காலத்தில் இராமச்சந்திரர் கதிரித்தம்பி என்பவரால் கோயிலுக் கேற்படவிருந்த பாரிய அழிபாடுகள் தடுக்கப்பட்டன. போர்த்துக்கேயரழித்த கோயில் திரும்பச் சிறிதாகக் கட்டப்பட்டிருந்தது. அதனையே ஒல்லாந்தர் அழிக்க முற்பட்டனர். கி.பி. 1792 இல் இவ்வாலய அழிபாடுகளை எதிர் கொண்டதாயினும், ஒல்லாந்தர்களது சமயத்திற்கு வழங்கிய ஆதரவாலும் கிராம வரி அறவிட்டுக் கொடுக்க இணங்கியதாலும் அம்மன் ஆலயம் தப்பியது. ஒல்லாந்தர் காலத்திலேயே புரட்டஸ்தாந்து மதாலயம், பள்ளி வாசல்கள் என்பன அமைக்கப்பட்டன. நயினை மக்கள் இந்து சமய தத்துவத் திற்கிணங்க சகிப்புத் தன்மையும், விசால மனப்போக்கும் கொண்ட காரணத் தினாலேயே பிறமதத்தினரது வழிபாட்டிடங்கள் நயினாதீவில் அமைக்க இடம் கொடுத்தனர். சர்வமத சந்நிதித் தன்மை கொண்டிலங்குவது நயினை மக்களின் பலவீனத்திலாலல்ல; அவர்களது சகிப்புத் தனத்தினாலேயே, என்பதனை இவ்விடத்தில் வற்புறுத்திக் கூறவேண்டியதவசியம். ஆயினும் எத்துணை இடுக்கண் வரினும் அவற்றினால் பாதிப்படைந்து நலிவுற்று நின்றனரேயன்றி, அந்நலிவினால் மதம் மாறியோ, அல்லது தாம் கொண்ட கொள்கையினின்றும் விலகியோ - பிறழ்ந்தோ - நடந்து கொண்டாரல்லர். இதனாலேயே அன்னை ஸ்ரீ நாகபூஷணி உயிர்ப்புள்ள ஒரு தெய்வமானாள். ஆயினும், அவள் பெட்டிப் பாம்பாகிய காலமே அதிகம். அவளின் 'சீற்றம்' காணத் துடிப்பவர்களுக்கு வெகுவிரைவில் 'சீறியே' மூர்ச்சையடக்குவாள். அவ்வல்லமை அப்பராசக்திக்குரிய தனித்துவச் சிறப்பல்லவா? மகிஷாசுர மர்த்தனியாகிவிடும் வேளையில் ஆனந்தம் கொள்பவர்கள் நயினை வாழ் மக்களாகத்தான் இருக்க முடியும். ஏனெனில், நாகரினத்திலிருந்தே நாகரிகம் தோன்றியது என்றும் சொல்லப்படுவதுண்டு. ஆதலால் நாகரிகத்தின் சகாத் தனத்தைப் பேணுவதில் இன்பம் கொள்பவர்கள் இவ்வூரவர்கள். இது முக்காலமும் உண்மை.

**அருட் பிரசாரம்**

நயினா தீவில் புத்தர் கோயில் 1930 - 40 காலகட்டத்தில் ஏற்பட்டது. 1947 ஆம் ஆண்டு விகாரை கட்டப்பட்டது. 1954 இல் புத்தக விக்கிரகம் பர்மாவிலிருந்து கொண்டு வரப்பட்டது. 1958 ஆம் ஆண்டு அன்றைய அரசு புத்த கோயிலைப் புனரமைப்புச் செய்தது.

1919 ஆம் ஆண்டு நயினா தீவின் பள்ளிவாசல் கட்டப்பட்டது. 1890 இல் புரட்டஸ்தாந்து மததேவாலயம், வீடு என்பன கட்டப்பட்டன. எம்மதமும் மனிதனைச் செம்மைப்படுத்தி நல்வழிப்படுத்தி வாழ்விக்கும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர்கள் நயினை மக்கள். ஆதலால், சூரத்தனத் தால் தம்மைப் பெரிதுபடுத்திப் பிரசாரப்படுத்தல் நோக்கம் இல்லாத நெஞ் சினர் நயினைக் கற்றோர்.

தமிழகத்து அறிஞர்களும் ரிஷிகளும் பிரமுகர்களும் நயினைக்கு வருகை தந்துள்ளனர். அவர்களது சிறப்பினால், இன்று நயினாதீவு அம்பாளுக்கு ஏற்பட்ட அனர்த்தத்தின் பரம்பல் - உலகத்தின் எப்பாகத்திற்கும் தெரியக் கூடிய அளவிற்கு 'அருட் பிரசாரம்' நிகழுகிறது. தமிழகத்து மக்களின் பண்பாட்டுணர்வும் பக்தியுணர்வும் இறையுணர்வும் இன்று பொங்கி யெழுந்துள்ளன.

**தமிழக அறிஞர்கள்**

சிவானந்த சரஸ்வதி, கி. வா. ஜகந்நாதன், பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன், நா. பார்த்தசாரதி, குன்றக்குடி அடிகளார், யோகி சுத்தானந்த பாரதியார், கிருபானந்த வாரியார் சுவாமிகள் (2 - 9 - 1955) காஞ்சிபுரம் மகாசந்நிதானம் ஸ்ரீ ஞானபிரகாச தேசிக சுவாமிகள், பகவதி (22 - 2 - 1955), பண்டிற் சேதுராமன் (1951) எம். நரசிம்மன் (11 - 3 - 1951) என்போர் நயினைக்கு வருகை தந்தோர்களாவர்.

*எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை*
*என்னினத்தார் வாழ் வொன்றே கருதவில்லை*
*உனக்கெல்லாவுயிர்களுமே சொந்தமென்ற*
*உண்மையை நானொரு போதும் மறந்ததில்லை*
*சினங்கொண்டு தீங்கிழைக்குந் தீயர்தாமும்*
*சீலமுற வேண்டுமென்றே வேண்டுகின்றேன்*
*தனக்கொரு ரொப்பில்லாத் தாயே இந்தத்*
*தாரணியில் சாந்தியையே தருவாய் நீயே* *(இராமச்சந்திரன்)*

என்று 'சினங்கொண்டு தீங்கிழைக்கும் தீயர் தாமும் சீலமுற வேண்டு' மென்று வேண்டுதலே, இன்று எம்முன்னுள்ள பாரிய பணி. அருளொழுகுகண்ணும் அழகொழுகு வதனமும் எழில் நகையும் கொண்டுள்ள அம்பிகையின் ஆலயப் பிராயச்சித்தம் வெகுவிரைவில் நடைபெற்று, தீபமேற்றப்பட்டு பூசைகள், அபிஷேக ஆராதனைகள் எல்லாம் வல்ல ஸ்ரீமகா நாகராஜேஸ்வரி அம்பிகையின் ஆஞ்ஞையினை நாடி நிற்பதல்லாமல் வேறென்ன பணி

நம்முன்னுள்ளது. அம்பிகைக்கு அடியார்களது ஆதரவும் உத்வேகமும் மென்மேலும் அணிசேர்ப்பதாகுக. அம்பிகையின் அருளாட்சி அகில மெங்கும் பரவுவதாகுக!

**இக்கட்டுரை எழுத உதவிய உசாத்துணை நூல்கள்**


1) *கோமுகி* - மணிபல்லவ கலாமன்றம், நயினாதீவு, 1972.

2) *நயினை நாகபூஷணி கவிஞர் நா.க. சண்முகநாதபிள்ளை*

3) *ஆபுத்திரனும் அமுத சுரபியும்* - சி.ஆ. கத்திரித்தம்பி, 1980.

4) *இலங்கையின் புராதன சைவாலயங்கள்* - நயினை நாகேஸ்வரி குல. சபாநாதன், 1962.

5) *திருக்குட முழுக்குப் பெரு விழாமலர் - பாகம் 11*, 28 - 08 - 1983.

6) *திருக்கேதீச்சரம் திருக்குடத்திரு மஞ்சனமலர்* - கட்டுரை - 'நயினாதீவு நாக பூஷணியம்மன் கோயில்' - தமிழடியான், 4 - 7 - 1976, பக்.204.

7) உலக இந்து மகாநாடு *ஆத்மஜோதி சிறப்பு மலர் கட்டுரை* - 'இந்து சமய வளர்ச்சிக்கு நயினாதீவு அளித்த பங்கு', பக்.130.

8) *நயினை நாகபூஷணியம்மை பிள்ளைத்தமிழ்*, வ. சிவராசசிங்கம், 1977.

9) *அபிராமி அந்தாதி* - அபிராமிப்பட்டர்.

10) *தேர்த்திருப்பணிச் சபை மலர்* - 1957.

11) *நாகேஸ்வரி வழிபாடு*, கலாநிதி சி.க. சிற்றம்பலம்.


***(நன்றி: தினகரன் வார மஞ்சரி, 18.05.1986)***

## 6

# குடமுழுக்குக் காணும் சக்தி பீடம்

## நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்

உலகமாதா, ஜெகன்மாதா என்றெல்லாம் அழைக்கப்படும் ஆதிபராசக்தி அம்பாள் உமை, சிவகாமி, அபிராமி. புவனேஸ்வரி, அன்னபூரணி, நாராயணி, மனோன்மணி, பூரணி, புராதரி, சுமங்கலி, சுதந்தரி, புராந்தகி, திரியம்பதி, காளி, சேஷ்டை, ரௌத்திரி, மாகாளி, பத்திரகாளி, காமேஸ்வரி, மகேஸ்வரி நீலாயதாட்சி, விஜயலெட்சுமி, கனகலெட்சுமி, சந்தானலெட்சுமி, மகாலக்ஷ்மி, அழகிய நாயகி, வண்டார் குழலி, அகிலேஸ்வரி, மாதுமை, கௌரி, ஒப்பிலா முலையாள், வண்டார் குழலி, அகிலாண்ட நாயகி, தறுங்குழல் நாயகி, மங்கள நாயகி, அறம் வளர்த்தாள், பெண்ணினல்லாள், நயனப்பூங்கோதை, மதுரபாஷினி, போகமார்த்த பூண்முலையாள், மட்டுவார் குழலி, காதாட்ஷி, விசாலாட்சி, மீனாட்ஷி, சிவசங்கரி, பூமாதேவி, வீரமாகாளி என்றும் இன்னும் பல்வேறு திருநாமங்களோடும் திருவருள் பாலித்து வருவது சைவமக்கள் அறிந்து தெளிந்த விடயமேயாகும். 'கற்பகவல்லி' எனும் பாடல் வெகு பிரசித்தமானது. அதுபோலவே 'எனக்கென்றோர் தனிவரம்' என்ற பாடலும் வெகு பிரசித்தம். வாரீர்! வாரீர்! அம்பாள் புதுமையைக் காண வாரீர்! வாரீர்!

வட இலங்கையிலுள்ள சக்தி பீடம் - ஸ்ரீ புவனேஸ்வரி பீடம் - என்பது உலகப் பேருண்மை. கல்லிலே வணங்கப்படும் சைவசமயக் கடவுளர்கள் - குறிப்பாகப் பெண் தெய்வங்கள் ஆன்மாக்கள் மீது கொண்ட அளப்பருங் கருணையினால் உலகின் பல்வேறு தேசங்களிலும் மானுட வடிவிலும் அவதாரமெடுத்துத் தத்தம் பரத்துவ மேன்மையை வெளிக்காட்டி ஒளிவீசி நிற்கின்றன. இப்பண்பும் மகிமையும் நமது இந்து சமயத்திலேயே வெகு அதிகமாயுள்ளமை பிரமிப்பையும் பூரிப்பையும் ஏற்படுத்துகிறது. டென்மார்க்கிலுள்ள பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி உபாசகி, ஏழாலை கலபாவோடை ஸ்ரீ வசந்த நாகபூஷணி உபாசகி, வெள்ளவத்தை பெர்னாண்டோ வீதி அன்னை, மோதரையிலுள்ள வீரன் (ஸ்ரீ வீரபத்திர) சுவாமி என்று நாம் வாழும் காலத்திலேயே நம் கண்முன்னாலே நிகழும் அற்புதங்கள் அளவிடற்கரியன. இத்தனைக்கும் மூலகாரணியாக அமைந்து அருள்சுரந்து கீர்த்தியுடன் மிளிரும்

திருக்கோவில்களே நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருக்கோவில், செல்வச்சந்நிதி முருகன் கோவில், திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், நகுலேஸ் வரம், கதிர்காமம், கோயிற்குளம் ஸ்ரீ அகிலாண்டேசுரர் திருக்கோவில், மாத்தறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் என்பன. மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புகள் பொருந்தியவை. சைவாலயங்கள்.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் தனிப்பெருங் கருணைகளுலொன்று அம்பாள் நாகமாகவே காட்சியளிக்கும் பூர்விகம்; தொன்மை; இயல்பு. மணித்தீவிலே கருவறையிலே மூலமூர்த்தியாக இன்றும் இருப்பவை ஐந்தலை நாகப் பிரதிஷ்டையும், அம்மன் திருவுருவமுமாகும். இன்றும் உயிர்ப்புடன் தனது இருப்பையும் திருவருட்டிறத்தினையும், உலகளாவிய முறையில் விகசித்து அருளாட்சி புரிகிறாள் எம் குலதெய்வமான அம்பாள் ஸ்ரீ நாக பூஷணி. (நயினை அம்பாளின்) மகாமேன்மையும், திருவருள் மேன்மையும் குறித்த சான்றுகள் இன்றும் அம்பிகையின் மெய்ம்மையையும் உண்மை யையும் வெகு உறைப்புடன் நிரூபித்துள்ளன.

நயினை யாத்திரை வெகு பக்திபூர்வமானது; நேர்த்திகளுடன் சம்பந்தப் பட்டது; நம்பிக்கை, பயபக்தி நிரம்பியது. நயினைத் திருத்தல வரலாறு வெகு இயற்கை வாய்ந்ததுடன் இன்றும் அம்பாள் அருளாலே மீளவும் காட்சிப்படுத்தப் படுவது. நாகம் அம்பாளைப் பூக்கொண்டு வழிபட அனலை தீவிலிருந்து கடல்மார்க்கமாக வந்த பொழுது கருடனொன்று அதனை எதிர்த்து நின்றது. பாம்புக்குப் பகை கருடன்; பகைப் பொருட்களைச் சுட்டி பக்குவப் படுத்திய ஆலய வரலாறு நயினை அம்மனின் அற்புதங்களுளொன்று. பாம்பு சுற்றிய கல், கருடன் கல், சற்சாசனங்களிரண்டு, தன்னை நேரிலா நின் உரு என்னும் ஐந்து பிரத்தியட்சமான சான்றுகள் நயினைத் திருத்தலத்து மகா மேன்மையை இன்றும் எடுத்தியம்பியவாறுள்ளன. இச்சாட்சிகளோடு அடியார் களுக்கும் பேரறிஞர்களுக்கும் கவிஞர்களுக்கும் புதிர்பொதிந்த தெய்வ மாகவே அருள் மழை பொழிகிறாள் நயினை ஸ்ரீ நாகபூஷணி. அமுதசுரபி, அன்னதான சபை, 108 அடி நுழைவாயில் இராஜகோபுரம், உள்மண்டபத் தளம், தெற்கு வீதி இராஜகோபுரம், தீர்த்தக் கேணியிலமையும் கைலைக் காட்சி, வசந்த மண்டபம், தேர்முட்டி, இளைப்பாற்று மண்டபம், கெம்பீர நந்தி, உயிர்ப்பாம்பாகவே தோன்றும் நாகாம்பிகைகள், நவக்கிரக சந்நிதி, நாக சாந்தி மண்டபம், வன்னி (தலவிருட்ஷம்), மூலஸ்தானத்திலுள்ள வாயு பட்சணி நாகம், நித்திய அன்னதானம் நிகழும் திருக்கல்யாண மண்டபம், கைலாய வாகனம், நாக பாம்பு வாகனம், காராம்பசு, தாமரைப் பூவாகனம், எழுந்தருளி அம்பாள் சிரசிலே அணியும் ஐந்தலை நாகம், நந்த கோபாலர்கள்,

நேர்த்திக்குரிய கரும்பாம்பு, செம்பாம்புப் பொருட்கள், ஸ்ரீ சக்கரம், தாலி என்பன நயினை நாகம்மாளின் ஆலயச் சூழலிலே மனிதர்கள் - அடியார்கள் தமதிருகண் களினாலும் கண்டு தரிசித்துக் களிபேருவகை கொள்ளத் தகும் விடயங் களாகும். தனிப்பெருஞ்சிறப்பு வீதியிலுள்ள வேப்பமரங்களாகும்.

வேப்பிலை நாயகியாகிய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கன்னிப் பெண்களது திருமணத் தடையையும், நாக தோஷத்தையும் நீக்கியருள் புரியும் அற்புதத் தாய். முதலில் நாகதோஷ நிவிர்த்தி பின் திருமணம், அதன் பின் சிற்புத்திரப் பேறு அதன்பின் பரிபூரண நிறைவாழ்வு என்று அருள்சுரந்து அன்பர்களது மனவேதனையையும், மனக்குறைகளையும் தீர்க்கும் சர்வ ஜீவதயாபரி நயினைஸ்ரீ நாகபூஷணி அம்பாள். உலகிலேயே எந்தப் பெண்ணும் தமக்குத் திருமணம் வேண்டும் என்று சொல்லாத மானிட இயல்பும் திருமணம் செய்வதால் இறைவருடனேயே லீலைகள் புரிவோம் என்று வாழ்ந்து காட்டிய ஆண்டாளையும், மாணிக்கவாசகரெனும் தலைவி யையும் (திருவாசகத்தினூடாக) நாம் கண்டு கொண்டுள்ளோமல்லவா? ஆனால் நாகம்பாளையே மகப்பேறு வேண்டித் திருக்கோயில் உண்டிய லினுள்ளே ஒரு சிங்களப் பெண்மணியின் மனமார்ந்த வேண்டுதல் திருமுகம் - கடிதம் கிடைத்துள்ள பிரார்த்தனையையும் இந்நாட்டு அதிமேதகு ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்புச் செயலாளர் உட்பட பக்தர்களும் நன்கறிவர். இவை முற்றிலும் உண்மை, முக்கால உண்மை.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திருக்கோவில் மகாகும்பாபிஷேக, பெருஞ்சாந்திக் குடமுழுக்கு வைபவம் ஜனவரி மாதம் 29.01.2012 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 12 மணிக்குள் வெகு பக்திபூர்வமாக இடம்பெற வுள்ள செய்தி மெய்யடியார்களுக்கு மனமகிழ்வைத் தருவதாகும். எண் ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு 24.01.2012 முதல் 28.01.2012 மாலை 6 மணிவரை இடம்பெறவுள்ளது. உலகம் போற்றும், வணங்கும் திருக்கோயி லான நயினைஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருப்பணிகளை பல்வேறு முட்டுக்கட்டைகளுக்கும் மத்தியில் முன்னெடுக்கும் அறங்காவலர் சபைத் தலைவரையும், உறுப்பினர்களையும் பாராட்டாதோர் இல்லையெனலாம்.

*"அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்."*

**இறைவனைக் கும்பத்தில் ஆவாகனம் செய்து பூஜிப்பது ஏன்?**

'கலசம்' ஒன்றைப் பிண்டம் (உடம்பு) ஆகக் கொண்டு (பாவனை) வழிபாடே குடமுழுக்கு.

1. கும்ப வஸ்திரம் - தோல்
2. சிவந்த நிறம் ஏறப்பூசிய மண் - இரத்தம்
3. கும்பமாக்கப்பட்ட பொருள் - (மண்) - மாமிசம்
4. கும்பத்தில் நிறைக்கப்பட்ட சலம் - மேதை (நிணம்)
5. கூர்ச்சம் (தர்ப்பை) - குடுமி - எலும்பு
6. சுற்றப்பட்ட நூல் - எழுபத்தீராயிரம் நரம்பு
7. உள்ளே இடப்பட்ட இரத்தினம் (பொன், புட்பம்)- வீரியம்
8. செபிக்கப்பட்ட மந்திரம் - உயிர் (பிராணன்)
9. ஆசனம் - நெல், அரிசி, எள்ளு, பயறு, உளுந்து, துவரை, கோதுமை
10. தேங்காய் - மலை
11. மாவிலை (மயிர்) - சடை

என உவமிக்கப்படும். உருவகம் செய்யப்படுவதே குடமுழுக்கு எனப்படும் மகாகும்பாபிஷேகம்; பெருஞ்சாந்தி விழா.

*(ஆதாரம்: நயினாதீவு - தம்பகைப்பதி அருள்மிகு*
*ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி ஆலய*
*மகாகும்பாபிஷேகச் சிறப்பு மலர், 24- 03- 2011)*

7

# நயினை ஸ்ரீ நாகபூஷணியின் பத்ம பாதங்களில் ஆனந்த அருவியுடன் மலரிட்ட அந்தண திலகம்

''மந்திர புஷ்பாஞ்சலி சமர்ப்பயாமி'' என்று நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பத்மபாதங்களில் ஆனந்த அருவி நீருடனும், விக்கல் மேலீட்டால் குரலிலே தோன்றும் நடுக்கத்துடனும், பக்திக் கனிவுடனும், குழைவுடனும் தெரிந்தெடுத்த புஷ்பங்களாலே வெகுலாவகமாகத் தமது கைவிரல் பத்தினையும் பௌவியமாக ஒவ்வொன்றாக விரித்து, புஷ்பாஞ்சலியை நிகழ்த்திய சிவாச்சாரிய திலகம் நயினை அம்மன் மஹோற்சவ குருமணி, சிரேஷ்ட சிவாசாரியார் சிவஸ்ரீ வை.மு. பரமசாமிக் குருக்கள் சிவசாயுச்சிய பதமெய்திய செய்தியறிந்து நிலை தளர்ந்தேன்; பெருங்கவலையுற்றேன்; கலங்கினேன். மனக்கண்முன் நின்ற காட்சி: குருமணி தமது இரு கைகளி னாலும் தெரிந்தெடுத்த புஷ்பங்களை எடுத்துக் (கூப்பிய கைகளுடன்) அம்பிகையின் எழிலொழுகும் திருவதனத்தையே உற்று நோக்கியவண்ணம் அர்ச்சனை மந்திரத்தைக் குழைவுடன் உச்சரிக்கும் தோற்றமேயாம்.

நயினை ஸ்ரீ நாகபரமேஸ்வரியின் மஹோற்சவ கால வசந்த மண்டப பூசை என்பது தேவலோகக் காட்சியே எனலாம். ஸ்ரீ நாகபரமேஸ்வரியின் அழகு மிகு திருக்கோலமும் அம்பாளின் அலங்காரமும், ஐந்தலை நாகத்தின் எடுப்பும், தரிசிக்கும் பக்தர்களின் மெய்ப்பாடுகளும் அதற்கும் மேலாகக் குருமணி சிவஸ்ரீ வை.மு. பரமசாமிக் குருக்களது கெம்பீர நடையும், அம்பாள் முன் அவரது குழைவும், பணிவும், பக்தியும் கூடிய மந்திர பாராயணமும் மெய்சிலிர்க்கப் பண்ணி விடுவதுண்டு. இக்காட்சியின் பலன் அனைவருக்கும் ஆனந்த அருவிநீர் பெருகுவதேயாம். விவரித்துச் சொல்ல முடியாததோர் தெய்வீகமும், அருள்நிலையும் எமது சிவாச்சாரியார் சிவஸ்ரீ வை. மு. பரம சாமிக் குருக்கள் ஐயாவின் செயற்பாடுகளினாலே கோயிலினுள் உண்டாகி விடுவதை என் அனுபவமாகவே மஹோற்சவ காலங்களிலே கண்டிருக்கிறேன். சிவஸ்ரீ பரமசாமிக் குருமணியின் சிந்தனை, செயல், திட்டங்கள், நினைவு, எண்ணம் அத்தனையும் நாகம்மாளின்பாற்பட்டே அமைந்தன. பக்தித் தன்மையை வளர்க்கும் பான்மையிலேயே அமைந்தன. நிரம்பிய ஆகம அறிவும், விதிமுறைகளும், பூஜாவிதிமுறைகளும், புஷ்ப விதியும் ஐயந்திரி

பற அறிந்திருந்த தன்மையினாலேயே சமய வழிபாட்டின், ஆலய வழி பாட்டின், கோயிற் பண்பாட்டின் பயனைத் தமது தோற்றத்தினாலும் அர்ச்ச னையினாலும், உபசரனையினாலும் அம்பிகை அடியார்களிடத்திலே பசு மையாக நிறுத்தியவர் சிவஸ்ரீ பரமசாமிக் குருக்கள் ஐயா ஆவார். நயினை அம்பாளது உயர் திருவிழாவிலே கலந்துகொண்ட அடியார் எவரும் குரு மணியின் பௌவியமான, பக்தி நிறை கிரியாமுறையைத் தரிசித்துப் பரிபூரண நிறைவு பெற்றே திரும்புவர். எந்தவொரு கிரியையானாலும் தெளிவுடனும், முறை பிசகாமலும், பரிபூரணமான நிறைவுடனும் செய்து முடிக்கும் 'கிரியா வித்வம்' சிவாச்சாரியார் பரமசாமிக் குருமணியிடத்து நிறைந்திருந்தது. பத்ததி முறைமையிலே நிரம்பிய தாடனப் பயிற்சி இருந்தமையுடன் நயினை நாகம்மையின் ஆலயத்திலே நடைபெற்ற நான்கு மகா கும்பாபிஷேகங் களிலும் பிரதம சிவாச்சாரியார் என்ற தலைமைக் குருமணியாயமைந்து நிறைவேற்றிய ஆளுமையும், இதர எத்தனையோ ஆலயங்களிலேயும் பிரதம குருமணியாயப் பங்கேற்றுச் சிறப்பாக மகாகும்பாபிஷேகங்களை நிறைவேற்றி வைத்த சமத்காரமும் எமது பரமசாமிக் குருமணியை நிறைந்த பூரணசிவாச்சாரிய திலகமெனப் பிரகாசிக்க வைத்தன. ஆகமவிதிமுறைகளைத் தமது பூசைகளின்போது மட்டுமன்றி, அருளுரை, ஆசியுரைகளின்போதும் மகாகும்பாபிஷேக மலர்களிலும் கருத்து வளத்துடன், தத்துவார்த்த ரீதியுடன் எழுதும் பேராற்றலும் கைவரப்பெற்றவர் சிவஸ்ரீ வை.மு. பரமசாமிக் குருக்கள் ஐயா அவர்கள். இத்தொடர்பில் எம்மையும், எமது கல்வி, அறிவு, வழிபாடு, பிரார்த்தனை, விதிமுறை திருமுறையீடுபாடு, தத்துவப் பொருள் அறிதல், வடமொழி மந்திரத்தில் ஈர்ப்பு, உச்சரிப்பு முறை, பேச்சு; விரிவுரை இவை யனைத்திலும் நயினைக்குருமணிகளாய் மிளிரும் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள், சிவஸ்ரீ ச. பரமேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ ஜம்புகேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ கைலை வாமதேவக் குருக்கள், சிவஸ்ரீ ச. பாலுமணிக் குருக்கள், சிவஸ்ரீ பா. கணேசக் குருக்கள், சிவஸ்ரீ பால. கைலாசநாத சர்மா மற்றும் தற்போதைய மஹோற்சவ குருமணி சிவஸ்ரீ ப. முத்துக்குமாரசாமிக் குருக்கள் ஆகியோரின் புலமை வீச்சும், உச்சரிப்பு மகோன்னதமும் செல்வாக்குச் செலுத்தியுள்ளமையை இச் சந்தர்ப்பத்திலே வெளிப்படையாகவே ஆவணப்படுத்துதல் பொருத்தமாகும். தளம்பாத வைதிகமரபும், விதிமுறையும் அம்பாள் ஆலயத்திலே எம்மைப் புடம் போட்டன. மயக்கம் இல்லாத சமய நம்பிக்கை எம்மில் உண்டா வதற்குக் காரணமாயிருந்தவர்களே இச்சிவாச்சார்ய திலகங்களேயாம். இவர்கள் வழிவந்த பிற்காலச் சந்ததியினரும் இன்று தமது தகைமைகளையும்

ஆசாரங்களையும் விதிகளையும் பேணிவளரும் தன்மை பெரிதும் மன ஆறுதல் தரும் விடயமாய் உள்ளது.

சிவஸ்ரீ பரமசாமிக் குருக்களுக்கு முன்னதாக நயினை அம்பாள் மஹோற்சவ குருமணியெனத் திகழ்ந்தவர் சித்தங்கேணிச் சிவஸ்ரீ சிவசாமிக் குருக்கள் ஆவார். சிவாகம இலட்சணங்களனைத்தும் பொருந்திய சிவசாமிக் குருக்கள் அவர்களது யாகசாலை அர்ச்சனைகளை அடியேன் நேரிலே சிறுவயதிலே அவதானித்து வந்துள்ளேன். எதுவித அசைவுமின்றி அம்பாளின் திருமுகத்தையே நோக்கிய நோக்காகக் கொண்டு தமது திருவாயினால் வேதபாராயணம் நிகழ்த்திய தெய்வீகக் காட்சி இன்றும் உணர்வில் நிழலாடுகிறது. ஞாபகமாயுள்ளது. பெரும்பக்தியுடன் மதித்து நீள நினைந்துருகத்தக்கது. சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள், சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ கைலை வாமதேவக் குருக்கள் ஆகியோரது மந்திர அர்ச்சனைகள் எமது காதுகளிலே இன்றும் ஒலித்தவண்ணமேயுள்ளன. திரும்பத் திரும்ப நாமும் மந்திரங்களைச் சிவாச்சாரியப் பெருமக்கள் போலவே சொல்லி மகிழும் தன்மைக்கு இவர்களே பேராசான்கள். செவிவழிவந்த மந்திர இன்பம் தனி இன்பம் பயப்பதன்றோ? ஆனால் சிவஸ்ரீ பரமசாமிக் குருக்களது 'சிவாச்சார்யக் கோலம்' ஏனையோரிடம் காணப்படவில்லை என்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். 1008 உருத்திராக்க மணிகள் கொண்ட மாலையை அணிந்துகொண்டு கொடியேற்ற நிகழ்வுகளை நடத்திய பெரும் சிவாச்சாரியார் சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்களேயாவார். அவரின் தனித்துவமிக்க 'சிவாச்சார்யப் பொலிவு' அவருக்கேயுரிய ஆகம அறிவு விரிவைப் பறைசாற்றுவதாயமைந்தது. நிலை தளராத - நிலையிற் றழம்பாத சிவாச்சாரியாராகவே இறுதிவரை வாழ்ந்து காட்டியவர் குருமணி சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள் அவர்கள். அவரது சீடர்கள் அனைவரும் தகைமைமிகு சிவாச்சார்யராகவே மிளிருவர். குறிப்பாக இன்று நயினை அம்பாளின் மஹோற்சவ குருவாக விளங்கும் சிவஸ்ரீ ப. முத்துக்குமார சாமிக் குருக்கள் அவர்கள் தமது தந்தையாரிடத்திலேயே பயின்று தேறியவர் என்றால் அதில் மிகையில்லை.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலிலே சிவஸ்ரீ வை.மு. பரமசாமிக் குருக்களை எப்போதும் நினைவுபடுத்தும் அம்சம் அவராற் செய்து இன்றும் கோயிலில் பூசைக்குரியதாகத் திகழும் அஸ்திர தேவர் திரிசூலவடிவமாகும். மகோற்சவ தினங்களிலே யாகசாலையில் பூசைக்கென இடம் பெறுபவர் இந்த அஸ்திரதேவரே ஆவார். தீர்த்தக்கரையிலே அஸ்திர தேவருக்கே தீர்த்தமாட்டு வைபவம் இடம்பெறும். திரிசூலமாகவே தோன்றும் அவ்வடிவத்திற்கு எமது குருமணி சிவஸ்ரீ வை.மு. பரமசாமிக் குருக்கள்

ஐந்தலை நாகவடிவமொன்றைப் பொருத்தியமைத்து பூசையிலே வைத் துள்ளமை இன்னும் காலாதிகாலம் பல்லூழிக்காலம் அவரை நினைக்கவைக்கும் தன்மை சுட்டியுரைக்கப்பட வேண்டியதொன்றாகும்.

குருக்கள் ஐயா அவர்கள், எழுதி வெளியிட்ட நூல் **சிவார்ச்சனா சந்திரிகா தீபிகை** என்பதாகும். சிவாகம முறைமையிலமையும் பூசை அர்ச்சனைகளுக் குரிய பத்திர புஷ்பங்கள், புஷ்பங்கள் குறித்த நூலாக இந்நூல் மிளிர்கிறது.

ஸ்லோகங்களின் தாற்பரியங்களும், பத்திரங்ளின் வகைகளும் புட்பங் களின் வகைகளும் பெயர்களும் எல்லாம் இந்நூலிலே எழுதப்பட்டுள்ளன. என்ன வகையான பூக்கள் எவ்வெத் தேவதைகள், தெய்வங்களுக்குரியவை, எவ்வெவ் மலர்கள் தெய்வங்களுக்கு சாத்துவதற்குகந்தவை - பயன்கள் எவை என்னும் பல்வேறு வகையான கருத்துக்களையும் இந்நூலிலே சிவஸ்ரீ அவை. மு. பரமசாமிக் குருக்கள் நிரற்படுத்தி நூலை ஆக்கியளித்துள்ளார். ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏத்தல் ஆகிய அந்தணர்களுக்குரிய கடமைகளைச் செம்மையாகவே நிறைவேற்றியவர் சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள். யாழ். மண்ணின் மாண்புகளிலொன்று என்று இன்றும் உலகம் போற்றும் வெளியீடு - நூல் - பஞ்சாங்கமாகும். பஞ்சாங்கம் பார்க்கும் மரபு சிவாச் சாரியார்களுக்கும் ஆதீனங்களுக்கும் கோயிலாளர்களுக்கும் அறங்காவலர் களுக்கும் உண்டு. அதற்கும் சிவாச்சாரியார்களையே நாடிவர வேண்டும். இன்னு மொன்று 'ஐயந் தெளிதல்' என்னும் விடயமாகும். அதாவது ஆகம நெறி முறை, ஆசார முறை, நியதி எப்படிச் செய்வது, உலக நியதி, வேதநெறி, ஆகம நெறி, சாந்தி எப்படி? இவையனைத்தும் தெளிவாகவே எடுத்துக் கூறத்தக்க 'வித்துவப் புலமை', 'தெளிவு' என்பன சிவஸ்ரீ வை. மு. பரம சாமிக் குருமணியிடத்திலே அமைந்திருந்தன. அவ்வகையில் பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள், சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள், சீதாராம சாஸ்திரிகள், கொக்குவில் வெங்கடேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ ப. கோபால கிருஷ்ணன் (பேராசிரியர், கலாநிதி), சிவஸ்ரீ இணுவில் தா. மகாதேவக் குருக்கள், சிவஸ்ரீ வல்வை ப. மனோகரக் குருக்கள், நீர்வேலி இராஜேந்திரக் குருக்கள் என்னும் வரிசையிலே எமது குருமணி வை.மு. பரமசாமிக் குருக்கள் வைத்து எண்ணத்தக்கவர் என்பது ஒரு தலை. தலை சிறந்த ஞான குருவெனத் திகழ்ந்த எம். குருமதி சிவஸ்ரீ வை.மு. பரமசாமிக் குருக்களது தடம் விட்டுச் சென்ற முன்மாதிரிகளான, **மென்மைநிறை அர்ச்ச னைத் திறன் - குழைவுடனான பக்தி - கிரியாபாத ஒழுங்கு - அந்தணக் கோலம் - ஆகமத் தெளிவு** இவற்றைப் பேணுவதிலேயே அவரது ஆத்மா நிறைவு பெறும். குருமணியின் முன்மாதிரிகளை வளர்ப்பதே அவருக்குச் செய்யும் அஞ்சலியுமாம். வணக்கம்.

# 8

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்

### சர்வமத சந்நிதியாகத் திகழும் நயினைப் பதி

அழியாத கன்னிகையாய் விளங்குபவள் நாபூஷணி வித்தின்றி விளை மூலமாகவும் திகழ்பவள். அழகுக்கொருவரும் ஒவ்வாத வல்லியெனமிளிர்பவள்.

அலை கடலாணையைத் தன்னகத்தே கொண்டு, ஐந்து தலை நாகத்துள் பஞ்சபூத அடக்கத்தினை இயைவித்து நிற்பவள். அருளைச் சுரந்தளித்து மருளைக் களைபவள். வன்நெஞ்சப் பேதையரை வைது அநுக்கிரகம் செய்யும் ஆற்றல் பெற்று விளங்குபவள்.

1986 மார்ச் மாதம் 3 ஆம் திகதி நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு ஏற்பட்ட அக்கினி அனர்த்தம் 1958 ஆம் ஆண்டுக்குப் பின் 28 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு நிகழ்ந்த கோர அழிப்புமுயற்சி யெனலாம்.

### ஐந்தலை நாகவுரு

இறைவனும் இறைவியும் சிவ ஐக்கியமான பீடமே நயினை என்பது அறிஞர் கருத்து. மூலஸ்தானத்தில் இருக்கும் ஐந்தலை நாகவுருவின் அடிப்பாடம் வளர்ந்து செல்வதாகும் அதன் வால்முனைப்பில் லிங்கப் பிரதிஷ்டை விளங்கு வதாகவும், சமய நம்பிக்கை கொண்ட ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

வெட்ட வெட்டத் துளிர்விடும் மரம் போல அம்பிகையும் அனர்த்தத்தின் பின் ஆனந்த சொரூபியாக வளர்ந்து பொலிவு பெற்று விளங்குவாள் என்பது அனுபவ உண்மை.

தொண்டர்களது புனிதமான பணியும் பெற்ற தரும பரிபாலனசபை யாரின் ஆன்மிகத் தொண்டுகளும் அம்பிகையின் உயர் தனிச் சிறப்பினை உலகுக்குணர்த்துவன.

காலத்தாலும் தல விஷேடச் சிறப்பாலும் பெருமை பெற்றுத் திகழும் இத்தலத்தின் மெய்கீர்த்தியைச் சீரழித்துவிட முயல்பவர்கள் பாழ்நகரக் குழிக்குள் வீழ்ந்து பதைப்புறுவர். இது சர்வ நிச்சயம்.

**அமைப்பு வேலை**

நயனை ஸ்ரீ நாகபூஷணிக்கான ஆலயத்தினை 1788 இல் இராமலிங்கம் இராமச்சந்திரன் கட்டினார். அவர் வழிவரும் ஆண் சந்ததியினர் இன்றும் பரம்பரை முகாமையாளர்களாகவுள்ளனர்.

1935 இல் கிழக்கு வாயில் பிரதான கோபுரம் கட்டப்பட்டது. 1951 இல் விமானம் புனரமைத்து சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகம் நிகழப்பெற்றது.

அம்பாளுக்கான புதிய சித்திரத் தேர் 8-7-1957இல் வெள்ளோட்டம் விடப்பட்டது. வணிக வரலாறும் சமய வரலாறும் இணைந்த சாசனமாகவும் ஆதாரமாகவும் 12 ஆம் நூற்றாண்டு கால பொலனறுவைக் காலச் சாசனம் இங்குள்ளது.

கோவிலுக்கு அருகே வடக்குக் கடலில் இன்றும் வெளிப்படையாகக் காணப்படும் கருடன் கல், பாம்பு சுற்றிக் கல் இரண்டும் இத்தலத்தின் பூர்விகக் கதைகளினதும் கர்ண பரம்பரைச் செய்திகளினதும் உண்மையினை எடுத்து விளக்கி, பக்தி உணர்வை உண்டு பண்ணுவனவாய் உள்ளன.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் தலவிருட்ஷம் வன்னி மரம்.

அம்பாளின் தேரிலே அதன் சிற்பங்களினூடே ஆலய வரலாற்றுச் சம்பவங்கள் அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

நாகம் பூசித்து நின்ற இத்தலம் நாகேஸ்வரம் எனவும் பெயர் பெறும்.

**மணிபல்லவம்**

கலைக்களஞ்சியம் தொகுதி 8 இல் 'மணிபல்லவம்' என்ற பெயருக்கு அரியதொரு விளக்கமுமுண்டு.

கி.பி. 2 ஆம் நூற்றாண்டு அளவில் இத்தலத்திற்கு உண்டான பெயரே 'மணிபல்லவம்.'

நயினையில் சக்திபீடம் (ஸ்ரீ புவனேஸ்வரி பீடம்) நிறுவியவன் இந்திரனே என்பது மணிமேகலையால் உரைக்கப்படுகிறது.

**புத்த பகவானின் விஜயம்**

அதன் பின்னர்தான் (இந்திரனுக்குப் பின்னராகவே) புத்த பகவான் நயினா தீவுக்கு வந்தார் எனக் கூறப்படுகிறது.

புத்தபெருமான் கி.மு.563 இற்கும் கி.மு.483 இற்குமிடையில் தமது யாத்திரை காரணமாக நச்சதீவைத் தரிசித்து நாகவழிபாடியற்றியிருக்க

வேண்டும். (நாகதீவு எது என்பது பற்றிய மயக்கம் வரலாற்றாசிரியர் களிடையே உண்டு.)

சாவக நாட்டு மன்னன் புத்த பெருமானது பாத பீடிகையைத் தரிசிக்க வந்ததாக மணிமேகலை கூறும் பர்மாவிலிருந்து தர்மசோக மகாராசா புத்திர சோகத்தால் வருந்தி நாகதீவுக்கு வந்தார் என்றும் கூறப்படுகிறது.

பாண்டவருள் ஒருவரான அர்ச்சுனன் நாககன்னியை மணம் செய்து பப்பிரவாகனைப் பெற்றான். பப்பிரவாகன் சல்லி என்ற காணிப் பெயர் இதனை உறுதிப்படுத்துகிறது. இன்றுள்ள ஆலயம் அமைந்துள்ள காணிப் பெயர் பப்ரவன் சல்லியாகும்.

புத்தபிரான் சரித்திர காலந்தொட்டே ஏற்பட்ட நாகவழிபாட்டை ஆராய் வதற்காகவும், அதைத் தானும் வழிபடுவதற்காகவுமே நாகத்தீவுக்கு வந்தார் எனவும் கருதுவோருமுளர்.

### சகிப்புத்தன்மையும் பிற மத ஆலயங்களும்

போர்த்துக்கேயர் ஆலயத்தை ஆலயத்தை இடித்து பொருள்களைச் சூறை யாடினார். இக்காலம் கி.பி.1620 கி.பி.1621 இற்கும் இடைப்பட்ட காலமாகலாம்.

ஒல்லாந்தர் காலத்தில் நயினையில் வாழ்ந்தோர் ஒல்லாந்தர்களது சமயத்திற்கு வழங்கிய ஆதரவால் கி.பி. 1792 கால கூட்டத்தில் நாகபூஷணி அம்பாள் ஆலயம் தப்பியது.

ஒல்லாந்தர் காலத்தில் நயினையில் புரட்டஸ்தாந்து தேவாலயம் பள்ளி வாசல்கள் அமைக்கப்பட்டன. சைவ மதம் காட்டும் **சகிப்புத் தன்மையினால்** நயினாதீவிலே பிற மதத்தினர் ஆலயங்கள் அமைக்க இடம் ஏற்பட்டது. இதனை இன்று சிலர் நயினை மக்களின் பலவீனம் என்று கூற முற்படுவது எடுபடாத கூற்றாகும்.

எத்தனை இடுக்கண் விழையினும் பாதிப்புற்று அதன் பின்னர் மீண்டமை யன்றி நயினை மக்கள் நலிவுகளினால் துவண்டு கிடந்தவர்களல்லர்.

### புத்த கோயில்

1947 இல் தற்போதுள்ள பெரிய புத்த கோயில் கட்டப்பட்டது. 1954 இல் புத்தசிலை பர்மாவிலிருந்து கொண்டு வரப்பட்டது. 1958 ஆம் ஆண்டு அன்றைய அரசு கோயிலைப் புனரமைப்பு செய்தது.

1919 இல் நயினாதீவுப் பள்ளிவாசல் கட்டப்பட்டது. 1890 இல் புரட்டஸ் தாந்து மத ஆலயம், வீடு என்பன கட்டப்பட்டன. சர்வமத சந்நிதியாக மிளிருகிறது.

9

# சர்வமத சந்நிதி, நயினைப் பதியின் சிறப்பு

அழியாத கன்னிகையாக விளங்குபவள் நாகபூஷணித் தாய். வித்தின்றி விளை மூலமாகவும் திகழ்பவள். அழகுக்கொருவரும் ஒவ்வாத வல்லியென மிளிர்பவள். அலைகடலாணையைத் தன்னகத்தே கொண்டு ஐந்தலை நாகத்துள் பஞ்சபூத அடக்கத்தினை இயைவித்து நிற்பவள். அருளைச் சுரந்தளித்து மருளைக்களைபவள். வன்னெஞ்சப் பேதையரை வைது அநுக்கிரகம் செய்யும் ஆற்றல் பெற்று விளங்குபவள் தர்மபத்தினி.

**கலாசார சீரழிப்பு**

3-3-1986 இல் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கேற்பட்ட அக்கினி அனர்த்தம் 1958 ஆம் ஆண்டுக்குப் பின் 28 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு - நிகழந்த கோர அழிவெனலாம்.

இறைவிக்குரிய சொத்துக்கள் பொதுமக்களுக்குரிய சொத்துக்களேயாகும். தேர்தல்களும் மஞ்சமும் சகடையும், பிரதான வாயிற் கதவும் எரிக்கப்பட்ட சம்பவம் கலாசாரச் சீரழிப்பினதும், பண்பாட்டழிப்பினதும், தமிழின ஒழிப் பினதும் முன்னோடி நடவடிக்கையென்றே கருத வேண்டும்.

இறைவனும், இறைவியும் சிவ ஐக்கியமான பீடமே நயினை என்பது அறிஞர் கருத்து. மூலஸ்தானத்திலிருக்கும் அடிப்பாகம் வளர்ந்து செல்வ தாகவும், அதன் வால் முனைப்பில் லிங்கப்பிரதிஷ்டை விளங்குவதாகவும், சமய நம்பிக்கை கொண்ட ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

'வெட்ட வெட்டத் துளிர்விடும் மரம் போல' அம்பிகையும் அனர்த்தத்தின் ஆனந்த சொரூபியா வளர்ந்து பொலிவு பெற்று விளங்குவாள் என்பது அனுபவ உண்மை. தொண்டர்களது புனிதமான பணியும், பரம்பரை பரம் பரையாக அம்பிகையின் திருவடிகளுக்குத் தொண்டு புரியும் அநுபூதிநெறி கைவரப் பெற்ற தரும பரிபாலன சபையாரின் ஆன்மீகத் தொண்டும் அம்பி கையின் உயர் தனிச் சிறப்பினை உலகுக்குணர்த்துவன.

காலத்தாலும், தல விஷேடச் சிறப்பாலும் பெருமை பெற்றுத் திகழும் இத்தலத்தின் மெய்க்கீர்த்தியைச் சீரழித்துவிட முயல்பவர்கள் பாழ் நகரக் குழிக்குள் வீழ்ந்து பதைப்புறுவர்.

## பூர்விக ஆலயம்

நயினை ஸ்ரீ நாகபூஷணிக்கான ஆலயத்தினை 1788 இல் இராமலிங்கம் இராமச்சந்திரன் கட்டினார். அவர் வழிவரும் ஆண் சந்ததியினர் இன்றும் பரம்பரை முகாமையாளர்களாகவுள்ளனர். 1935 இல் கிழக்கு வாயிற் பிரதான கோபுரம் கட்டப்பட்டது. 1951 இல் விமானம் புனரமைத்து சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேகம் நிகழப் பெற்றது. அம்பாளுக்கான புதிய சித்திரைத் தேர் 8-7-1957 இல் வெள்ளோட்டம் விடப்பட்டது.

## நம்பகமான சான்றுகள்

வணிக வரலாறும், சமய வரலாறும் இணைந்த தலமாக நயினை விளங்கிய தென்பதற்கு அழியாத சான்றுச் சின்னமாகவும், ஆதாரமாகவும் 12 ஆம் நூற்றாண்டுக் கால பொலநறுவைக் காலச் சாசனம் இங்குள்ளது.

கோவிலுக்கு அருகே வடக்குக் கடலில் இன்றும் வெளிப்படையாகக் காணப்படும் கருடன் கல், பாம்பு சுற்றிக் கல் இரண்டும் இத்தலத்தின் பூர்விகக் கதைகளினதும், கர்ண பரம்பரைச் செய்திகளினதும் உண்மையினை எடுத்து விளக்கி, பக்தியுணர்வையுண்டு பண்ணுவனவாயுள்ளன.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் தலவிருட்ஷம் வன்னி மரம்.

அம்பாளின் தேரிலே - அதன் சிற்பங்களினூடே ஆலய வரலாற்றுச் சம்பவங்கள் அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

நாகம் பூசித்து நின்ற இத்தலம் நாகேஸ்வரம் எனவும் பெயர் பெறும்.

'மணிபல்லவம்' என்ற பெயர் இத்தலத்திற்கு இதிகாச, காவிய இலக்கியச் சிறப்பால் ஏற்படுவது. கலைக்களஞ்சியம் தொகுதி 8 இல் 'மணிபல்லவம்' என்ற பெயருக்கு அரியதொரு விளக்கமுண்டு. கி.பி. 2 ஆம் நூற்றாண் டளவில் இத்தலத்திற்குண்டான பெயர் 'மணிபல்லவம்' என்பது.

நயினையில் சக்திபீடம் (ஸ்ரீ புவனேஸ்வரி பீடம்) நிறுவியவன் 'இந்திரனே' என்பது மணிமேகலையால் உரைக்கப்படுகிறது.

அதன் பின்னர் தான் புத்தபகவான் நயினாதீவுக்கு வந்தார் எனப்படுகிறது. புத்தபெருமான் கி.மு. 563 இற்கும் கி.மு. 483 இற்குமிடையில் தமது யாத்திரை காரணமாக நாகதீவைத் தரிசித்து நாகவழிபாடியற்றியிருக்க வேண்டும். (நாகதீவு எது என்பது பற்றிய மயக்கம் இன்றும் வரலாற்றாசிரியர் களிடையே உண்டு).

சாவக நாட்டு மன்னன் புத்தபெருமானது பாதபீடிகையைத் தரிசிக்க வந்ததாக மணிமேகலை கூறும். பர்மாவிலிருந்து தர்மசோக மகாராசா புத்திர சோகத்தால் வருந்தி நாகதீவுக்கு வந்தார் எனப்படுகிறது.

பாண்டவருள் ஒருவரரான அர்ச்சுனன் நாக கன்னிகையை மணம் செய்து 'பப்பிரவாகனை'ப் பெற்றான். 'பப்பிரவாகன் சல்லி' என்ற காணிப்பெயர் இதனை உறுதிப்படுத்துகிறது. இன்றுள்ள ஆலயம் அமைந்துள்ள காணிப் பெயர் இதனை உறுதிப்படுத்துகின்றது. இன்றுள்ள ஆலயம் அமைந்துள்ள காணிப்பெயர் 'பப்பிரவாகன் சல்லி' ஆகும்.

புத்தபிரான், சரித்திர காலந்தொட்டேற்பட்ட நாக வழிபாட்டை ஆராய் வதற்காகவும், அதைத் தாமும் வழிபடுவதற்காகவுமே நாகதீவுக்கு வந்தார் எனவும் கருதுவோருளர்.

**சகிப்புத் தன்மையும் பிற மதாலயங்களும்**

போர்த்துக்கேயர் கோயிலை இடித்து, பொருட்களைச் சூறையாடினர். இக்காலம் கி.பி. 1620 - கி.பி. 1624 இற்கும் இடைப்பட்ட காலமாகலாம்.

ஒல்லாந்தர் காலத்தில் கோயிலுக்கு நிகழவிருந்த அழிபாடுகள் தடுக்கப் பட்டன. ஒல்லாந்தர்களது சமயத்திற்கு வழங்கிய ஆதரவால் கி.பி. 1792 காலகட்டத்தில் நாகபூஷணி அம்பாள் ஆலயம் தப்பியது.

ஒல்லாந்தர் காலத்தில் நயினையில் புரட்டஸ்தாந்து மதாலயம், பள்ளி வாசல்கள் அமைக்கப்பட்டன. சைவ மதம் காட்டும் சகிப்புத் தன்மையினால் நயினாதீவிலே பிறமதத்தினர் ஆலயங்கள் அமைக்க இடம் ஏற்பட்டது. இதனை இன்று சிலர் நயினை மக்களின் பலவீனம் என்று கூற முற்படுவது பொருந்தாக் கூற்றாகும்.

எத்தனை இடுக்கண் விழையினும், அவற்றினால் பாதிப்புற்று, நலிவுற்று நின்று பின் அதினின்றும் மீண்டனரேயன்றி, நயினை மக்கள் நலிவுகளினால் மனம் மாறியோ, மதம் மாறியோ கொண்ட கொள்கையினின்றும் விலகியோ பிறழ்ந்தோ நடந்து கொண்ட கோடரிக் காம்புகளல்ல.

இதனாலேயே அன்னை நாகபூஷணி என்றும் உயிர்ப்புள்ள தெய்வ மாயுள்ளாள். அவள் பெட்டிப் பாம்பாகியுள்ளாளா? என்று வினாவுவோருக்கு அவளின் சீற்றத்தைப் புரியும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

## புத்த கோயில்

நயினையில் புத்தர் சமாதிக் கோயில் 1930 - 40 காலகட்டத்தில் ஏற்பட்டது. 1947 இல் விகாரை கட்டப்பட்டது. 1954 இல் புத்த விக்கிரகம் பர்மாவிலிருந்து கொண்டு வரப்பட்டது. 1958 ஆம் ஆண்டு அன்றைய அரசு புத்த கோயிலைப் புனரமைப்புச் செய்தது.

## தேவாலயம்

1919 இல் நயினாதீவில் பள்ளிவாசல் கட்டப்பட்டது. 1890 இல் புரட்டஸ் தாந்து மத தேவாலயம், வீடு என்பன கட்டப்பட்டன. 'சர்வமத சந்நிதி'யாக மிளிருகிறது நயினை.

*(நன்றி : சஞ்சீவி வார இதழ், **14.06.1986**)*

# 10

# 'Let us pray to Naga Pooshani Ambal'

## Annual Mahotsavam of Nainativu Naga Pooshani ambal Temple

**G. Arulananthan**

The annual mahotsavam of Nainativu Sri Naga Pooshani Ambal Temple commenced on 2011 July 1. In fact, Nainativu is referred to as Nagatheevu or Nagadeepa is a small island of tour square railes, off the Jaffna peninsula, It had enjoyed a foremost place is Sri Lank's History, having been the seat of the Naga Kingdom. Having several names like Nagathivu, Nainathivu, Nagatheepam, Manitivu, Manapallavam, the location had been foremost in religious worship. It is said that Bharatha Prince Arjuna married princess Sithirangai, daughter of Siniravakanan, the Naga King of Manipallavam. Naga kings are also said to have been dwelling in ancient Kanatharodai, Nagarkovil, Matoddam and Kelaniya. Some of the ancient stories may also be read in the 'Manimekalai', and old time Tamil composition.

Tradition strongly associates the island as having been visited by Kannakai and Manimekalai, sometime in their illustrious lives, thus associating veneration of Goddess Ambal.

Stories of early temples at this venerable Naga Sthalam commences with the miracle observed by two traders Manayakan and Mahasathavan.They witnessed to their amazement of Naga Serpent swimming in the sea towards this isle with a flower and what is more a vulture, was poised overhead. When the vulture was chased away, the serpent continued its journey for veneration of the divine at Nageswaram.

Two stories in the sea are pointed out, even today, as being the stories behind, which the snake sheltered and the one where the vulture perched. Two traders founded a temple here and dedicated it to Goddess Ambal, It was later rebuilt as a grand temple by one Veerasami Chettiar, housed with Ambal and Sivan deities, But, this Edifice was demolished by the Poutuguese along with other Hindu temples in 1620. The Ambal Vigrakam, it is said, wad however saved from the demolishers and kept hiddr in the trunk of a tree and venerated unostentatiously.

But, in the eras of the revival of Hinduism, spearheaded by Sri La Sri Arumuganavalar, a proper Agamaic temple wad erected in 1882 and the Ambal Devi Vigrakam was installed with the name of 'Naga Poshani Amman Temple'. Regular poojas ensued and several improvements were effected by various devotees. A Ra-

jagopuram was erected in 1835.

The management of the affairs of the temple came under a trustee Board in 1949.

A Magnificent Chariot or Ther was constructed for Goddes Ambal in 1857.

The main entrance to the temple and the seactum face the East and the vast ocean with the landing pier. The pilgrims, even as they land in the island pay obeisance to Goddess Ambal.

The figyre of a five headed Nagaserpent is seen in the sanctum bearing the Goddess Ambal Thiry Uruvam. On the sanctum walls the figures of Goddess Durga and Saptamatha are seen.

One can see even the shrines of God Ganesha and God Muruga, Bhairavar, sun and the moon in their traditional locations.

In fact, the annual festival which lasts for fifteen days is a grand one when thousands throng this little islet to receive 'naga Pooshani Ambal's Divine Blessings.

In this temple all the Hindu Saiva festivals are observed throughout the year and daily poojas are performed four times. In fact, no story of nainativu is complete without the mention of its outstanding saintly personality 'Nainativu Swamiyar'. Borm as 'Muthukumaraswamy' he became a great Gnani and attained higher realms of saintiness, before his death in 1949. His Samadhi is a place of veneration in Nainativu even today.

During the festival period Dr, Kanagasabapathy Nageswaran, a well known educationist and a great Tamil scholar who is attached to the university of Sabaragamuva as senior kecturer used to conduct religious discourses pertaining to Nagapooshani Ambal, In appreciation and recognition of his marvelous religious discourses he has been conferred with several awards and tutles like 'Arulmoli Chelvar', Chencholvanar', 'Navarasa Kalai Gnani', 'Manimolivari; ;Vakeesha Kalanithy', 'Innisiai Cholventhan'. 'Thirumurai Kalanithi' etc.

Indeed, Nagapooshani Ambal is a miraculous Goddess and let us pray to her and receive her Divine Blessings for everlasting peace and eternal prosperity.

(Daily news - 08.09.2011)

# பின்னிணைப்பு

## நாகபூஷணி எம் உயிர் துணையே

நாதாந்த சக்தியாகவும் குண்டலினி இயக்கமாகவும் இலங்குபவள் நயினை நாகபூசணி. சக்திக்குரிய பேரியல்புகளோடும் ஆத்மிகத்தின் தூய இயல் போடும் மூலஸ்தானத்திலே ஐந்தலை நாகத்தின் பின்னணியிலேயே வீற் றிருக்கும் திருவருட் பொலிவிலே தம்மை வசமிழக்காதோர் இலர். வாழ்க்கை என்பது திருவருளினாலேயே மேம்பாடும் சிறப்பும் பெறவல்லது. சீரும் சிறப்பும் பொருந்திய வாழ்வை அளிக்க வல்ல தெய்வீக மாண்பு அன்னை ஸ்ரீ நாகபூஷணிக்கு உண்டு. பிறவிகளின் விகற்பங்களையெல்லாம் தனது இயக்க சக்தியின் மூலம் வெளியுலகுக்கு வெளிப்படுத்தி மனித மனங்களைத் தன்னடிக்கீர்த்துத் திருவருள் பெருக்கும் வல்லமையாக மிளிருகின்றாள். நயினை ஸ்ரீ நாகபூஷணி. பிரபஞ்சத்தின் இயக்கமே பாம்பினது தலையிலேயே நிகழுவதாகக் கருதும் இந்து தத்துவத்தின் விஞ்ஞான நிலைப்பட்ட கருத்தினை ஊனக் கண்களினால் மனிதர்கள் கண்டுணரும் வகையிலே இயக்க பூர்வமான காட்சியினையும் நிகழ்வுகளையும் நடத்திக் காட்டும் நாயகியாக நாகபர மேஸ்வரி விளங்குகின்றாள் என்பது அவளது பெருமையின் அம்சமல்லவா!

இன்று நடைபெறும் நயினை நாகபூஷணி அம்பாளின் கும்பாபிஷேகச் செய்தி ஈழம் வாழ் இந்துப் பெருமக்களுக்கு மட்டுமல்லாது; அகில உலகிலும் செறிந்து வாழும் தமிழ்ப் பேசும் மக்களுக்கெல்லாம் மனமகிழ்ச்சியளிப்ப தொன்றாகும். வேற்றுமைகளை நீக்கி ஒற்றுமை காணவும் (பேதமில்லா வாழ்வு) நெஞ்சத்துயரகற்றி நிம்மதி தரவும் மனக்கவலை மாற்றி ஆனந்த வாழ்வழிக்கவும் வகை செய்யும் வழிபாட்டினை நாமெல்லோரும் இன்று இயற்றுவோம். போற்றித்துதி செய்து புவனேஸ்வரித் தாயை ஏத்தி இறைஞ்சி இரங்கிட வைத்திடுவோம்.

**கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M.A., Ph.D.**



கணபதியை உமாபதியைக் கைகூப்பித் தொழுதாலும்
மணமலர் போல் நிறைய மகிழ்ந்து குல தெய்வமாம்
குணமகளாம் நயினையூர்க் குலநாக பூஷணியை(க்)
கணமேனும் மறவாக்கனக நாகேஸ்வரன் வாழ்க

கருவிலே திருவுடைய கனகசபா பதிபெற்ற
பெருமகனாய் பூஷணியின் பேரருளால் கற்றோங்கி
மருவியொரு பட்டதாரி மணியாகி எம் ஏயும்
திருவருளால் பெற்றவனே சிறந்தென்றும் நீ வாழ்க

சங்கநூல் பின்வந்த சார்ந்த விலக்கிய நூல்கள்
தங்கமாய்க் கற்றுணர்ந்த தன்மையால் எதிர்காலம்
சிங்கமென அவை முன்னே சென்று சொன் மழை பொழிய
பங்கயத்தின் வாணியுனைப் பாராட்டுவாள் உண்மை

அத்திவாரத்தில் கல்வி ஆசறவே கற்றதனால்
சித்தியாயிவ்வுலகில் சீர்பெரிய புலவனுமாய்
பத்தியாய்ச் சமயத்தில் பகருஞ் சித்தாந் தத்திலுமே
புத்தியாம் பெற்றவுனை புகழ்மிக்க வாழ்த்துவனே

காத்திரமாய் இலக்கியங்கள் கனத்தபல கட்டுரைகள்
தோத்திரநூல் பற்பலவை தூயவர்கள் போற்றும்படி
நேத்திரம் போல் வெளியிட்டனை வித்துவானே நயினை யூர்ப்
பாத்திரமாய் ஈழமெங்கும் பாராட்ட வாழுதியால்

நவகோள்கள் வரிசையிலே நாயகனாம் வியாழனுக்கு
புவனமெல்லாம் போற்றுகின்ற பொன்னான பேரதுதான்
தவமான வாசீகத் தனிப்பெயர் அவ் விருதினை நீ
உவமையாய் குருவெனவே பெற்றுவிட்டாய் உயர்ந்தாயே

*(பெரும்புலவர், கலாபூஷணம் வை.க. சிற்றம்பலம், இணுவில்)*

ISBN 978-955-4745-03-2

விலை ரூபா 400.00